# நியதிகள் மற்றும் நிபந்தனைகள (Terms and Conditions)

## வாடிக்கையாளர் திருப்தி மற்றும் பின்னூட்டல் (Customer Satisfaction and Feedback)

நாம் வழங்கும் சேவைகள் குறித்து உங்களுக்குப் பூரண திருப்தி இல்லையெனின் அல்லது அச் சேவைகள் உங்கள் தேவையை ஈடுசெய்யவில்லையெனின், தயவுசெய்து இயன்றளவு விரைவாக பின்வரும் ஒரு வழியில் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்:

- + 94 114 511 566 என்ற வாடிக்கையாளர் தீர்வுகள் உடனடித் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக
- customersolutions@hsbc.com.lk என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாக
- தபால் முகவரி: வாடிக்கையாளர் சேவை முகாமையாளர், HSBC நிலையம், 24, சேர் பரன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு 01.

நீங்கள் முன்வைக்கும் பிரச்சினைகளை உங்களுக்குத் திருப்தியளிக்கும் விதத்தில் தீர்த்துவைக்கவே நாம் எப்போதும் விரும்புகிறோம். எனினும், நீங்கள் நிதித்துறை ஆலாட்சி அதிகாரியின் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு உங்கள் பிரச்சினைக்கு நிவாரணம் கோரலாம். ஆலாட்சி அதிகாரியின் தொடர்பு விபரங்கள் பின்வருமாறு:

- நிதித்துறை ஆலாட்சி அதிகாரியின் அலுவலகம் - இலங்கை, 143ஏ, வஜிரா வீதி, கொழும்பு 05.
- தொலைபேசி: +94 112 595 625
- தொலைநகல்: +94 112 595 624
- மின்னஞ்சல்: info@financialombudsman.lk
- இணையத்தளம்: www.financialombudsman.lk

மேலதிக விபரங்களுக்கு www.hsbc.lk என்ற எமது இணையத்தளத்தை நாடவும்.

இந்த ஆவணத்தின் ஆங்கில மற்றும் சிங்கள மொழிபெயர்ப்பு உங்களுக்குத் தேவைப்படின், தயவுசெய்து www.hsbcpremier.lk என்ற எமது இணையத்தளத்தை நாடவும். அல்லது எமது கிளை ஒன்றில் கேட்டுப் பெறவும்.

வரைவிலக்கணங்கள் (Definitions)
முகவுரை (Introduction)
பிரவேசத் தகுதிகள் (Entry requirement)
ஆணைப்பத்திரம் (Mandate)
வைப்புக்கள் (Deposits)
சிறுவர் சேமிப்புக் கணக்கு (Children's Savings Account)
மீளப்பெறுதல்கள் (Withdrawals)
காசோலைகள் (Cheques)
வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (Foreign Currency Accounts)
HSBC Premier பற்று மற்றும் கடன் அட்டைகள் (HSBC Premier Debit and Credit Cards)
தன்னியக்க தொலைபேசி வங்கிச் சேவை (ATB) (Automated Phonebanking Service - ATB)
HSBC Premier SMS உசார்படுத்தல்கள் (SMS Alerts)
வட்டி (Interest)
வரிகள் (Taxes)
HSBC Premier உலகளாவிய சேவைகள் (HSBC Premier Global Services)
கூட்டு விபரக்கூற்றுக்கள் (Composite Statements)
தொலைபேசிச் சேவைகள் மற்றும் இழப்பெதிர்காப்பு (Phone Services and Indemnity)
வங்கியின் பாத்திய மற்றும் எதிரீட்டு உரிமை (Bank's Right of Lien and Set off)
நியதிச்சட்ட பிரகடனம்/பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டுப் பிரமாணங்கள் (Statutory Declaration / Exchange Control Regulations)
வெளிநாட்டு HSBC Premier சேவைகள் (Overseas HSBC Premier Services)
பொது (General)
கூட்டுக் கணக்கு (Joint Account)
வாடிக்கையாளர் தகவல்களின் சேகரிப்பு, செயற்படுத்தல், பகிர்ந்துகொள்ளல் (Collection, Processing and Sharing of Customer Information)
வாடிக்கையாளரின் கடப்பாடுகள் (Customer Obligations)
தரவுகளின் பாதுகாப்பு (Data Protection)
வரி இணக்கப்பாடு (Tax Compliance)
ஏனைய ஏற்பாடுகள் (Other Provisions)
முடிவுறுத்தலின் பின்பும் நிலைத்திருக்கும் தன்மை (Survival Upon Termination)
திட்டத்தின் முடிவுறுத்தல் (Termination of Package)
அறவீடுகள் (Charges)
ஆளுகைச் சட்டம் (Governing Law)

## நியதிகள் மற்றும் நிபந்தனைகள் (Terms and Conditions)

த ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டட் என்பது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் உரிமம் பெற்ற ஒரு வணிக வங்கியாகும்.

HSBC Premier கணக்கு வைப்பாளர்(கள்) (சந்தர்ப்பத்திற்கும் தேவைக்கும் ஏற்ப 'HSBC Premier கணக்கு வைப்பாளர்(கள்)', 'நீங்கள்', 'உங்கள்', 'உங்களது', 'வாடிக்கையாளர்(கள்)' என்றும் குறிப்பிடப்படும் இச் சொற்பிரயோகம் அட்டை வைப்பாளரின் (வைப்பாளர்களின்) வாரிசுகள், நிர்வாகிகள், நிறைவேற்றுநர்கள் மற்றும் சட்டபூர்வமான பிரதிநிதியையும் உள்ளடக்கும்) வங்கி அலுவல்கள், முதலீடு, நிதி மற்றும் ஏனைய கொடுக்கல் வாங்கல்கள், பல்வேறு தன்மையான வர்த்தக அலுவல்கள் என்பவற்றை மேற்கொள்ளும் நோக்கத்திற்காகவும் HSBC மற்றும்/அல்லது HSBC குழும அங்கத்தவர்களிடமிருந்து சேவைகள், வசதிகள், தகவல்கள், பண்டங்கள், அனுகூலங்கள் மற்றும் சலுகைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காகவும் HSBCக்கு அறிவுறுத்தல்களை வழங்குவதற்கும் அதனுடன் தொடர்பாடல் செய்வதற்கும் இடமளிக்கும் வகையில், த ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டட் (சந்தர்ப்பத்திற்கும் தேவைக்கும் ஏற்ப இனிமேல் 'HSBC', 'வங்கி', 'நாம்', 'எமது' என்றும் குறிப்பிடப்படும் இச் சொற்பிரயோகம் அதன் அடுத்துறுனர்கள் மற்றும் சாட்டுனர்களையும் உள்ளடக்கும்) இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக, காலத்திற்குக் காலம் வங்கிச் சேவைகள், வசதிகள் மற்றும் தகவல்களை வழங்கும்.

HSBC Premier அட்டை வைப்பாளர்(கள்) பயன்படுத்தும் அல்லது எம்மிடம் கோரும் அல்லது நாம் அவருக்கு/அவர்களுக்கு வழங்கும் வங்கிச் சேவைகள், வசதிகள் மற்றும் தகவல்கள் தொடர்பாக அட்டை வைப்பாளரின் (வைப்பாளர்களின்) பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் இந்த விதிகளில் (இனிமேல் குறித்துரைக்கப்படும்) விபரிக்கப்பட்டுள்ளன.

மேலே "HSBC" எனவும் "HSBC Premier கணக்கு வைப்பாளர்(கள்)" எனவும் குறிப்பிடப்பட்டுள்ள சொற்பிரயோகங்கள் சில சமயங்களில் இந்த ஒப்பந்தத்தின் "தரப்புக்கள்" என்று கூட்டாகவும் "தரப்பு" என்று தனித்தனியாகவும் பயன்படுத்தப்படலாம்.

**வரைவிலக்கணங்கள் (DEFINITIONS)**

இந்த விதிகளில் பயன்படுத்தப்பட்டுள்ள சிறப்புப் பதங்கள், சந்தா்ப்பத்தினால் வேறு விதமாக தேவைப்படுத்தப்படாவிடின், பின்வரும் அா்த்தங்களைக் கொண்டிருக்கும்.

**"ஒப்பந்தம்"** என்பது இனிமேல் குறிப்பிடப்படவிருக்கும் மற்றும் இந்த ஒப்பந்தத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய, காலத்திற்குக் காலம் மாற்றம் செய்யப்படக்கூடிய விதிகள், இந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக சேவைகளின் வழங்கல்கள் தொடா்பில் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் ஏதேனும் மேலதிக விதிகள் ஆகிய அணைத்தையும் குறிக்கும்.

**"கணக்கு வைப்பாளா்(கள்)"** ('நீங்கள்', 'உங்கள்', 'உங்களது', 'வாடிக்கையாளர்'(கள்), "HSBC Premier அட்டை வைப்பாளா்(கள்)" என்றும் குறிப்பிடப்படும்) என்பது HSBCஇல் ஆரம்பிக்கப்பட்டுப் பேணப்படும் முதலாவது கணக்கின் விண்ணப்பப் படிவத்தில் பெயரிடப்பட்டுள்ள கணக்கு வைப்பாளரை (வைப்பாளா்களை) குறிக்கும். "கணக்கு வைப்பாளா்" என்பது தனியாகவோ கூட்டாகவோ வங்கியில் கணக்கை வைத்திருக்கும் நபரை (நபா்களை) குறிக்கும். கூட்டுக் கணக்கு வைப்பாளா்(கள்) இங்கு கூட்டாக கணக்கு வைப்பாளா்(கள்)என்று குறிப்பிடப்படுவாா்கள்

**"கணக்குகள்"** என்பது பற்று அட்டையின் செயற்பாட்டிற்குச் செல்லுபடியானவை என்று வங்கியினால் குறித்துரைக்கப்பட்டு, தனிநபா்கள் வைத்திருக்கும் சேமிப்பு அல்லது நடைமுறைக் கணக்குகளைக் குறிக்கும்.

**"ATM"** என்பது தன்னியக்க டெலா் இயந்திரங்களைக் குறிக்கும். இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் தன்னியக்க டெலா் இயந்திரங்கள் பற்றி குறிப்பிடப்படும்போது, அட்டையின் பாவனை மூலம் செயற்படுத்தப்படும் வலையமைப்பின் ஒரு பகுதியாக (அட்டை வழங்கப்பட்ட நாட்டில் அல்லது அதற்கு வெளியே) பயன்படுத்தப்படும் அது போன்ற வேறு இயந்திரங்களும் "ATM" என்ற பதத்தில் உள்ளடங்கும்.

**"அதிகார அமைப்புக்கள்"** என்பது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு பகுதியின் மீது நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கும் ஏதேனும் நீதித்துறை, நிா்வாக அல்லது ஒழுங்குபடுத்தல் அமைப்பு, ஏதேனும் அரசாங்கம் அல்லது அரசாங்க முகவரகம், கருவியகம் அல்லது அதிகார சபை, ஏதேனும் வரி அதிகார சபை, பிணையங்கள்

பரிவர்த்தனை, நீதிமன்றம், மத்திய வங்கி அல்லது சட்ட அமுலாக்க அமைப்பு அல்லது அவற்றின் ஏதேனுமொரு முகவரகத்தைக் குறிக்கும்.

**"வங்கிச் சேவை நாள்"/"வழமையான வங்கிச் சேவை நேரம்"** மற்றும் **"வேலை நாள்/நேரம்"** என்பன, எம்மால் வேறு விதமாகக் குறித்துரைக்கப்படாவிடின், ஒரு வங்கிச் சேவை/வேலை நாள் மற்றும் வழமையான வங்கிச் சேவை/வேலை நேரத்தைக் குறிக்கும்.

**"அட்டை வைத்திருப்பவர்"** என்பது வங்கியிலுள்ள கணக்கின் பேரில் வங்கியினால் பற்று அட்டை மற்றும்/அல்லது வேறு அட்டை(கள்) வழங்கப்பட்ட நபரைக் குறிக்கும். அட்டை வைத்திருப்பவர் ஒரு தனிக் கணக்கு வைப்பாளராக இருக்க வேண்டும் அல்லது கூட்டுக் கணக்கு வைப்பாளராயின் தனிக் கையொப்பதாரராக அல்லது தனியே செயற்பட அதிகாரம் பெற்றவராக இருக்க வேண்டும்.

**"இணக்கக் கடப்பாடுகள்"** என்பது பின்வருவனவற்றிற்குப் பணிந்தொழுக HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவர் கொண்டுள்ள கடப்பாடுகளைக் குறிக்கும்:

(a) பொருத்தமான ஏதேனும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நியதி, சட்டம், பிரமாணம், கட்டளைச்சட்டம், விதி, தீர்ப்பு, ஆணை, தன்னார்வக் குறிப்புரை, பணிப்புரை, தடையுத்தரவு, நீதிமன்றக் கட்டளை, HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவருக்கும் அதிகார சபை ஒன்றிற்கும் இடையிலான ஒப்பந்தம், HSBCக்கு அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவருக்குப் பிரயோகிக்கக்கூடிய விதத்தில் அதிகார சபைகளுக்கு இடையே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை (''சட்டங்கள்''), அல்லது சர்வதேச வழகாட்டுதல்கள் மற்றும் உள்நாட்டுக் கொள்கைகள் அல்லது நடைமுறைகள்.

(b) அதிகார சபைகளினால் கோரப்படும் ஏதேனும் (நியாயமான) அறிக்கையிடல், ஒழுங்குபடுத்தல் வர்த்தக அறிக்கையிடல், வெளிப்படுத்தல் கோரிக்கைகள் மற்றும் சட்டப்படியான ஏனைய கடப்பாடுகள்.

(c) வாடிக்கையாளர்களின் அடையாளத்தை உறுதிசெய்வதற்கு HSBCஐ தேவைப்படுத்தும் சட்டங்கள்.

**"இரகசியத் தகவல்கள்"** என்பது வாடிக்கையாளர் தகவலை வெளியிடும்போது இரகசியமானது என்று குறிப்பிடும் தகவல்களை அல்லது நியாயமான ஒருவரினால் இரகசியமானது, பகிரங்கமற்றது மற்றும் தனிப்பட்ட தன்மையுடையது என்று கருதப்படும் தகவல்களைக் குறிக்கும்.

**“இணைக்கப்பட்ட நபர்”** என்பது சேவைகளின் வழங்கல் தொடர்பாக HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவருக்கு வாடிக்கையாளரினால் வழங்கப்படும் அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவரினால் வேறு வழியில் பெற்றுக்கொள்ளப்படும் தகவல்களுக்குரிய (இதில் தனிப்பட்ட விபரங்கள் அல்லது வரித் தகவல்களும் உள்ளடங்கும்) ஒரு நபரை அல்லது நிறுவனத்தைக் குறிக்கும். வாடிக்கையாளரைப் பொறுத்தவரையில், இணைக்கப்பட்ட நபர் என்பது எவரேனுமொரு பிணையாளி (வாடிக்கையாளரின்), கம்பனியொன்றின் பணிப்பாளர் அல்லது அதிகாரி, பங்காளித்துவத்தின் பங்காளிகள் அல்லது உறுப்பினர்கள், ‘‘கணிசமான உரிமையாளர்’’, ‘‘கட்டுப்படுத்தும் நபர்’’, அல்லது பயனடையும் உரிமையாளர், அறக்காவலர், நம்பிக்கைப் பொறுப்பொன்றின் தீர்ப்பனவாளர் அல்லது பாதுகாவலர், குறித்துரைக்கப்பட்ட கணக்கொன்றை வைத்திருப்பவர், குறித்துரைக்கப்பட்ட கொடுப்பனவொன்றைச் செலுத்துபவர், வாடிக்கையாளரின் பிரதிநிதி, முகவர் அல்லது நியமத்தர், அல்லது வாடிக்கையாளர் HSBC குழுமத்துடன் கொண்டிருக்கும் வங்கி உறவுகள் தொடர்பாக வாடிக்கையாளருடன் தொடர்புகளை வைத்திருக்கும் வேறு நபர்கள் அல்லது நிறுவனங்களையும் உள்ளடக்கலாம்.

**“கட்டுப்படுத்தும் நபர்கள்”** என்பது (பொதுவாக) ஒரு நிறுவனத்தின் மீது கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கும் நபர்களைக் குறிக்கும் (நம்பிக்கைப் பொறுப்பகம் ஒன்றைப் பொறுத்தவரையில் அதன் தீர்ப்பனவாளர், நம்பிக்கைப் பொறுப்பாளர், பாதுகாவலர், பயனடைபவர் அல்லது பயனடையும் பிரிவினர் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பகத்தின் மீது தீர்க்கமான இறுதிக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கும் வேறேதும் நபர்கள் இதில் உள்ளடங்குவர். நம்பிக்கைப் பொறுப்பகம் அல்லாத ஒரு சட்டபூர்வ நிறுவனமாயின், சமமான அல்லது ஒத்தியல்பான கட்டுப்பாட்டு நிலையில் உள்ளவர்களை இச் சொற்றொடர் குறிக்கும்).

**“வாடிக்கையாளர் தகவல்”** என்பது வாடிக்கையாளரின் அல்லது இணைக்கப்பட்ட நபரின் தனிப்பட்ட விபரங்கள், இரகசியத் தகவல்கள் மற்றும்/அல்லது வரித் தகவல்களைக் குறிக்கும் (இணைக்கப்பட்ட அறிக்கைகள், விலக்களிப்புக்கள் மற்றும் ஒப்புதல்களும் இதில் உள்ளடங்கும்).

**“பற்று அட்டை/அட்டை(கள்)”** என்பது அட்டை வைத்திருப்பவர் ஒருவருக்கு HSBC இனால் வழங்கப்பட்ட, பொருத்தத்திற்கேற்ப, உள்நாட்டில் அல்லது சர்வதேச ரீதியில் செல்லுபடியாகும் பற்று அட்டை மற்றும்/அல்லது கடன் அட்டையை மற்றும்/அல்லது ATM அட்டையை (அட்டைகளை) குறிக்கும்.

**"ESPM/s"** என்பது வங்கியின் இலகு கொடுப்பனவு இயந்திரங்களை (Easy Pay Machines) குறிக்கும்.

**"சிறப்பம்சங்கள்"** என்பது படிநிலை ஒன்றின் கீழ் மற்றும்/அல்லது அது தொடர்பில் கணக்கு வைத்திருக்கும் ஒருவர் பெறக்கூடிய சேவைகள், சன்மானங்கள், அனுகூலங்கள் சலுகைகள் போன்றவற்றைக் குறிக்கும்.

**"நிதிசார் குற்றம்"** என்பது பணம் தூயதாக்கல், பயங்கரவாதத்திற்கு நிதி வழங்குதல், இலஞ்சம், ஊழல், வரி ஏய்ப்பு, மோசடி, பொருளாதார அல்லது வர்த்தகத் தடைகளை மீறுதல் மற்றும்/அல்லது இந்த விடயங்கள் தொடர்பான சட்டங்களை மீறுதல் அல்லது மீறுவதற்குத் தந்திரமாக முயற்சி செய்தல் என்பவற்றைக் குறிக்கும்.

"**HSBC"** ('வங்கி', 'நாம்', 'எமது') என்பது, ஹொங்கொங் SARஇலும் அதன் சட்டங்களின் கீழும் உரிய முறையில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு வங்கித் தொழில் கூட்டுத்தாபனமாகவும், ஹொங்கொங், மத்திய குவீன்ஸ் வீதியில் 1ஆம் இலக்கத்தில் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளதும், இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசில், கொழும்பு 1, சேர் பாரன் ஜயதிலக்க மாவத்தை 24ஆம் இலக்கத்திலும் வேறிடங்களிலும் உள்ள அதன் கிளை அலுவலகங்கள் ஊடாக முன்சொல்லப்பட்ட குடியரசில் தொழிலை நடத்துகின்றதுமான வரையறுக்கப்பட்ட ஹொங்கொங் அன்ட் ஷங்காய் வங்கித் தொழிற் கூட்டுத்தாபனத்தைக் குறிக்கும். "HSBC" அல்லது "வங்கி"; அத்துடன் அதன் அடுத்துறுபவர்களையும் சாட்டுதற்காரர்களையும், சந்தர்ப்பம் அனுமதிக்கும் பட்சத்தில் வங்கியினால் நியமிக்கப்பட்ட எவரேனும் நபரையும் இது உள்ளடக்கும்.

**"HSBC குழுமம்"** என்பது HSBC ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. மற்றும்/அல்லது அதன் இணை நிறுவனங்கள், உப நிறுவனங்கள், துணை நிறுவனங்கள் என்பவற்றையும் அவற்றின் ஏதேனும் கிளைகள் மற்றும் அலுவலகங்களையும் குறிக்கும். "HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவர்" என்பதும் அதே அர்த்தத்தைக் கொண்டிருக்கும்.

**"தகவல்"** என்பது கணக்கு வைப்பாளரின் (வைப்பாளர்களின்) உபயோகத்திற்காக எம்மால் அல்லது ஏதேனும் தகவல் வழங்குநரினால் வழங்கப்படும் ஏதேனும் நிதி, சந்தை அல்லது வேறேதும் தகவல்களையும் தரவுகளையும் குறிக்கும்.

**"HSBC குளோபல் வியூ"** என்பது HSBC ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. மற்றும் அதன் உலகளாவிய உப நிறுவனங்களினால் வழங்கப்படும் ஒரு சேவையைக் குறிக்கும். கணக்கு வைத்திருப்பவர் உலகிலுள்ள ஏதேனுமொரு நாட்டில் வைத்திருந்து தனிப்பட்ட இணையத்தள வங்கிச் சேவையின் ஊடாக அணுகும் HSBC கணக்குகளையும் வேறொரு நாட்டில் வைத்திருந்து தனிப்பட்ட இணையத்தள வங்கிச் சேவையின் ஊடாக அணுகும் HSBC கணக்குகளையும் தொடர்புபடுத்தி, HSBC இணையத்தள வலைத்தளத்தில் பார்வையிட அல்லது வசதியுள்ள மொபைல் சாதனத்தின் ஊடாக HSBC இணையத்தள வலைத்தளத்தை அணுகும்போது பார்வையிட மட்டும் இச் சேவை கணக்கு வைத்திருப்பவருக்கு இடமளிக்கிறது. இச் சேவை எல்லா நாடுகளிலும் கிடைக்காது. அத்துடன், எல்லா நாடுகளிலும் மொபைல் சாதனங்கள் மூலம் இச் சேவையைப் பெற முடியாது.

**"நிறுவனம்"** என்பது, இந்த ஒப்பந்தத்தின் நோக்கத்திற்கு ஒரு நிறுவனமாகக் கருதப்பட வேண்டுமென கணக்கு வைப்பாளரினால் (வைப்பாளர்களினால்) HSBCக்கு அறிவிக்கப்பட்ட ஏதேனும் மூன்றாம் தரப்பு நிதி நிறுவனத்தைக் குறிக்கும்.

**"அறிவுறுத்தல்"** என்பது கணக்கு வைப்பாளரினால் (வைப்பாளர்களினால்) அனுப்பப்பட்டு HSBCக்கு கிடைக்கப்பெறும் முறைப்படி அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் எழுத்து மூல வேண்டுகோளை அல்லது அறிவுறுத்தலைக் குறிக்கும்.

**"சர்வதேசக் கொடுக்கல் வாங்கல்கள்"** என்பது இலங்கைக்கு வெளியே வங்கியினூடாக கார்ட் வைத்திருப்பவர் மேற்கொள்ளும் சகல கொடுக்கல் வாங்கல்களையும் குறிக்கும்.

**"இழப்பு"** என்பது ஏதேனும் உரிமைக் கோரல், அறவீடு, செலவு (ஏதேனும் சட்ட மற்றும் நிபுணத்துவ சேவைக்கான செலவுகளும் உள்ளடங்கும்), சேதங்கள், கடன், செலவினம், வரி, பொறுப்புக்கள், கடப்பாடுகள், குற்றச்சாட்டுக்கள், வழக்கு, நடவடிக்கை, கோரிக்கை, வழக்கு விசாரணை அல்லது தீர்ப்புக்களைக் குறிக்கும். இவை எவ்வாறு கணிக்கப்பட்டவையாகவும் நேரடியாக அல்லது நேரடியற்ற முறையில், எதிர்விளைவாக, தண்டனையாக அல்லது தற்செயலாக ஏற்பட்டவையாகவும் இருக்கலாம்.

**"வணிக நிறுவனங்கள்"** என்பது எங்கிருந்தாலும் பற்று அட்டையை ஏற்றுக்கொள்ளும் நிறுவனங்களைக் குறிக்கும். வங்கியினால் அல்லது வீசா இன்டர்நஷனலினால் விளம்பரப்படுத்தப்படும் விற்பனை நிலையங்கள், கடைகள், உணவகங்கள், விமான சேவை நிறுவனங்கள் முதலியனவும் இவற்றில் உள்ளடங்கும்.

**"கடவுச்சொல்"** என்பது அறிவுறுத்தல்களைப் பெறுவதற்கு அல்லது செயற்படுத்துவதற்கும் தொலைபேசி வங்கிச் சேவை மற்றும் தனிப்பட்ட இணையத்தன வங்கிச் சேவை ஊடாக பற்று அட்டை மற்றும்/அல்லது வேறு அட்டைகள் மூலம் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கும் பயன்படுத்தப்படும் ஏதேனும் இரகசியச் சொல், சொற்றொடர் அல்லது அல∴பா எண்களைக் கொண்ட இலக்கத்தைக் குறிக்கும்.

**"தனிப்பட்ட விபரம்"** என்பது ஒரு நபரை அடையாளம் காண்பதற்கு உதவக்கூடிய வகையில் அந்த நபர் (மற்றும் தரவு இரகசியச் சட்டம் நிறுவனங்களுக்குச் செல்லுபடியாகும் நாடுகளிலுள்ள நிறுவனங்கள்) தொடர்பான விபரங்களைக் குறிக்கும். இந்த விபரங்களுள் பெயர்(கள்), வசிப்பிட முகவரி(கள்), தொடர்பு விபரங்கள், வயது, பிறந்த திகதி, தேசிய இனம், பிரஜாவுரிமை, விவாக நிலை போன்றவையும் உள்ளடங்கும்.

**"தனிப்பட்ட இணையத்தள வங்கிச் சேவை (PIB)"** என்பது கணக்கு வைப்பாளர்(கள்) அறிவுறுத்தல்களைப் அணுகுவதற்கு அல்லது செயற்படுத்துவதற்கும் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கும் HSBCஇன் உத்தியோகபூர்வ இணைய வலைத்தளத்தின் ஊடாக வழங்கப்படும் இணையத்தள போர்டலைக் குறிக்கும்.

**"பிரதான கணக்கு"** என்பது பற்று அட்டையுடன் இணைக்கப்பட்ட பல்தொகுதிக் கணக்குகளைப் பொறுத்தவரையில், செயற்பாட்டிற்கென பிரதான/முதலாவது கணக்காக நியமிக்கப்பட்ட கணக்கைக் குறிக்கும். அதாவது, இக் கணக்கிலேயே பற்று அட்டை தொடர்பான கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள், விதிப்பனவுகள், மற்றும் கட்டணங்கள் பற்று வைக்கப்படும்.

**"சேவைகள்"** என்பது, வரையறையின்றி, (a) வாடிக்கையாளரின் வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தல், செயற்படுத்துதல் மற்றும் மூடுதல், (b) வாடிக்கையாளருக்குக் கடன் வசதிகள் மற்றும் ஏனைய வங்கி வசதிகளையும் சேவைகளையும் வழங்குதல் (பிணையங்களின் கையாளுகை, முதலீட்டு ஆலோசனை, தரகு, முகவர், பாதுகாவலர், கிளியரிங் அல்லது தொழில்நுட்பக் கொள்முதல் சேவைகளும் இதில் உள்ளடங்கும்), விண்ணப்பங்களைப் பரிசீலித்தல், துணைக் கடன் மதிப்பீடு மற்றும் வங்கி வசதிக்கான தகுதி மதிப்பீடு, (c) வாடிக்கையாளருடன் HSBC பேணும் ஒட்டுமொத்த உறவுகள் (சந்தைப்படுத்தல் அல்லது நிதிச் சேவைகளின் ஊக்குவிப்பு அல்லது வாடிக்கையாளருக்கான தொடர்புடைய வங்கி வசதிகள், சந்தை ஆய்வு, காப்புறுதி, கணக்காய்வு மற்றும் நிர்வாக நோக்கங்கள் ஆகியவற்றைக் குறிக்கும்.

**“விபரக்கூற்று”** என்பது ஏதேனும் காலப்பகுதியில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் (பற்று அட்டைக் கொடுக்கல் வாங்கல்களும் உள்ளடங்கும்) கணக்கு மீதி என்பவற்றை எடுத்துக்காட்டும் விதத்தில் காலத்திற்குக் காலம் வழங்கப்படும் கணக்கு அறிக்கையைக் குறிக்கும். HSBC பொருத்தமெனக் கருதும் வேறு தகவல்களும் இந்த அறிக்கையில் சேர்க்கப்படலாம்.

**“கணிசமான உரிமையாளர்கள்”** என்பது ஒரு நிறுவனத்தில் 10%க்கு மேற்பட்ட இலாபத்திற்கான உரிமையை அல்லது 10%க்கு மேற்பட்ட பங்கை நேரடியாக அல்லது நேரடியற்ற முறையில் கொண்டுள்ளவர்களைக் குறிக்கும்.

**“வரி அதிகாரசபைகள்”** என்பது உள்நாட்டு அல்லது வெளிநாட்டு வரி, வருமான, நிதி மற்றும் நாணய அதிகார சபைகளைக் குறிக்கும்.

**“வரித் தகவல்கள்”** என்பது ஒரு வாடிக்கையாளரின் (அவ் வாடிக்கையாளர் ஒரு தனிநபராக அல்லது ஒரு வியாபாரமாக அல்லது இலாப நோக்கமற்ற அல்லது வேறு வகையிலான நிறுவனமாக இருக்கலாம்) மற்றும் உரிமையாளரின் வரி நிலைமையுடன் நேரடியான அல்லது நேரடியற்ற தொடர்பைக் கொண்டுள்ள ஏதேனும் ஆவணங்களை அல்லது தகவல்களை (இணைக்கப்பட்ட விபரக்கூற்றுகள், விலக்களிப்புகள் மற்றும் ஒப்புதல்கள்) குறிக்கும்.

ஒரு வாடிக்கையாளரின் ‘‘கட்டுப்படுத்தும் நபர்’’, ‘‘கணிசமான உரிமையாளர்’’ அல்லது பயனடையும் உரிமையாளர் என்று HSBC இனால் நியாயமாகக் கருதப்படும் ஒருவர் வரி அதிகார சபைக்கான HSBC குழும அங்கத்தவர் ஒருவரின் கடப்பாடுகளை அனுசரிக்க (அல்லது பணிந்துதொழுகலை நிரூபிக்க அல்லது பணிந்தொழுகாமையைத் தவிர்க்க) வேண்டும்.

**“வரித் தகவல்கள்”** என்பது வரி வசிப்பிடம் மற்றும்/அல்லது நிறுவனத்தின் அமைவிடம் (ஏற்புடையதாயின்), வரி வாழிடம், வரி அடையாள இலக்கம், வரிச் சான்றிதழ் படிவங்கள், சில தனிப்பட்ட தகவல்கள் {(பெயர்(கள், வசதிப்பிட முகவரி(கள்), வயது, பிறந்த திகதி, தேசிய இனம், பிரஜாவுரிமை என்பனவும் உட்படும்) பற்றிய தகவல்களையும் (ஆனால் அவை மட்டுமல்ல} உள்ளடக்கும்.

**“வரிச் சான்றிதழ் படிவங்கள்”** என்பது கணக்கு வைத்திருப்பவரின் நிறுவனதொன்றின் இணைக்கப்பட்ட நபரின் வரி நிலைமையை ஊர்ஜிதம் செய்வதற்காக, காலத்திற்குக் காலம், வரி அதிகார சபை ஒன்றினால் அல்லது HSBCயினால் வழங்கப்படும் அல்லது தேவைப்படுத்தப்படும் ஏதேனும் படிவங்களை அல்லது வேறு ஆவணங்களைக் குறிக்கும்.

**“நியதிகள்”** என்ற பதம் இந்த ஒப்பந்தத்தை ஆட்சி செய்யும் நியதிகள் மற்றும் நிபந்தனைகள், ஏதேனும் கைதுறப்புக்கள், இணையத் தனியுரிமை அறிக்கை, வழிகாட்டுதல்கள் என்பவற்றைக் குறிப்பிடுவதுடன், காலத்திற்குக் காலம் திருத்தம் செய்யப்பட்டுக் கணக்கு வைத்திருப்பவருக்கு எம்மால் அறிவிக்கப்படும் ஏதேனும் மேலதிக விதிகளையும் உள்ளடக்கும்.

**“படிநிலை”** என்பது HSBC Premier கணக்கின் கீழ் மற்றும்/அல்லது அது தொடர்பில் கணக்கு வைத்திருக்கும் ஒருவர் சில சிறப்பம்சங்களை அனுபவிப்பதற்கு இடமளிக்கும் வகையில் கணக்கு வைத்திருப்பவருக்கென வங்கியினால் தீர்மானிக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட ஒரு படிநிலையைக் குறிக்கும்.

**“கொடுக்கல் வாங்கல்/கள்”** என்பது கணக்கு வைத்திருப்பவர் எழுத்து மூலம் அல்லது தனது பற்று அட்டையை மற்றும்/அல்லது அட்டைகளைப் பயன்படுத்தி, கணக்குத் தொடர்பில் அனுமதிக்கத்தக்க நடவடிக்கைகளைச் செயற்படுத்தும்படி HSBCக்கு வழங்கும் ஏதேனும் அனுமதிக்கத்தக்க அறிவுறுத்தலைக் குறிக்கும். (பண மீளப்பெறுதல்கள், விற்பனை ஸ்தானத்திலான கொடுப்பனவுகள், பண/காசோலை வைப்புக்கள் முதலியன கொடுக்கல் வாங்கல்களுக்கு உதாரணங்களாகும்).

“**VISA**” என்பது வீசா இன்டர்நஷனலுக்குச் சொந்தமான அடையாளத்தைக் குறிக்கும்.

“**VISA ATM வலையமைப்பு”** என்பது பற்று அட்டையை ஏற்றுக்கொள்ளும் மற்றும் VISA அல்லது இலெக்ட்ரோன் சின்னத்தைப் பார்வைக்கு வைத்திருக்கும் ATMகளின் வலையமைப்பைக் குறிக்கும்.

“நீங்கள்”, “உங்களது” “அவர்கள்” என்னும் பதங்களை அல்லது அவற்றையொத்த குறிப்புப் பெயர்ச் சொற்களைப் பயன்படுத்துதலானது, பொருத்தமான முறையிலும், சந்தர்ப்பம் அவ்வாறு அனுமதிக்கும் பட்சத்திலும் கணக்கு வைத்திருப்பவரை அல்லது அட்டை வைத்திருப்பவரைக் குறிக்கும். ஆண்பாலிலான எல்லாக் குறிப்பீடுகளும் பெண்பாலையும் உள்ளடக்கும்.

## முகவுரை (INTRODUCTION)

HSBC Premier கணக்குத் திட்டமொன்றை வைத்திருப்பவர்/கள், அவருக்கு/அவர்களுக்கு வழங்கப்பட்ட அல்லது அவரின்/ அவர்களின் வேண்டுகோளின் பேரில் அவருக்கு/ அவர்களுக்கு கிடைக்கக்கூடியதாக்கப்பட்ட அல்லது கிடைக்கக்கூடியதாக்கப்படவுள்ள HSBC Premier கணக்குத் திட்டத்தின் பயன்பாட்டை ஆளுகின்ற பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளினால் பிணிக்கப்படுவதற்கு உடன்படுகின்றார்/உடன்படுகின்றனர்:

i. கணக்கு வைத்திருப்பவரினால் உள்நாட்டு மற்றும்/அல்லது வெளிநாட்டு நாணயங்களில் காலத்திற்குக்காலம் HSBC இல் ஆரம்பிக்கப்பட்ட மற்றும்/அல்லது பேணப்பட்ட (ஒவ்வொன்றும் "HSBC Premier கணக்கு" எனப் பெயரிடப்பட்ட) சகல நடைமுறை, சேமிப்பு மற்றும் கால வைப்புக் கணக்குகளும்; மற்றும்/அல்லது;

ii. வங்கி காலத்திற்குக்காலம் விதித்துரைக்கக்கூடியவாறான கடன் எல்லைகளுக்கமைய, வழங்கப்படும் மேலதிகப்பற்று வசதிகள்; மற்றும்/அல்லது;

iii. ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட கடன் அட்டைகள் (அவை HSBC Premier கடன் அட்டையாக, HSBC Premier பற்று அட்டையாக அல்லது திட்டத்தின் ஒரு பகுதியாக வங்கி வழங்கக்கூடிய வேறேதேனும் அட்டையாக இருக்கலாம்) மற்றும்/அல்லது தொலைபேசி வங்கித்தொழிற் சேவைகள்; மற்றும்/அல்லது;

iv. வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட தவணைப்பணக் கடன், தனிப்பட்ட கடன் வழிமுறை, தனிப்பட்ட பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கடன்; மற்றும்/அல்லது

v. HSBC Premier உலகளாவிய சேவைகள்;

vi. வங்கி காலத்திற்குக்காலம் வழங்கக்கூடியதாக திட்டத்தில் உள்ளடக்கப்படும் வேறேதும் நிதிவசதிகளும் சேவைகளும்.

vii. இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகள் மற்றும் பிரமாணங்களுக்கு உட்படுத்தப்படும் மற்றும் அவற்றால் ஆட்சி செய்யப்படும் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கு (PFCA), மூலதனக் கொடுக்கல் வாங்கல் ரூபாய் கணக்கு (CTRA), வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு (BFCA), உள்வரும் முதலீட்டுக் கணக்கு (IIA), இராஜதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்கு (DFCA), இராஜதந்திர ரூபாய் கணக்கு (DRA), விசேட வைப்புக் கணக்கு (SDA), வெளிச்செல்லும் முதலீட்டுக் கணக்கு (OIA), வதியாதோர் ரூபாய் கணக்கு (NRRA), குடிபெயர்ந்தோரின் அனுப்பீடு செய்யக்கூடிய வருமானக் கணக்கு (ERIA) ஆகியன உள்ளிட்ட (ஆனால், அவை மட்டுமல்ல) ஒழுங்குமுறைக் கணக்குகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் சகல ஒன்லைன் வங்கிச் சேவைக் கொடுக்கல் வாங்கல்களும்

HSBCயின் தனிப்பட்ட இணையத்தள வங்கிச் சேவை (PIB) தளத்தில் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

மேற்படி ஒழுங்குமுறைக் கணக்குகளிலிருந்து மேற்கொள்ளப்படும் உள்வரும் அல்லது வெளிச்செல்லும் PIB கொடுக்கல் வாங்கல்கள் நிராகரிக்கப்படுவதன் விளைவாக ஏற்படும் ஏதேனும் இழப்புகளுக்கு வங்கி எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.

## பிரவேசத் தகுதிகள் (ENTRY REQUIREMENT)

இத் திட்டத்தில் பின்வருபவர்கள் இணைய முடியும்:

1.

இலங்கை நாட்டவர்கள், வதிவிட வீசாவின் பேரில் இலங்கையில் வசிக்கின்ற வெளிநாட்டவர்கள் அல்லது பின்வரும் நிபந்தனைகளைத் திருப்தி செய்கின்ற இலங்கையில் வசிக்காத இலங்கையர்கள்:

கணக்கு வைத்திருப்பவர், 15,000,000 ரூபாவுக்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட வேறேதும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகைக்குக் கூடுதலான மாதாந்த வரவு மீதியைத் தனது நடப்பு, சேமிப்பு (வெளிநாட்டு நாணயம்/உள்நாட்டு நாணயம்) கணக்கில் அல்லது கால/கோரல் வைப்புக் கணக்கில் பேணுதல் வேண்டும். (கடன் அட்டை எல்லைகள், கடன் எல்லைகள்/நிலுவையாகவுள்ள மேலதிகப்பற்றுக்கள், திறைசேரி உண்டியல்கள், ரிப்போக்கள் மற்றும் அவற்றையொத்த வேறு திறைசேரி விளைவுகளை இதில் சேர்க்க முடியாது). கணக்கு வைத்திருப்பவர் தனியான கணக்கு மற்றும் கூட்டுக் கணக்கு ஆகிய இரண்டையும் பேணுவதுடன், திட்டத்தின் கீழான அத்தகைய எல்லாக் கணக்குகளையும் இத் திட்டத்திற்கு மாற்ற விரும்பும்பட்சத்தில், தனிக் கணக்கு வைத்திருப்பவர் என்ற முறையிலும் கூட்டுக் கணக்கு வைத்திருப்பவர் என்ற முறையிலும் ரூ.15,000,000/- என்ற வரவு மீதி நிபந்தனையைப் பூர்த்திசெய்ய வேண்டும். ("மொத்த உறவு மீதி") அல்லது பெற்றோர்(கள்)/பாதுகாவலர் தற்சமயம் HSBC Premier வாடிக்கையாளராக இருக்கும் பட்சத்தில், 18 வயதிற்கும் 28 வயதிற்கும் இடைப்பட்ட (இரு வயதுகளும் உட்படும்) ஒரு கணக்கு வைப்பாளர் தனக்கு 28 வயது பூர்த்தியாகும் வரை வங்கியின் "HSBC Premier Next Gen" வாடிக்கையாளராக முடியும்.

“HSBC Premier Next Gen” வாடிக்கையாளர்கள் இத் திட்டத்தின் அனுகூலங்களை அனுபவிப்பதற்காக மேலே விபரிக்கப்பட்டுள்ளவாறு மொத்த உறவு மீதியைப் பேண வேண்டிய அவசியமில்லை. HSBC Premier Next Gen” கணக்குகளைத் தனியாகச் செயற்படுத்த முடியாது. பெற்றோர்(கள்)/பாதுகாவலர் HSBC Premier வாடிக்கையாளராக இருக்கும் வரை அவர்கள் இத் திட்டத்தை அனுபவிக்கலாம். பெற்றோர்(கள்)/பாதுகாவலர் HSBC Premier வாடிக்கையாளராக இல்லாமல்போகும் பட்சத்தில், “HSBC Premier Next Gen” வாடிக்கையாளருக்கான முப்பது (30) நாள் முன்னறிவித்தலுடன் அந்தக் கணக்கு ஒரு பொதுக் கணக்காகத் தரமிறக்கப்படும். அத்தகைய கணக்கு www.hsbc.lk என்ற வலைத்தளத்தில் கிடைக்கும் வங்கியின் பொதுக் கணக்குகளுக்கான நியதிகள் மற்றும் நிபந்தனைகளினால் ஆட்சி செய்யப்படும்.

1.1 பக்கேஜில் பிரவேசிப்பதற்கு வாடிக்கையாளர் பின்வரும் நிபந்தனைகளில் ஒன்றைத் தெரிவு செய்து பூர்த்திசெய்ய முடியும்: (a) குறைந்தபட்ச மாதாந்த TRB ஆக ரூ.15,000,000/-ஐ வைப்புச் செய்து அதனைப் பேண வேண்டும்.

1.2 மேற்குறிப்பிட்ட சரத்து 1.1 (a) தெரிவிக்கும் நிபந்தனைகளில் ஒன்றைக் கணக்கு வைப்பாளர் பூர்த்தி செய்யாவிட்டால், வங்கியானது அதனால் தீர்மானிக்கப்படும் மீதி குறைவுக் கட்டணம் ஒன்றை மாதாந்தம் கணக்கிலிருந்து அறவிடும் (“Below Balance Fee” அல்லது - BBF). நிபந்தனை பூர்த்தி செய்யப்படாத மாதத்திற்கான BBF கட்டணமானது அதற்கு அடுத்த மாதத்தில் சம்பந்தப்பட்ட கணக்கில் பற்று வைக்கப்படும.

1.3 வாடிக்கையாளர் சரத்து 1.1 (a) குறிப்பிடும் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்ய அடுத்தடுத்து மூன்று மாதங்கள் தவறுவாராயின், உரிய முன்னறிவித்தலின் பின் அவரது அந்தஸ்து HSBC Premier பக்கேஜ் என்ற நிலையிலிருந்து சாதாரண வங்கிக் கணக்காக மாற்றப்படும். அத்துடன், HSBC Premier பக்கேஜ் தொடர்பில் அவர் அனுபவித்த சகல சலுகைகளும் நிறுத்தப்படும். இதன் பிரகாரம், தற்போதுள்ள அட்டைகள் சாதாரண கணக்குகளுக்குரிய அட்டைகளாகத் தரமிறக்கப்படுவதுடன், வங்கியின் சாதாரண கணக்கு வைப்பாளர்களுக்குப் பொருத்தமாக நடைமுறையிலுள்ள கட்டணங்கள் அறவிடப்படும்.

1.4 கூட்டுக் கணக்கு வைப்பாளர்கள் மேலுள்ள சரத்து 1.1 (a) நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் Premier பக்கேஜில் பிரவேசிக்கலாம்.

2.

ரூபாய் நடைமுறைக் கணக்கு ஒன்றை அல்லது ரூபாய் சேமிப்புக் கணக்கு ஒன்றை ஆரம்பித்தல் HSBC Premier கணக்கு வைப்பாளருக்கு/வைப்பாளர்களுக்கு கட்டாயமானது. வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாள ஆவணத்தைச் (அதாவது, தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு) சமர்ப்பிப்பதன் மூலம் மற்றும் வங்கியினால் அங்கீகரிக்கப்படும் தொழில் தருநரிடமிருந்து அல்லது வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க தற்போது நடைமுறைக் கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து அறிமுகக் கடிதமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் அல்லது உத்தேச வாடிக்கையாளர் நடைமுறைக் கணக்கொன்றை வைத்திருக்கும் வேறொரு வங்கியின் சிபாரிசுக் கடிதத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம் நடைமுறைக் கணக்கு ஆரம்பிக்கப்படலாம்.

வங்கியானது அதன் தனித் தற்றுணிபின்படி, வாடிக்கையாளரின் அடையாளம் மற்றும் அந்தஸ்து பற்றித் திருப்திப்படின், அறிமுகத்துக்கான தேவைப்பாட்டிலிருந்து அவரை விடுவிக்கலாம்.

## ஆணைப்பத்திரம் (MANDATE)

3.

திட்டமானது ஒருவருக்கு மேற்பட்ட ஆட்களின் பெயர்களில் இருப்பின்,

(a) இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் நோக்கங்களுக்காக, அத்தகைய ஒவ்வொரு ஆளும் கணக்கு வைத்திருப்பவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(b) திட்டத்தினுள்ளான தனிப்பட்ட கணக்குகள் தொடர்பான கூட்டுக் கணக்கு ஆணைப்பத்திரத்தில் அடங்கியுள்ள அறிவுறுத்துதல்கள் எவ்வாறிருப்பினும், வரையறை எதுவுமின்றி, எவரேனும் ஒரு கூட்டுக் கணக்கு வைத்திருப்பவரினால் கையொப்பமிடப்பட்டுப் பயனுறுத்தப்பட்ட எல்லாக் காசோலைகளுக்கும், தொலைபேசி அறிவுறுத்துதல்களுக்கும், பணிப்புகளுக்கும், வேறு சாதனங்களுக்கும், கொடுக்கல் வாங்கல்களுக்கும் மதிப்புக் கொடுப்பதற்கு கூட்டுக் கணக்கு வைத்திருக்கும் ஒவ்வொருவரும் வங்கிக்கு இத்தால் அதிகாரமளிக்கின்றார்.

(c) கூட்டுக் கணக்கு வைத்திருப்பவருள் எவரேனும் ஒருவரின் வேண்டுகோளின் பேரில் மேலதிகப் பற்று மற்றும் வேறு நிதிவசதிகளை அளிப்பதற்கு வங்கி உடன்படலாம்; எவ்வாறாயினும், இதன் கீழான திட்டம் தொடர்பில் கூட்டுக் கணக்கு வைத்திருப்பவரின்

(வைத்திருப்பவர்களின்) கடப்பாடு, கூட்டானதாகவும் தனித்தனியானதாகவும் இருத்தல் வேண்டும்.

(d) கூட்டுக் கணக்கு வைத்திருப்பவர்களில் எவரேனும் ஒருவரின் அல்லது ஒருவருக்கு மேற்பட்டோரின் சார்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட பணப் பத்திரங்களை வங்கியானது ஓர் HSBC Premier கணக்கில் வரவு வைக்கலாம்.

(e) கூட்டுக் கணக்கு வைப்பாளர்களில் ஒருவர் மரணமடையும் பட்சத்தில், உயிரோடிருப்பவர்(கள), இறந்தவரின் மரணத் தேதியைக் குறிப்பிட்டு, அந்நிகழ்வு பற்றி வங்கிக்கு உடனடியாக அறிவிப்பதுடன், மரணச் சான்றிதழ் உட்பட வங்கியினால் கோரப்படும் பொருத்தமான ஆவணங்களையும் சமா்ப்பிக்க வேண்டும். கூட்டுக் கணக்கு வைப்பாளர்களில் ஒருவர் மரணமடையும் பட்சத்தில், ஏதேனும் கணக்கில் (கணக்குகளில்) கூட்டுப் பெயர்களிலுள்ள ஏதேனும் வரவு மீதி மற்றும் கூட்டுப் பெயர்களில் உள்ள ஏதேனும் பிணையங்கள், உறுதிப்பத்திரங்கள், பெட்டிகள் மற்றும் பார்சல்கள், அவற்றிலுள்ள பொருள்கள் மற்றும் ஏதேனும் வகையான சொத்துக்களை உயிரிழந்தவரின் அல்லது உயிரிழந்தவர்களின் ஆணைக்காக வங்கி வைத்திருக்கும். கூட்டுக் கணக்கு வைப்பாளர்களில் ஒருவரின் மரணம் பற்றிய அறிவித்தல் கிடைக்கப்பெற்ற பின், உயிருடன் இருப்பவருக்கு அல்லது இருப்பவர்களுக்கு அல்லது அவர்களின் ஆணைக்குக் கொடுப்பனவை அல்லது விநியோகத்தை மேற்கொள்வதுடன், வங்கியானது அதன் கடப்பாடுகளிலிருந்து முற்றாக விடுவிக்கப்படும் என்பதை கூட்டுக் கணக்கு வைப்பாளர்கள் ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்கிறார்.

(f) ஒரு கூட்டுக் கணக்கு வைத்திருப்பவருக்குக் கொடுக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தல் எல்லாக் கூட்டுக் கணக்கு வைத்திருக்கும் வழங்கப்பட்ட போதுமான அறிவித்தலாகக் கருதப்படும். அத்துடன்.

(g) கூட்டுக் கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து பெறப்பட்ட அறிவுறுத்துதல்கள் தொடர்பில் செயலாற்றுவதற்கு முன்னர், கூட்டுக் கணக்கிற்கான இன்னொரு தரப்பிடமிருந்து முரணான அறிவுறுத்துதல்களை வங்கி பெற்றால், வங்கியானது, முதலில் பெறப்பட்ட அறிவுறுத்துதலின் பேரில் செயற்படும். இந்நோக்கத்துக்காக அறிவுறுத்துதல்களைப் பெறுதல் என்பது, அத்தகைய அறிவுறுத்துதல்களின் மீது வங்கியினால் எடுக்கப்பட்ட முதலாவது நடவடிக்கையென்றும், ATM மூலம் அல்லது வேறேதும் வழிகள் மூலம் பெறப்பட்ட அறிவுறுத்துதல்கள் தொடர்பாகப் பதியப்பட்ட நேரமல்லவென்றும் அர்த்தம் கொள்ளப்படும்.

## வைப்புக்கள் (DEPOSITS)

4.

வங்கியானது, அதன் தனித் தற்றுணிபில், வங்கியின் மீது வரையப்படாத வெளிநாட்டு நாணய வரைவுகளும் வேறு கொடுப்பனவுக் கட்டளைகளும் கொள்வனவு செய்யப்பட வேண்டுமா அல்லது பெற்றுக்கொள்ளப்படுவதற்காக அனுப்பப்பட வேண்டுமா என்பதை முடிவு செய்யும். செலுத்துகின்ற வங்கி பின்னர் மதிப்பளிக்காதுவிடும் பட்சத்தில் கொள்வனவு செய்யப்பட்ட எல்லாப் பணப் பத்திரங்கள் தொடர்பிலும் வங்கியானது முழுமையான மறுவழி உரிமையை (விதிப்பனவுகளுட்பட) தொடர்ந்து வைத்திருக்கும். மதிக்களிக்காமை பற்றிய அறிவித்தல் கிடைத்ததும் சம்பந்தப்பட்ட பணத் தொகை HSBC Premier கணக்கில் பற்று வைக்கப்படும்.

5.

(a) கணக்கில் வைப்புச் செய்யப்படும் காசோலைகள் சேகரிப்புக்காக மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். செலுத்தும் வங்கியினால் அக் காசோலைகள் அங்கீகரிக்கப்படும் வரை பணத்தை மீளப்பெற முடியாது. பணம் கிடைக்கும் திகதி வெறும் குறிப்பிற்காக மட்டுமே காட்டப்படும். இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் எவ்வாறு இருந்தாலும், காசோலைகளைச் சேகரிக்கும் மற்றும் அங்கீகரிக்கும் நோக்கத்திற்கு சேமிப்புக் கணக்குகளைப் பயன்படுத்த முடியாது. கொண்டுவருபவருக்கு, வைப்பாளருக்கு அல்லது மூன்றாம் தரப்பினருக்குச் செலுத்தக்கூடியதாக எழுதப்பட்ட காசோலைகள், பங்கிலாபக் கொடுப்பனவுப் பத்திரங்கள் மற்றும் ஏனைய பணப் பத்திரங்களை வைப்பிற்காக ஏற்றுக்கொள்ள மறுக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.

(b) கணக்குக்கில்(கணக்குகளில்) வைப்பிலிடப்பட்டு வரவு வைக்கப்பட்ட ரூபாய்க் காசோலைகள் தேறிப்பெறப்படுவதன் பேரில் மட்டுமே பணத்தை மீளப்பெற முடியும். மீளப்பெறுகைக்காக பணம் கிடைக்கக்கூடிய தேதி, சுட்டிக்காட்டல் நோக்கத்துக்காக மட்டுமே காட்டப்படுகின்றது. தீர்வுக்காக/ பெற்றுக்கொள்ளப்படுவதற்காக வைப்பிலிடப்பட்டவையும், ஏனைய வங்கிகளின் பேரில் வரையப்பட்டவையுமான ரூபாய்க் காசோலைகள், காலத்துக்குக் காலம் திருத்தப்படக்கூடிய ஸ்ரீ லங்கா ஒட்டோமேட்டற் க்ளியரிங் ஹவுஸ் (SLACH) விதிகளுக்கு உட்பட்டவையாக இருக்கும். காசோலைகள் எந்த வங்களின் பேரில் வரையப்பட்டதோ அந்த வங்கிகளினால் விதிக்கப்பட்ட எவையேனும் தரகுப் பணம், வங்கியின் தனித்

தற்றுணிபின் பேரில் விதிக்கப்படும் ஏதேனும்மிகைக் கட்டணத்துடன் அல்லது அது இல்லாமல் அந்தந்த நடப்புக் கணக்கில்(கணக்குகளில்) பற்றுவைக்கப்படும்.

6.

வெளிநாட்டு நாணயக் கணக்குகளைப் பொறுத்தவரையில், வைப்பிலிடப்படும் வெளிநாட்டு நாணயத் தாள்களின் பெறுமதியானது, நாணயச் செலாவணி வீதத்திலும் தந்திவழிப் பரிமாற்ற வீதங்களிலுமான வேறுபாடுகள் காரணமாக சமப் பெறுமதியைவிட குறைவாக இருக்கக்கூடும்.

7.

வங்கியின் பேரில் வரையப்பட்ட வரைவுகள்/ காசோலைகள் ஒரு கணக்கின் வரவுக்குச் செலுத்தப்படும்போது, வங்கியானது, அதன் வெளியிடப்பட்ட இறுப்பனவுப் பட்டியலுக்கிணங்கக் கையாளுகை விதிப்பனவுகளைக் கழிப்பனவு செய்யும்.

8.

வைப்புச் சீட்டானது இயந்திரத்தினால் செல்லுபடியாக்கப்படுதல் மூலம் அல்லது வைப்புச் சீட்டில் வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் கையெழுத்து இடுவதன் மூலம் சகல வைப்புக்களும் ஏற்றுக் கொள்ளப்படும். அதிகாரபூர்வ கையொப்பங்கள் மற்றும் மாதிரி டெலர் முனைய அச்சினதும் நிரலொன்றை வேண்டுகோளின் பேரில் பார்வையிடலாம்.

9.

கிளைகளில் அமைந்துள்ள ESPMகளில் மற்றும்/அல்லது ATM களில் இடப்பட்டதாகக் கூறப்படும் எவையேனும் காசோலைகளுக்கான வருமதிகள் (தற்காலிக பற்றுச்சீட்டு ஏதேனும் வழங்கப்பட்டிருந்தாலும்) கணக்கு வைத்திருப்பவரின் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தாலொழிய, வங்கியானது அதற்கான பொறுப்பை ஏற்கமாட்டாது. ESPMs மற்றும்/அல்லது ATM களினால் வழங்கப்பட்ட தற்காலிக அறிவித்தல் எவ்வாறிருப்பினும், காசோலைகள் கணக்கில் வரவு வைக்கப்பட்டிந்தாலன்றி, வங்கியானது, எச்சூழ்நிலையிலும் அல்லது எத்தகைய காரணத்துக்காகவேனும், வைப்பிலிடப்பட்டனவாகச் சொல்லப்பட்ட காசோலைகள் தொடர்பிலான ஏதேனும் உரிமைக்கோரிக்கையை, ஏற்றுக் கவனிக்கமாட்டாது.

## சிறுவர் சேமிப்புக் கணக்கு (CHILDREN'S SAVINGS ACCOUNT)

10.

(a) பராயமடையாத ஒருவரின் (கணக்கு வைத்திருப்பவர்) பெயரில் HSBC சிறுவர் சேமிப்புக் கணக்கு (கணக்கு) ஆரம்பிக்கப்படும். இக் கணக்கில் எவர் விரும்பினாலும் பணத்தை வைப்புச் செய்ய முடியும்.

(b) கணக்கை ஆரம்பிக்கும்போது வங்கியினால் குறித்துரைக்கப்படும் தொகையே, HSBC சிறுவர் சேமிப்புக் கணக்கை ஆரம்பிப்பதற்கான குறைந்தபட்ச ஆரம்ப வைப்புத் தொகையாகும். இத் தொகை காலத்திற்குக் காலம் மாற்றப்படலாம்.

(c) பிறப்புக்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட பராயமடையாதவரின் பிறப்புச் சான்றிதழின் மூலப்பிரதி, கணக்கு ஆரம்பிக்கப்படும்போது வங்கியின் பரிசீலனைக்காகச் சமா்ப்பிக்கப்பட வேண்டும். இப் பிறப்புச் சான்றிதழின் நிழற்படப் பிரதியொன்றை வங்கி தனது தேவைக்காக வைத்திருக்கும்.

(d) இக் கணக்கிற்குரிய வட்டி வீதம் முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம். கணக்கிற்காகச் செலுத்தப்படும் வட்டி வீதம் வங்கியின் இலங்கையிலுள்ள கிளைகளில் மற்றும்/அல்லது www.hsbc.lk என்ற வங்கியின் வலைத்தளத்தில் பார்வைக்கு வைக்கப்படும். அது கணக்கு வைப்பாளருக்கு முறைப்படி வழங்கப்பட்ட அறிவித்தலாகக் கொள்ளப்படும்.

(e) குறிப்பிட்ட காலப்பகுதியில் கணக்குத் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சகல கொடுக்கல் வாங்கல்களையும் எடுத்துக்காட்டும் விபரக்கூற்றுக்கள் காலாண்டுக்கு ஒரு தடவை கணக்கு வைப்பாளருக்கு வழங்கப்படும்.

(f) பராயமடையாதவா் 18 வயதை அடைந்ததும், இக் கணக்கு (கணக்கிற்கான குறைந்தபட்ச நிபந்தனை பூர்த்தி செய்யப்படும் பட்சத்தில்) ஒரு சாதாரண சேமிப்புக் கணக்காக மாற்றப்படும். கணக்கு வைத்திருப்பவா் அதற்குத் தேவையான ஆவணங்களை நிரப்ப வேண்டும். பராயமடையாதவா் 18 வயதை அடைந்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் தேவையான ஆவணங்கள் சமா்ப்பிக்கப்படாவிட்டால், வங்கியானது சம்பந்தப்பட்ட கணக்கை மூடுவதுடன், பராயமடையாதவரின் பெயருக்கு எழுதப்பட்ட வங்கி வரைபு ஒன்றை வங்கியில் கடைசியாகப் பதிவு செய்யப்பட்டிருந்த கடிதத்தொடர்பு முகவரிக்கு அனுப்பிவைக்கும்.

(g) பராயமடையதாவர் இயலாமைக்கு ஆளாக நேர்ந்தால், கணக்கிலுள்ள பணம் பெற்றோருக்கு/பெற்றோரின் பெற்றோருக்கு அல்லது நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட இன்னுமொரு ஆளுக்கு, ஒரு பராமரிப்பாளருக்கு அல்லது பாதுகாவலருக்கு வழங்கப்படும் (அத்தகைய சந்தர்ப்பத்தில் பெற்றோரினால்/பெற்றோரின் பெற்றோரினால் நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட பராமரிப்பாளரினால் அல்லது பாதுகாவலரினால் கையொப்பமிடப்பட்ட பற்றுச்சீட்டு, அத்தகைய கொடுப்பனவு வழங்கப்பட்டதற்கு செல்லுபடியான மற்றும் போதுமான சான்றாகக் கொள்ளப்படும். இந்த விடயம் தொடர்பில், பராயமடையாதவர் உண்மையாகவே இயலாமைக்கு ஆளாகியுள்ளாரா என்பதைத் தீர்மானிக்கும் முழு உரிமையும் வங்கிக்கு உள்ளது.

(h) பராயமடையாதவர் மரணமடைய நேர்ந்தால், கணக்கிலுள்ள பணம், இலங்கையின் மரண சாசனம் எழுதப்படாத அடுத்துறுநர் சட்டத்தின்படி பகிர்ந்தளிக்கப்படும்.

(i) பராயமடையாத எவரின் பெயரில் கணக்கு ஆரம்பிக்கப்பட்டதோ அவரே கணக்கில் இடப்படும் வைப்புக்களின் பயனாளியாவார். ஆகவே, பராயமடையாதவர் 18 வயதை அடையும் வரை கணக்கின் மீளப்பெறுகை அல்லது மூடுகை அனுமதிக்கப்பட மாட்டாது. எனினும், பராயமடையாதவரின் உயர் கல்வி, அவசர மருத்துவ சிகிச்சை அல்லது குடிபெயர்வு போன்ற நோக்கங்களுக்காக அல்லது காரணங்களுக்காக, பெற்றோர்/பெற்றோரின் பெற்றோர் அல்லது அவர்கள் உயிருடனில்லையென்றால் நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட வேறொரு நபர் அல்லது பாதுகாவலர் அல்லது பராமரிப்பாளர் விண்ணப்பிக்கும் பட்சத்தில் மாத்திரம் கணக்கின் மீளப்பெறுகையை/மூடுகையை வங்கி தனது தனித் தீர்மானத்திற்கேற்ப அனுமதிக்கக்கூடும். அத்தகைய மீளப்பெறுகையின்/மூடுகையின் செல்லுபடியாகும் தன்மையைத் தீர்மானிக்கும் முழு உரிமையும் வங்கிக்கு உண்டு. வங்கி இது தொடர்பில் ஆவணச் சான்றுகளைக் கோரக்கூடும். இருந்தபோதிலும், கனிஷ்ட Premier பற்று அட்டை தொடர்பான நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக கணக்கு வைப்பாளர் ஒரு பற்று அட்டையை வைத்திருந்தால் மீளப்பெறுதல்கள் அனுமதிக்கப்படும்.

(j) விபரக்கூற்றுக்களின் பிரதிகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பது கணக்கு வைத்திருப்பவரின்/ பெற்றோரின்/பெற்றோரைப் பெற்றவர்கள் அல்லது நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட வேறொரு நபர் அல்லது பாதுகாவலர் அல்லது பராமரிப்பாளரின் (இவர்கள் கூட்டாக ‘‘வாடிக்கையாளர்கள்’’ எனப்படுவர்) பொறுப்பாகும். விபரக்கூற்றுக்களின் பிரதிகள் வங்கியிடமிருந்து கோரப்பட்டால், வங்கியானது அதன் பிரசுரிக்கப்பட்ட கட்டணப் பட்டியலுக்கேற்ப ஒரு கட்டணத்தை அறவிட்டு இச் சேவையை வழங்குவதற்கு உரிமை கொண்டுள்ளது. எனினும், கணக்கு வைப்பாளர்

பற்று அட்டை ஒன்றை வைத்திருக்கும் பட்சத்தில், சிறுவர் பிரிமியர் பற்று அட்டை தொடர்பான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய மீளப்பெறுகைகள் அனுமதிக்கப்படும்.

i. ஒவ்வொரு விபரக்கூற்றும் கிடைத்தவுடன் அல்லது அவ்வாறு இயலாவிட்டால் கிடைத்த திகதியிலிருந்து முப்பது (30) கலண்டர் தினங்களுக்குள் (''30 நாள் மீளாய்வு'') அதனைப் பரிசீலனை செய்து, ஒவ்வொரு பதிவையும் தம்மிடமுள்ள பதிவுகளுடன் ஒப்பிட்டு உறுதிசெய்துகொள்ள வாடிக்கையாளர்கள் இணங்குகின்றனர். ஏதேனும் தவறுகள், விடுபடுகைகள் அல்லது மோசடிகள் அனுமதியற்ற பாவனைகள் உள்ளிட்ட முறைகேடுகள் இருந்தால் அல்லது விபரக்கூற்றுத் தொடர்பாக வேறேதும் ஆட்சேபனை இருந்தால் (இவையனைத்தும் ''கணக்கு முறைகேடுகள்'' எனப்படும்) வாடிக்கையாளர்கள் அவற்றை உடனடியாக வங்கியின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். 30 நாள் மீளாய்வு காலத்திற்குள் அவ்விதம் செய்ய வாடிக்கையாளர்கள் தவறினால், விபரக்கூற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள மீதியும் கணக்கு முறைகேடுகள் உள்ளடங்கலான சகல பதிவுகளும் சரியானவையாகவும் பூரணமானவையாகவும் அதிகாரம் அளிக்கப்பட்டவையாகவும் வாடிக்கையாளர்களைப் பிணிப்பவையாகவும் கருதப்படும். அத்துடன், இச் சரத்திற்கு அமைவாக அறிவித்தல் கொடுக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தவிர, மிகச் சமீபத்திய கணக்கு விபரக்கூற்றுத் திகதி வரை இடம்பெற்ற ஏனைய கொடுக்கல் வாங்கல்களுக்கான சகல பொறுப்புக்களிலிருந்தும் வங்கி விடுவிக்கப்படும்.

ii. சரத்து 10.(j) i.இன் கீழ் தெரிவிக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்ற வாடிக்கையாளர் தவறினால், வாடிக்கையாளரின் நடத்தை அல்லது தவறுகையினால் அல்லது அதன் விளைவாகக் கணக்கில் இழப்பு ஏற்படுமாயின் (சகல வகையான இழப்புக்கள், வங்கிக்கு எதிரான வரிகள், விதிப்பனவுகள், கட்டணங்கள், அபராதங்கள் அல்லது தெண்டங்களும் இதில் உள்ளடங்கும்) அத்தகைய இழப்புத் தொடர்பில் வங்கியானது வாடிக்கையாளருக்கான பொறுப்பு எதையும் கொண்டிருக்காது என்பதை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கிறார். இந்த ஒப்பந்தத்தினால் தேவைப்படுத்தப்பட்ட காலத்திற்குள் கணக்கு விபரக்கூற்றை மீளாய்வு செய்யத் தவறும் செயலானது, ஒப்பந்தத்தின் பிரகாரம் கணக்கு விபரக்கூற்று அல்லது கொடுக்கல் வாங்கல் பதிவேடுகள் மீளாய்வு செய்யப்பட்டு, அதன் மூலம் ஏதேனும் தவறு அல்லது விடுபடுகை கண்டுபிடிக்கப்பட்டிருக்கக்கூடிய காலம் வரை ஏற்பட்ட ஏதேனும் இழப்பின் அளவுக்கே காரணமாக அல்லது பங்களிப்புச் செய்வதாகக் கருதப்படும் என்பதை வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கிறார். வங்கியின் பூரண கவனயீனம் அல்லது வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட தவறான நடவடிக்கை காரணமாக

கணக்கிலிருந்து தவறாக மீளப்பெறப்பட்ட பிரதான தொகையின் உண்மையான நேரடி இழப்பிற்கு மட்டுமே வங்கி பொறுப்பேற்கும் என்பதையும் வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கிறார்.

(k) வங்கியானது கணக்கில் தவறுதலாக ஏதேனும் பணத்தை வரவு வைத்துவிட்டால், எந்த வேளையிலும் அது தொடர்பான பதிவை நேர்மாற்றம் செய்யவும் சம்பந்தப்பட்ட தொகையை வாடிக்கையாளரிடமிருந்து கோரவும் உரிமை கொண்டுள்ளது.

(l) விபரக்கூற்றுச் சுற்றுவட்டத்தின் முடிவிலிருந்து 14 தினங்களுக்குள் விபரக்கூற்று கிடைக்காவிட்டால், வங்கிக்கு அது பற்றி அறிவிக்க வேண்டும்.

## மீளப்பெறுதல்கள் (WITHDRAWALS)

11.

வேறு விதமாகக் குறித்துரைக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் இல்லாவிடின், கால வைப்புக்கள் முதிர்ச்சியடையும் திகதியில், அப்போது நிலவுகின்ற வட்டி வீதத்தில் மற்றுமொரு ஒத்த காலப்பகுதிக்குப் புதுப்பிக்கப்படும்.

12.

கால வைப்புக்களை அதன் முதிர்ச்சியின் பின்னர் மாத்திரமே மீளப்பெறலாம். ஏதேனும் கால வைப்பின் முதிர்ச்சிப் பெறுவனவுத் தொகைகளானது, அத் தொகையினை மீள் முதலீடு செய்வதற்கான அறிவுறுத்தல் எதுவும் வழங்கப்பட்டிருக்காவிடின், குறிப்பிடப்பட்ட முதிரச்சித் தினத்திலிருந்து உடனடியாக அடுத்துறுகின்ற வேலை நாளில் மாத்திரமே மீளளிக்கப்படும்.

13.

எனினும், கணக்கு வைத்திருப்பவரினால் (வைத்திருப்பவர்களினால்) உரிய முறையில் அங்கீகரிக்கப்பட்ட எழுத்து மூல வேண்டுதல் விடுக்கப்படின், (வங்கிக்கு வழங்கப்பட்டிருக்கின்ற அதிகாமளிப்பிற்கு ஏற்ப) வங்கியானது தனது தற்றுணிபின் பேரில் கால வைப்புக்களை அவற்றின் முதிர்ச்சிக்கு முன்பே விடுவிக்கக்கூடும். அவ்வாறு வங்கியின் தனித் தற்றுணிபின் பேரில் முதிர்ச்சிக்கு முன்னர் விடுவிக்கப்பட்ட கால வைப்புக்கள் வங்கியின் கட்டணப் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கு அமைவான தண்டப் பண விதிப்புக்களுக்கு உட்படும்.

14.

தற்போதுள்ள வைப்புப் தொகையுடன் சேர்த்து மீள முதலீடு செய்யும் நோக்கத்திற்காக அல்லது வேறேதும் காரணத்திற்காக, கால வைப்பினை முதிர்ச்சிக்கு முன்பே திரும்பப் பெற்றால், வங்கியின் கட்டணப் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கு அமைவான தண்டக் கட்டணங்கள் அறவிடப்படும்.

15.

கால வைப்புக்ளின் மீளப்பெறுகை மற்றும் வட்டி மீது ஒழுங்குபடுத்துனர்கள் கட்டுப்பாடுகளை விதிக்கும் பட்சத்தில் கணக்கு வைத்திருப்பவர்(கள்) அத்தகைய கட்டுப்பாடுகளுக்குப் பணிந்தொழுக வேண்டும்.

## காசோலைகள் (CHEQUES)

16.

HSBC Premier நடைமுறைக் கணக்கு வைத்திருப்போருக்கு எழுத்தைக் கண்டறியும் வகையில் காந்த மையினால் அச்சிடப்பட்ட HSBC Premier காசோலைப் புத்தகம்(கள்) வழங்கப்படும். அரசாங்க முத்திரை வரி இருப்பின் அதனையும் அச்சிடும் செலவை ஈடுசெய்வதற்காகவும் வங்கியின் வெளியிடப்பட்ட இறுப்பனவுப் பட்டியலுக்கிணங்க விதிப்பனவுகள் அறவிடப்படும்.

17.

கணக்கு வைத்திருப்பவர்(கள்), ஆணையளிப்பிற்கும் வங்கிக்கு வழங்கப்பட்ட மாதிரிக் கையொப்பத்திற்கும் (கையொப்பங்களுக்கும்) அமைவாகவே காசோலைகளில் கையொப்பமிட வேண்டும். கையொப்பம் அல்லது கையொப்பதாரர்களில் செய்யப்படும் மாற்றங்கள் உடனடியாக வங்கிக்கு எழுத்தில் அறிவிக்கப்பட வேண்டும்.

18.

காசோலைப் புத்தக விண்ணப்ப வேண்டுகோள் கிடைத்தவுடன் வங்கியானது கணக்கு வைப்பாளரின் (வைப்பாளர்களின்) வங்கியில் பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு அதனை தபால் மூலம் அனுப்பிவைக்கும். இது தொடர்பில் ஏற்படும் தாமதத்திற்கு அல்லது இழப்புக்கு வங்கி பொறுப்பாளியாகாது.

19.

ஒரு புதிய காசோலைப் புத்தகம் கிடைத்தவுடன் அதன்மீது பதிப்பிடப்பட்ட தொடர் இலக்கங்கள், கணக்கு இலக்கம் மற்றும் கணக்கு வைத்திருப்பவரின் (வைத்திருப்பவர்களின்) பெயர்(கள்) என்பவற்றையும், காசோலைகளின் எண்ணிக்கையையும்

சரிபார்த்துக் கொள்ள வேண்டும். எவையேனும் ஒழுங்கீனங்கள் இருப்பின் உடனடியாக வங்கிக்கு அறிவிக்க வேண்டும். எவையேனும் காசோலைகளை வரைவதற்கு முன்னர், காசோலைப் புத்தகத்தின் முன்னட்டையின் உட்பகுதியில் பதிப்பிடப்பட்ட காசோலை விநியோகிப்பதற்கான நிபந்தனைகளை கணக்கு வைத்திருப்பவர்(கள்) நன்கு வாசிக்க வேண்டும். காலத்திற்குக் காலம் வழங்கப்படுகின்ற நிபந்தனைகளுக்கு அல்லது திருத்தங்களுக்கு கணக்கு வைத்திருப்பவர்(கள்) கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

20.

வங்கிக்கு வழங்கப்பட்ட ஆணையளிப்பு, மாதிரிக் கையொப்பம்(கள்) ஆகியவற்றிற்கு அமைவாகவே கணக்கு வைத்திருப்பவர்(கள்) காசோலைகளில் கையொப்பமிட வேண்டும். கையொப்பதாரரில்(களில்) ஏதேனும் மாற்றம் இடம்பெற்றால் உடனடியாக வங்கிக்கு எழுத்தில் அறிவிக்கப்பட வேண்டும்.

21.

காசோலையானது நிரந்தர மையினால் வங்கியால் வழங்கப்பட்ட காசோலைகளில் மாத்திரம் வரையப்பட வேண்டும். காசோலை வரைபவரின்(களின்) ஒவ்வொரு திருத்தமும் பூரண கையொப்பம்(கள்) மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். காசோலைகளை வரைவதற்கு மின்சார/இலத்திரனியல் தட்டச்சுக்கள் மற்றும் அழிபடக்கூடிய மை என்பவற்றைப் பாவிக்கக் கூடாது. உடனடியாகக் கண்டுபிடிக்கப்பட முடியாத திருத்தத்திலிருந்து எழுகின்ற இழப்புக்களுக்கு வங்கி பொறுப்பாகாது.

22.

காசோலைத் தாள்கள் காணாமற்போனால்/ களவாடப்பட்டால் அல்லது தவறான இடத்தில் வைக்கப்பட்டால், கணக்கு வைத்திருப்பவா் காசோலை இலக்கம், தேதி, தொகை மற்றும் பணம்பெறுபவரின் பெயர் என்பவற்றைக் கொடுத்து, கொடுப்பனவை நிறுத்தும்படி வங்கிக்கு உடனடியாக எழுத்தில் அறிவுறுத்துதல் விடுக்க வேண்டும். சம்பந்தப்பட்ட காசோலை/கள், அத்தகைய அறிவுறுத்துதல் பெறப்பட்ட நேரம் வரை செலுத்தப்பட்டிராவிடின் மட்டுமே அத்தகைய எல்லா அறிவுறுத்துதல்களும் பயனுடையனவாகவிருக்கும். தொலைபேசி மூலம் கொடுக்கப்பட்ட கொடுப்பனவை நிறுத்துவதற்கான அறிவுறுத்துதல்கள், 48 மணித்தியாலங்களுக்குள் எழுத்தில் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அத்தகைய எழுத்திலான அறிவுறுத்துதல்கள் வங்கியினால் பெறப்படாதவிடத்து, கணக்கு வைத்திருப்பவருக்கான (வைத்திருப்பவா்களுக்கான) ஏதேனும் அறிவித்தலின்றி, கொடுப்பனவை நிறுத்துவதற்கான அறிவுறுத்துதலை இல்லாதாக்குவதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது. 48 மணித்தியாலங்களுக்குள் எழுத்தில் உறுதிப்படுத்தப்படாத கொடுப்பனவை நிறுத்துவதற்கான அறிவுறுத்துதல்களின் மீது செயலாற்றாமைக்காக வங்கி

பொறுப்பாகமாட்டாது. இந்த நோக்கத்துக்காக, இழப்பெதிர்காப்புப் படிவம் ஒன்றை கணக்கு வைப்பாளர்(கள்) உரிய முறையில் நிரப்ப வேண்டும்.

23.

காசோலைப் புத்தகங்கள் பாவிக்கப்படாத நேரத்தில் அவை பாதுகாப்பான ஓர் இடத்தில் வைக்கப்பட்டிருப்பதை கணக்கு வைத்திருப்பவர்(கள்) உறுதிசெய்ய வேண்டும்.

24.

இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனைத் திணைக்களத்தினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் பிரமாணங்களுக்கு இணங்கியொழுகுவதற்காக ஏதேனும் காசோலைகளை தடைசெய்ய மற்றும்/அல்லது திருப்பியனுப்ப வங்கிக்கு உரிமையுண்டு.

## வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (FOREIGN CURRENCY ACCOUNTS)

25.

நடைமுறைக் கணக்குகள்/சேமிப்புக் கணக்குகள், கால வைப்புக் கணக்குகள் உள்ளடங்கலான (ஆனால் அவை மட்டுமல்ல) வெளிநாட்டுக் கணக்குகள், இலங்கை மத்திய வங்கியினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை தொடர்பான சட்டங்கள் மற்றும்/அல்லது வழிகாட்டுதல்களுக்கு அமைவாக, ஆரம்பிக்கப்பட்டுப் பேணப்படலாம். கணக்கு வைப்பாளர்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலும் கேட்டுப் பெறக்கூடிய அத்தகைய பிரமாணங்கள் மற்றும்/அல்லது வழிகாட்டுதல்களினால் ஆளுகை செய்யப்படுவார்கள். ஏதேனும் தொகை இன்னுமொரு நாணயத்திற்கு மாற்றப்பட வேண்டுமாயின், அத்தகைய நாணயத்திற்கென அப்போது நடைமுறையிலிருந்த வங்கியின் பரிவர்த்தனை வீதத்தில் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்படும் ஏதேனும் வீதத்தில் அவ்வாறு செய்யப்படும்.

26.

ஆரம்பிக்கப்படும் சகல வெளிநாட்டு நாணயக் கணக்குகளும் இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட நாணயம் அல்லது நாணயங்களிலும் வங்கியின் உள்ளகக் கொள்கைக்கு அமைவாகவும் மாத்திரமே ஆரம்பிக்கப்படும்.

## HSBC Premier பற்று மற்றும் கடன் அட்டைகள் (HSBC PREMIER DEBIT AND CREDIT CARDS)

27. HSBC Premier பற்று மற்றும் கடன் அட்டைகள் அத்தகைய பற்று/கடன் அட்டைகளுக்கான பொது விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்படும்.

## தன்னியக்க தொலைபேசி வங்கிச் சேவை (ATB) (AUTOMATED PHONEBANKING SERVICE (ATB))

28.

வங்கியினால் வழங்கப்படும் தொலைபேசி வங்கிச் சேவையில் பின்வருவன உள்ளடங்கும்:

i. கணக்கு வைப்பாளரின் எவையேனும் கணக்குகளுக்கு இடையிலான பணப் பரிமாற்றம்.

ii. முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்ட பரிமாற்ற எல்லைக்குள், கணக்கு வைப்பாளரின் ஏதேனும் கணக்கிலிருந்து, தொலைபேசி வங்கிச் சேவை மூலம் பணம் பெறும் நோக்கத்திற்கென கணக்கு வைப்பாளரினால் எழுத்து மூலம் குறித்துரைக்கப்பட்ட கணக்கிற்கான (“A Dedicated Transferee Account”) பணப் பரிமாற்றம்.

iii. கணக்கு மீதிகள், முன்னைய கொடுக்கல் வாங்கல் விபரங்கள் (கணக்கு வைப்பாளரின் கணக்குகள் தொடர்பில்), பரிவர்த்தனை வீதங்கள் மற்றும் வைப்பு வட்டி வீதங்கள் பற்றிய விசாரணை.

iv. கணக்கு வைப்பாளரின் கணக்குத் தொடர்பில் விபரக்கூற்றுக்கள் (குறிப்பிட்ட சில வகைக் கணக்குகளுக்கு மட்டும்), காசோலைப் புத்தங்கள் என்பவற்றைக் கோருதல் மற்றும் காசோலை நிறுத்தக் கோரிக்கைகளை விடுத்தல்.

v. வங்கியினால் காலத்திற்குக் காலம் அறிமுகப்படுத்தப்படக்கூடிய வேறேதும் வங்கியியல் அல்லது முதலீட்டுச் சேவைகள்.

29.

கணக்கு வைத்திருப்பவரினால் தொலைபேசி மூலம் வழங்கப்படும் அறிவுறுத்தல்களின் பேரில் செயற்பட வங்கிக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. எனினும், அவ்வாறு செயற்படுத்த வேண்டிய கடப்பாடு வங்கிக்குக் கிடையாது. அதிகாரமற்ற நபர்களிடமிருந்து கிடைத்தவையென வங்கி தனது தற்றுணிபின் பேரில் நம்பும் அத்தகைய தொலைபேசிமூல அறிவுறுத்தல்களைச் செயற்படுத்த வங்கிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது என்பதையும்

அறிவுறுத்தல் வழங்கியவரின் (வழங்கியவர்களின்) அடையாளத்தை ஊர்ஜிதம் செய்ய வேண்டிய கடப்பாடு வங்கிக்குக் கிடையாது என்பதையும் கணக்கு வைத்திருப்பவர் ஏற்றுக்கொள்கிறார்.

30.

தொலைபேசி வங்கிச் சேவைக்காக, கணக்கு வைத்திருப்பவருக்கு வங்கியினால் வழங்கப்படும் தனிப்பட்ட அடையாள இலக்கத்தை (PIN) எல்லா வேளைகளிலும் மிகவும் இரகசியமான முறையில் வைத்திருக்கவும் PIN இலக்கம் தொலைந்தால் அல்லது அது அனுமதியற்ற ஒருவருக்குத் தெரிந்துவிட்டதென அறியவந்தால், உடனடியாக வங்கிக்கு அறிவிக்கவும் கணக்கு வைத்திருப்பவர் உடன்படுகிறார்.

31.

ஏதேனும் சாதனத்தின் பிறழ்செயற்பாடு அல்லது பழுது உட்பட, வங்கியின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட ஏதேனும் நிலைமையின் முழுமையான அல்லது பகுதியளவிலான காரணத்தினால், எவையேனும் தொலைபேசி அறிவுறுத்துதல்கள் நிறைவேற்றப்படத் தவறினால், வங்கியானது கணக்கு வைத்திருப்பவருக்குப் பொறுப்பாளியாகாது. வங்கி, அத் தொலைபேசி அறிவுறுத்துதல்களை நிறைவேற்றுதல் சம்பந்தமாக அல்லது வேறு வகையாக எழுகின்ற எவையேனும் நேரடியான, நேரடியல்லாத அல்லது விளைவாந்தன்மையினவான நட்டங்களுக்குக் கணக்கு வைத்திருப்பவருக்கு எச்சூழ்நிலைகளிலும் பொறுப்பாளியாகாது. அதே சமயத்தில், வங்கியானது தொலைபேசி அறிவுறுத்துதல்களை ஏற்று அவற்றின் பேரில் செயற்பட்டதால் அல்லது செயற்படத் தவறியதால் அல்லது அவை தொடர்பில் நேரடியாக அல்லது நேரடியற்ற முறையில் வங்கிக்கு எதிராக எழுந்த வழக்குகள், வழக்கு நடவடிக்கைகள், உரிமைக்கோரிக்கைகள், நட்டங்கள், சேதவீடுகள், செலவுதொகைகள், செலவுகள் என்பன எல்லாவற்றுக்கெதிராகவும், கணக்கு வைத்திருப்பவர் வங்கிக்கு எல்லா நேரங்களிலும் இழப்பெதிர்காப்பு வழங்கவும் அவற்றிலிருந்து வங்கிக்குத் தீங்குவிளையாமல் காத்தலும் வேண்டும். தொலைபேசி வங்கிச் சேவை முடிவுறுத்தல் செய்யப்பட்டாலும் இந்த இழப்பெதிர்காப்பு நடைமுறையிலிருக்கும்.

32.

இதன்கண்ணுள்ள நியதி நிபந்தனைகளைப் பின்பற்றி தொலைபேசி அறிவுறுத்துதல்களை விடுப்பதற்குக் கணக்கு வைத்திருப்பவருக்குள்ள உரிமை, எல்லா நேரங்களிலும் வங்கியின் தற்றுணிபிற்கமையவிருத்தல் வேண்டுமென்பதுடன், வங்கியானது முன்னறிவித்தலின்றி அத்தகைய உரிமையை எந்நேரத்திலும் இல்லாதொழிக்கலாம்.

33.

தொலைபேசிமூல அல்லது வேறு அறிவுறுத்துதல்களின் நோக்கத்துக்காக, கணக்கு வைத்திருப்பவரின் கணக்கில் மற்றும்/அல்லது கடன் அட்டைக் கணக்கில் போதிய பணம் (அல்லது முன்னேற்பாடு செய்யப்பட்ட கடன் வசதிகள்) இருப்பதனைக் கணக்கு வைத்திருப்பவர் உறுதிப்படுத்துதல் வேண்டும். கணக்கில் போதிய பணம் இல்லாத காரணத்தினால் ஏதேனும் அறிவுறுத்தலைச் செயற்படுத்த வங்கி தவறியமையிலிருந்து எழுகின்ற எவையேனும் விளைவுகளுக்கு வங்கி பொறுப்பாளியாகாது. எனினும், வங்கியானது, எப்பொழுதும், அதன் தனித் தற்றுணிபின்படி அத்தகைய போதாமை எவ்வாறிருப்பினும் அறிவுறுத்துதல்களை நிறைவேற்றுவதற்கு முடிவுசெய்தால், கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து முன்னங்கீகாரத்தை நாடாமல் அல்லது அவருக்கு அறிவித்தல் இல்லாமல் அறிவுறுத்தலைச் செயற்படுத்தக்கூடும். அதன் மூலம் உருவாக்கப்பட்ட மேலதிகப்பற்று, முற்பணம் அல்லது கடன் என்பவற்றுக்கும் தொடர்புபட்ட எல்லா விதிப்பனவுகளுக்கும் கணக்கு வைத்திருப்பவர் பொறுப்பாக வேண்டும். மேலதிகப்பற்று, முற்பணம் அல்லது கடன், வங்கி தனது தற்றுணிபின்படி தீர்மானிக்கக்கூடிய வட்டி வீதங்களுக்கமைந்தனவாக இருக்கும் என்பதுடன், அத்தகைய கணக்குகளுக்கு ஏற்புடைய வங்கியின் வழமையான நியதி நிபந்தனைகளினால் ஆளுகைக்கும் உட்படும்.

34.

கணக்கு வைத்திருப்பவரினால் விடுக்கப்பட்ட தொலைபேசி அறிவுறுத்துதல்களின் பேரில் வங்கியினால் புரியப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய விபரங்கள், குறித்துரைக்கப்பட்ட பெறுநர் கணக்குகளை வைத்திருப்பவருக்கு(வர்களுக்கு) மற்றும்/அல்லது எவரேனும் கூட்டுக் கணக்கு வைத்திருப்பவருக்கு கணக்கு வைத்திருப்பவரினால் அறிவிக்கப்பட வேண்டும். அத்தகைய ஏதேனும் அறிவித்தலை வழங்குதல் தொடர்பில் வங்கியானது கணக்கு வைத்திருப்பவருக்குப் பொறுப்பாளியாகாது.

35.

அழைப்பு நிலையத்தின் ஊடாக வழங்கப்படும் சேவைகளுக்காக, வங்கியானது அதன் இறுப்பனவுகள் பட்டியலுக்கேற்ப சேவைக் கட்டணங்களை மற்றும்/அல்லது ஏனைய விதிப்பனவுகளை விதிப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளது.

36.

வங்கியானது காலத்திற்குக் காலம் இச் சேவையின் செயற்பாட்டு எல்லைகளிலும் இங்குள்ள விதிகளிலும் எதையேனும் சேர்ப்பதற்கு, நீக்குவதற்கு அல்லது மாற்றுவதற்குக் உரிமை கொண்டுள்ளது. வங்கியானது அத்தகைய மாற்றங்கள், விபரக்கூற்றுடன்

வழங்கப்படும் விபரக்குறிப்பு மற்றும்/அல்லது www.hsbc.lk என்ற வங்கியின் உத்தியோகபூர்வ வலைத்தளம் மற்றும்/அல்லது வங்கியின் கிளைகளில் பார்வைக்கு வைக்கப்படும் விளம்பரங்கள் மூலம் அறிவிக்கப்படும் என்பதுடன், இது கணக்கு வைப்பாளர்களுக்கு முறைப்படி வழங்கப்பட்ட அறிவிப்பாகவும் கொள்ளப்படும். இந்த அறிவித்தல் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 5 நாட்களுக்குப் பின், சம்பந்தப்பட்ட மாற்றம் அமுலுக்கு வரும். இக் காலப்பகுதி முடிவதற்குள் கணக்கு வைப்பாளர் (வைப்பாளர்கள்) சேவையை முடிவுறுத்தி இருக்காவிட்டால், அவர் (அவர்கள்) இந்த மாற்றத்திற்கு உடன்பட்டுள்ளார்(கள்) என்று கொள்ளப்படும்.

37.

தொலைபேசி வங்கிச் சேவையைப் பெறுவதற்காக வங்கியினால் வழங்கப்பட்ட தனிப்பட்ட அடையாள இலக்கம் (PIN) மற்றும் தனிப்பட்ட வங்கிச் சேவை இலக்கம் (PBN) என்பன பயன்படுத்தப்பட்டால் அல்லது இச் சேவையைப் பெறுவதற்காக கணக்கு வைப்பாளரின் (வைப்பாளர்களின்) கடன் அட்டை இலக்கங்கள் பயன்படுத்தப்பட்டால், கணக்கு வைப்பாளர்(கள்) இந்த விதிகளை ஏற்றுக்கொண்டார்(கள்) என்று கருதப்படும்.

38.

வங்கியின் தொலைபேசி வங்கிச் சேவையைப் பயன்படுத்தி வெவ்வேறு நாணயங்களுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களைச் செய்யும்போது, கணக்கு வைத்திருப்பவர்(கள்) இலங்கை மத்திய வங்கியினால் தெரிவிக்கப்பட்டுள்ள நாணயப் பரிவர்த்தனைக் கட்டுபாடுப் பிரமாணங்களுக்குப் பணிந்தொழுக வேண்டும்.

## HSBC Premier SMS விழிப்பூட்டல்கள் (“சேவை”)

39.

வாடிக்கையாளர் இச் சேவையைப் பயன்படுத்தும் காலத்தில் வங்கியின் அறிவுறுத்தல்கள் மற்றும்/அல்லது நடைமுறைகளுக்கு அமைவாகவும் கட்டுப்பட்டும் நடக்க வேண்டும். அத்தகைய அறிவுறுத்தல்கள் மற்றும்/அல்லது நடைமுறைகளுக்கு பணிந்தொழுக வாடிக்கையாளர் தவறுவதால், அவருக்கு ஏற்படக்கூடிய ஏதேனும் இழப்பு, சேதம் மற்றும் செலவுகள் தொடர்பில், வங்கிக்கு எதிரான உரிமைக் கோரல், அடைக்கலம் அல்லது நிவாரணம் எதுவும் வாடிக்கையாளருக்குக் கிடையாது.

40.

ஏதேனும் காரணத்தினால், இச் சேவை தொடர்பாக அல்லது அதன் விளைவாக வாடிக்கையாளருக்கு நேரடியாக அல்லது நேரடியற்ற முறையில் ஏற்படக்கூடிய ஏதேனும் இழப்பு அல்லது சேதத்திற்கு வாடிக்கையாளர் வங்கியைப் பொறுப்பாளியாக்க முடியாது. வாடிக்கையாளர் தவிர்ந்த இன்னுமொருவர் செய்திகளைப் பார்வையிடுதல் அல்லது சேவையைப் பயன்படுத்துதல், கணனி மற்றும் அதன் டேர்மினல் இணைப்புக்களின் அல்லது தரவுகளைச் செயற்படுத்தும் அமைப்பின் அல்லது சொந்தமான அல்லது சொந்தமற்ற அனுப்பீட்டு ஊடகங்களின் செயலிழப்பு அல்லது கோளாறு, வங்கியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட வேறேதும் சூழ்நிலைகள் என்பனவும் இக் காரணங்களுள் அடங்கும்.

41.

வங்கியானது முன்னறிவித்தல் கொடுத்துவிட்டு இச் சேவையை மாற்ற, இடைநிறுத்த மற்றும்/அல்லது முடிவுறுத்த உரிமை கொண்டுள்ளது. இந்த முன்னறிவித்தல் விபரக்கூற்றுடன் வழங்கப்படும் விபரக்குறிப்பு அல்லது இணைப்பு மற்றும்/அல்லது www.hsbc.lk என்ற வலைத்தளம் மற்றும்/அல்லது வங்கியின் கிளைகளில் காட்சிக்கு வைக்கப்படும் விளம்பரங்கள் மூலம் மற்றும்/அல்லது வங்கி பொருத்தமெனக் கருதும் ஏதேனும் இலத்திரனியல்/டிஜிட்டல் சனெல்/ஊடகம் மூலம் அறிவிக்கப்படும். அத்தகைய அறிவித்தல்கள் சேவையின் மாற்றம், இடைநிறுத்தம் மற்றும்/அல்லது முடிவுறுத்தல் பற்றிக் கணக்கு வைத்திருப்பவருக்கு வழங்கப்பட்ட முறையான அறிவித்தலாகக் கொள்ளப்படும்.

42.

வாடிக்கையாளர் ஏழு (07) நாட்களுக்கு முன்பே எழுத்துமூலம் முன்னறிவித்தல் (ஊர்ஜிதப்படுத்தலுக்கு உட்படும்) கொடுப்பதன் மூலம் அல்லது வாடிக்கையாளர் சேவை ஹொட்லைன் (PIN ஊர்ஜிதப்படுத்தல் தேவை) ஊடாக அறிவிப்பதன் மூலம் இச் சேவையின் உபயோகத்தை முடிவுறுத்தும்படி வேண்டுகோள் விடுக்கலாம். சேவையில் ஏதேனும் மாற்றத்தைச் செய்ய வாடிக்கையாளர் விரும்பினால், அவர் அதற்கென ஒரு புதிய விண்ணப்பப் படிவத்தை நிரப்ப வேண்டும்.

43.

சேவையின் உபயோகம் தொடர்பில் அல்லது அதன் விளைவாக வங்கிக்கு ஏற்படக்கூடிய ஏதேனும் இழப்பு, சேதம் மற்றும் செலவுகளுக்கு எதிராகவும் வங்கி முகங்கொடுக்கக்கூடிய சட்ட நடவடிக்கைகள், உரிமைக் கோரிக்கைகள் மற்றும் கோரிக்கைகளுக்கு எதிராகவும் வங்கிக்கு இழப்பெதிர்காப்பு வழங்கவும், அந்த இழப்பெதிர்காப்பைத் தொடர்ந்து பேணி

எல்லா வேளைகளிலும் வங்கியைத் தீங்கிலிருந்து பாதுகாக்கவும் வாடிக்கையாளர் இத்தால் எவ்வித தயக்கமுமின்றி இணங்கிப் பொறுப்பேற்கிறார்.

44.

இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளை எந்த நேரத்திலும் வாடிக்கையாளருக்கு முன்னறிவித்தல் கொடுக்காமலும் மாற்றுவதற்கு வங்கி உரிமை கொண்டுள்ளது. அத்தகைய மாற்றம் நடைமுறைக்கு வந்துள்ளதாக அறிவிக்கப்படும் திகதியிலிருந்து வாடிக்கையாளர் அதற்குப் பூரணமாகக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அத்தகைய மாற்றங்கள் கடிதம் மற்றும்/ அல்லது விபரக்கூற்றுடன் வழங்கப்படும் விபரக்குறிப்பு மற்றும்/அல்லது www.hsbc.lk என்ற வலைத்தளம் மற்றும்/ அல்லது வங்கியின் கிளைகளில் காட்சிக்கு வைக்கப்படும் விளம்பரங்கள் மற்றும்/ அல்லது வங்கியினால் பொருத்தமெனக் கருதப்படும் ஏதேனும் இலத்திரனியல்/ டிஜிட்டல் சனெல்/ ஊடகம் மூலம் வாடிக்கையாளர்களுக்குத் தெரிவிக்கப்படும்.

45.

சில நாடுகளின் ஒழுங்குபடுத்தல் தேவைகள் மற்றும் கட்டுப்பாடுகள் காரணமாக இச் சேவையை அந்த நாடுகளில் பெற முடியாதிருக்கலாம்.

## வட்டி (INTEREST)

46.

சேமிப்பு மற்றும் கால வைப்புக் கணக்குகளின் மீதான வட்டி வீதங்கள் (வெளிநாட்டு நாணயம்/உள்நாட்டு நாணயம்) முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம். எனினும், ஏலவேயுள்ள கால வைப்புக்களைப் பொறுத்தவரையில், அவை முதிர்சியடையும் வரை, ஒப்புக்கொள்ளப்பட்ட வட்டி வீதத்தை வங்கி மாற்றாது.

47.

சேமிப்புக் கணக்குகளுக்கான வட்டியானது நடைமுறையிலுள்ள வட்டி வீதத்திற்கேற்ப நாளாந்த மீதியின் அடிப்படையில் கணிக்கப்பட்டு, மாத முடிவிற்குள் குறிப்பிடப்பட்ட கணக்கில் அல்லது கணக்கு வைப்பாளரினால் (வைப்பாளர்களினால்) குறித்துரைக்கப்பட்ட வேறேதும் கணக்கில் வரவு வைக்கப்படும். ரூபாய் நாணயத்திலான நடைமுறைக் கணக்கிலுள்ள மீதிகளுக்கு எவ்வித வட்டியையும் வங்கி வழங்காது.

## வரிகள் (TAXES)

48.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் தேவைப்படுத்தப்பட்டுள்ளபடி, சகல கணக்கு வைப்பாளர்களும் கணக்கு ஆரம்பப் படிவத்தில் தமது வரி நிலைமை மற்றும் வதிவிட நிலைமை பற்றிய சட்டபூர்வமான பிரகடனத்தைப் பூர்த்திசெய்ய வேண்டும். அப் பிரகடனத்தை உரிய வேளையில் பூர்த்திசெய்யும் பொறுப்பு கணக்கு வைப்பாளர்களைச் சார்ந்ததாகும். கணக்கு வைப்பாளர் தனது வரிப் பொறுப்புக்களை உரிய வேளையில் பிரகடனம் செய்யத் தவறியமை உள்ளிட்ட ஏதேனும் காரணங்களினால், கணக்கு வைப்பாளர் எதிர்நோக்கக்கூடிய ஏதேனும் விளைவுகளுக்கு வங்கி பொறுப்பாளியாகாது. கணக்கு வைப்பாளர்களினால் செய்யப்படும் சட்டபூர்வ பிரகடனம் ஒரே ஆணையளிப்பின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு ஆளுகை செய்யப்படும் சகல தற்போதுள்ள மற்றும் புதிய கணக்குகளுக்கும் பொருந்தும். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் அல்லது பொருத்தமான வேறேதும் அதிகார அமைப்பினால் காலத்திற்குக் காலம் குறித்துரைக்கப்படும் வீதம் அல்லது வீதங்களுக்கு அமைய, வட்டிக் கொடுப்பனவுகளின் மீது விதிக்கப்படும் இடைநிறுத்திவைக்கப்பட்ட வரி அல்லது வேறேதும் வரி குறிப்பிட்ட காலப்பகுதிக்கான வட்டிக் கொடுப்பனவிலிருந்து வங்கியினால் கழிக்கப்படும். சேகரிக்கப்படாத இடைநிறுத்திவைக்கப்பட்ட வரிகளை அல்லது வேறேதும் வரிகளை உள்நாட்டு இணைவரித் திணைக்களம் அல்லது பொருத்தமான அதிகார அமைப்பு பிறிதொரு வேளையில் வங்கியிடமிருந்து கோருமானால், கணக்கு வைப்பாளருக்கு (வைப்பாளர்களுக்கு) அறிவித்தல் கொடுக்காமலே, கணக்கு வைப்பாளரிடம் (வைப்பாளர்களிடம்) இருந்து அவற்றை மீட்க வங்கிக்கு உரிமையுண்டு.

## HSBC Premier உலகளாவிய சேவைகள் (HSBC PREMIER GLOBAL SERVICES)

49.

(a) கணக்கு வைத்திருப்பவருக்கு HSBC Premier உலகளாவிய சேவைகள் வழங்கப்படுமிடத்து, HSBC Premier உலகளாவிய சேவைகளின் கீழ் மாஸ்டர்கார்ட் இன்டர்நஷனலினால் வழங்கப்படும் சேவைகள் எந்த நியதி நிபந்தனைகளின் பிரகாரம் வழங்கப்படுகின்றனவோ, அந்த நியதி நிபந்தனைகளினால் பிணிக்கப்படுவதற்குக் கணக்கு வைத்திருப்பவர் உடன்படுகின்றார்.

(b) கணக்கு வைத்திருப்பவா் பின்வரும் சரத்துக்கள் தொடா்பான வங்கியின் உரிமைகளை (எவ்வித நிபந்தனையுமின்றி) ஏற்றுக்கொள்கிறாா்:

i. பற்று அட்டை வழங்கப்படும்போது.'.புதுப்பிக்கப்படும்போது அதற்கான வருடாந்தக் கட்டணங்கள், நடப்பிலுள்ள இறுப்பனவுப் பட்டியலின்படி கணிக்கப்பட்டு, பிரதான கணக்கில் பற்று வைக்கப்படும். இக் கட்டணங்கள் மீளப்பெற முடியாதவையாகும்.

ii. பற்று அட்டையுடன் தொடர்புபட்ட ஏனைய விதிப்பனவுகள், காலத்திற்குக் காலம் நிலவுகின்ற இறுப்பனவுப் பட்டியலின்படி கணக்கில் பற்று வைக்கப்படும்.

iii. வங்கி அதன் தற்றுணிபின் பேரிலும், அட்டை வைத்திருப்பவருக்கு முன்னறிவித்தல் கொடுக்காமலும், உரிய இறுப்பனவுப் பட்டியலைக் காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்வதற்கு உரிமை கொண்டுள்ளது. அட்டை வைத்திருப்பவா் வேண்டுகோள் விடுக்கும் பட்சத்தில் வங்கியின் இறுப்பனவுப் பட்டியல் பற்றிய கைந்நூல் அவருக்கு வழங்கப்படும்.

iv. வெளிநாட்டு நாணயத்திலான சகல விதிப்பனவுகளும் இலங்கை ரூபாய்களில் கணக்கில் பற்று வைக்கப்படும். வெளிநாட்டு நாணயத்தில் உறப்பட்ட விதிப்பனவுகள் அனைத்தும் HSBC இனால் அல்லது வீசா இன்டர்நஷனலினால் காலத்திற்குக் காலம் கணக்கு வைப்பாளருக்குக் குறித்துரைக்கப்படும் வீதத்தில் அதற்குச் சமமான இலங்கை ரூபாயாக மாற்றப்படுவதற்கும் கணக்கு வைப்பாளர் தொடா்பில் வங்கியானது காலத்திற்குக் காலம் வைத்திருக்கக்கூடிய ஏதேனும் தகவல்களை வெளியிடுவதற்கும் அட்டை வைத்திருப்பவர் HSBC க்கும் வீசா இன்டர்நஷனலுக்கும் இத்தால் அதிகாரமளிக்கின்றார்.

v. கணக்கு வைத்திருப்பவருக்கு (சந்தா்ப்பத்திற்கேற்றவாறு) HSBC Premier உலகளாவிய சேவைகளை வழங்கும் நோக்கங்களுக்காக, கணக்கு வைத்திருப்பவா் பற்றியும் அவரது HSBC Premier மற்றும் மாஸ்டா்காா்ட் கணக்குகள் தொடா்பாகவும் வங்கி காலத்திற்குக் காலம் வைத்திருக்கக்கூடிய ஏதேனும் தகவல்களை Premierக்கும் மாஸ்ட்டர்கார்ட் இன்டர்நஷனலுக்கும் (சந்தா்ப்பத்திற்கேற்றவாறு), அவா்களின் முகவா்கள் மற்றும் மூன்றாம் தரப்பு சேவை வழங்குநா்களுக்கும் பரிமாற்றம் செய்ய அல்லது வெளிப்படுத்த காலத்திற்குக் காலம் நடவடிக்கை எடுக்க முடியும்.

(c) HSBC Premier உலகளாவிய சேவைகளின் கீழ் வழங்கப்படும் சேவைகள், மாஸ்டா்காா்ட் இன்டர்நஷனல், அதன் முகவர்கள், அதனால் நியமிக்கப்பட்ட மூன்றாம் தரப்புச் சேவை வழங்குநர்கள் ஆகியோரினால் வழங்கப்படுகின்றன. அதற்கிணங்க, மாஸ்டா்காா்ட் இன்டர்நஷனல் அல்லது அதன் முகவர்கள் அல்லது மூன்றாம் தரப்புச்

சேவை வழங்குநர்களின் ஏதேனும் செயல் அல்லது தவறுகையில் இருந்து அல்லது பொதுவாக HSBC Premier உலகளாவிய சேவைகள் தொடர்பில் எழுகின்ற எத்தகைய தன்மையினவுமான எவையேனும் வழக்குகள், உரிமைக்கோரிக்கைகள், நட்டம், சேதம் அல்லது பொறுப்பு என்பவற்றிற்கு வங்கி பொறுப்பாளியாகாது.

50.

கணக்கு வைத்திருப்பவருக்கு ஏதேனும் சேவையை வழங்குவது பற்றி வங்கி கவனத்திற்கெடுக்க வழிசெய்யும் வகையில், கணக்கு வைத்திருப்பவர், காலத்திற்குக் காலம் தனிப்பட்ட தரவுகளை வங்கிக்கு வழங்க வேண்டும். அவர் அவ்வாறு செய்யத் தவறினால், அத்தகைய சேவையை அவருக்கு வழங்க முடியாத நிலை வங்கிக்கு ஏற்படக்கூடும்.

51.

கணக்கு வைத்திருப்பவரின் வேண்டுகோளைக் கவனத்துட்கொள்வதற்கு அவரது தனிப்பட்ட தரவுகள் பயன்படுத்தப்படுமென்பதுடன், வங்கி அத்தகைய சேவையை வழங்குவதற்கு உடன்படுவதற்கமைய, வங்கியுடன் கணக்கு வைத்திருப்பவரின் கொடுக்கல் வாங்கல்கள் அல்லது கையாளுகைகள் தொடர்பான தனிப்பட்ட தரவுகளும் மற்றெல்லா விபரங்களும் தகவல்களும், கணக்கு வைத்திருப்பவருக்கு அத்தகைய சேவையை வழங்குவது சம்பந்தமாகப் பயன்படுத்தவும்படும். வங்கியானது, பின்வருவன சம்பந்தமான நோக்கங்களுள் எவற்றுக்கும் மற்றும் எல்லாவற்றுக்குமாக (வரையறையின்றி HSBC குழுமத்தின் எவரேனும் உறுப்பினர் அல்லது ஏதேனும் சேவை வழங்குநருட்பட) வங்கி அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய எல்லா ஆட்களுக்கும், ஆட்களிடமிருந்தும், ஆட்களுடனும் அத்தகைய தனிப்பட்ட தரவுகளையும் அத்தகைய வேறு விபரங்களையும் தகவல்களையும் பயன்படுத்தும், களஞ்சியப்படுத்தும், வெளிப்படுத்தும், கைமாற்றும் (இலங்கையினுள்ளோ இலங்கைக்கு வெளியேயோ), பெற்றுக்கொள்ளும் மற்றும்/அல்லது பரிமாறிக்கொள்ளும்:

(a) (திரட்டிய விபரக்கூற்றுக்களை வழங்குதல் உள்ளிட்ட) சேவைகளை வழங்குதல் சம்பந்தமாக.

(b) எத்தகைய சோக்கத்திற்காகவும் (கணக்கு வைத்திருப்பவருக்கு எதிராக ஏதேனும் பாதகமான நடவடிக்கையை எடுக்கும் அல்லது வேறேதும் நோக்கம்) எவையேனும் தனிப்பட்ட தரவுகளை வங்கியின் உடைமையிலுள்ள தனிப்பட்ட தரவுகளுடன் ஒப்பிடுவதற்காக.

(c) ஏனைய நிதி நிறுவனங்களுக்கு அல்லது வேறு தரப்பினருக்கு கணக்கு வைத்திருப்பவர் பற்றிய சிபாரிசுக் குறிப்பீட்டை வழங்குவதற்காக.

(d) வங்கியினாலும் HSBC குழுமத்தின் வேறொரு அங்கத்தவரினாலும் கணக்கு வைத்திருப்பவருக்கு வழங்கப்படும் பொதுவான சேவைகளை ஊக்குவிப்பதற்கு, முன்னேற்றுவதற்கு மற்றும் அதிகரிப்பதற்கு. மற்றும்/ அல்லது வேறெவையேனும் நோக்கங்களுக்காக, பொதுக் கொள்கைக்கிணங்க காலத்துக்குக் காலம் வங்கியினால் கிடைக்கக்கூடியனவாக்கப்பட்ட கூற்றுக்களிலும் சுற்றறிக்கைகளிலும் அறிவித்தல்களிலும் அல்லது நியதி நிபந்தனைகளிலும் தெரிவிக்கப்பட்டுள்ள ஆட்களுடன் தகவல்களைப் பகிர்ந்துகொள்வதற்காக.

52.

கணக்கு வைத்திருப்பவர், தனிப்பட்ட தரவுகளுள் எவற்றையும் அணுகுவதற்கும் திருத்துவதற்கும் அல்லது நேரடிச் சந்தைப்படுத்தல் நோக்கங்களுக்காக தனிப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தாதுவிடும்படி வேண்டுகோள் விடுப்பதற்கும் உரிமை கொண்டுள்ளார். வேண்டுகோள் எதுவும் எழுத்தில் செய்யப்பட்டு வங்கியினால் காலத்துக்குக்காலம் குறித்துரைக்கப்படக்கூடிய முகவரிக்கும் இலக்கத்துக்கும் தனிப்பட்ட வங்கிச் சேவை முகாமையாளருக்கு முகவரியிட்டனுப்பப்படலாம். வங்கியானது, ஏற்புடையற்பாலனவான எவையேனும் சட்டங்களின் கீழும் ஒழுங்குவிதிகளின் கீழும் அவ்வாறு செய்ய மறுத்தால் அல்லது செய்ய மறுக்கும்படி தேவைப்படுத்தப்பட்டாலொழிய, வங்கி அத்தகைய வேண்டுகோளுக்கு இணங்கியொழுகும்.

53.

(a) கணக்குகளை ஆரம்பித்தல் அல்லது தொடர்ந்து பேணுதல், வங்கித்தொழில் வசதிகளைத் தாபித்தல் அல்லது தொடர்ந்து மேற்கொள்ளுமல் அல்லது வங்கித்தொழிற் சேவைகளை வழங்குதல் என்பன சம்பந்தமான தரவுகளைக் கணக்கு வைத்திருப்பவர் காலத்துக்குக்காலம் வங்கிக்கு வழங்குவது அவசியமாகும். அத்தகைய தரவுகளை வழங்கத் தவறுதல், கணக்குகளைத் ஆரம்பிப்பதற்கு அல்லது தொடர்ந்து நடத்துவதற்கு அல்லது வங்கித்தொழில் வசதிகளைத் தாபிப்பதற்கு அல்லது தொடர்ந்து நடத்துவதற்கு அல்லது வங்கித்தொழில் சேவைகளை வழங்குவதற்கு வங்கிக்கு இயலாமற்போவதை விளைவிக்கலாம். வாடிக்கையாளர்கள் காசோலைகளை எழுதும்போது அல்லது பணத்தை வைப்பிலிடும்போது வங்கித்தொழில் உறவுமுறையின் சாதாரணத் தொடர்ச் செயற்பாட்டின்போதும் வாடிக்கையாளர்களிடமிருந்து தரவுகள் சேகரிக்கப்படுகின்றன.

(b) வாடிக்கையாளர் தொடர்பான தரவுகளை எந்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்த முடியுமோஅந்த நோக்கங்கள் பின்வருமாறு:

i. வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகளினதும் கடன் வசதிகளினதும் நாளாந்தத் தொழிற்பாடு;

ii. கடன் சரிபார்த்தல்களை மேற்கொள்ளுதல்;

iii. கடன் செவ்வை பார்த்தல்களை நடத்துவதற்கும் கடன்களைச் சேகரிப்பதற்கும் ஏனைய நிதி நிறுவனங்களுக்கு உதவுதல்;

iv. கணக்கு வைத்திருப்பவா்களின் கடன்பெறு தகவை உறுதிப்படுத்துதல்.

v. கணக்கு வைத்திருப்பவா்களின் பயன்பாட்டிற்காக நிதிச் சேவைகளை அல்லது தொடா்புடைய வசதிகளை வடிவமைத்தல்.

vi. நிதிச் சேவைகள் மற்றும் தொடா்புடைய வசதிகளைச் சந்தைப்படுத்துதல்.

vii. கணக்கு வைத்திருப்பவா்களின் அல்லது அவா்களுக்கான கடன்படுகைத் தொகையைத் தீர்மானித்தல்;

viii. கணக்கு வைத்திருப்போரிடமிருந்தும் அவா்களின் கடப்பாட்டிற்குப் பிணை வழங்குவோரிடமிருந்தும் கிடைக்க வேண்டிய நிலுவைகளைச் சேகரித்தல்.

ix. வங்கியை அல்லது அதன் கிளைகளுள் எவற்றையும் பிணிக்கின்ற ஏதேனும் சட்டத்தின் தேவைப்படுத்தல்களின் பிரகாரம் வெளிப்படுத்தல் தேவைகளை ஈடுசெய்தல்.

x. வங்கியின் உண்மையான அல்லது உத்தேசிக்கப்பட்ட சாட்டுதல் பெறுநரை அல்லது வாடிக்கையாளர் தொடர்பில் வங்கியினது உரிமைகளின் பங்குபற்றுநரை அல்லது துணைப் பங்குபற்றுநரை, சாட்டுதலில் அல்லது பங்குபற்றுகையில் அல்லது துணைப் பங்குபற்றுகையில் உத்தேசிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கலை மதிப்பீடு செய்வதற்கு இயலச்செய்தல். அத்துடன்

xi. அவற்றுடன் தொடர்புபட்ட நோக்கங்கள்.

(c) ஒரு கணக்கு வைத்திருப்பவர் தொடர்பாக வங்கியினால் வைத்திருக்கப்படும் தரவுகள், வங்கியினால் இரகசியமாக வைத்திருக்கப்படுமென்பதுடன், வங்கியானது பந்தி (b)இல் தரப்பட்டுள்ள நோக்கங்களுக்காகப் பின்வரும் தரப்பினருக்கு அத்தகைய தகவல்களை வழங்கலாம்:

i. வங்கியானது அதன் அலுவல்களைத் தொழிற்படுத்துவது சம்பந்தமாக அதற்கு நிருவாக, தொலைத்தொடர்புகள், கணனி, கொடுப்பனவு அல்லது பிணைப்பொறுப்புகள், தீர்வுசெய்தல் அல்லது வேறு சேவைகளை வழங்குகின்ற எவரேனும் முகவர், ஒப்பந்தக்காரர் அல்லது மூன்றாம் தரப்புச் சேவை வழங்குநர்.

ii. அத்தகைய தகவலை இரகசியமாக வைத்திருப்பதற்குப் பொறுப்பேற்றுள்ள வங்கியின் குழுமக் அங்கத்தவர் உட்பட அந்தரங்கத் தன்மையைப் பாதுகாக்க

iii. செலுத்தப்பட்ட ஒரு காசோலையின் (அது பெறுநர் பற்றிய தகவலைக் கொண்டிருக்கலாம்) பிரதியொன்றை வழங்கும் பணம் செலுத்தும் வங்கி; கடன் தகவல் குறிப்பீட்டு முகவர் நிலையங்கள், மற்றும் தவறுகை புரியப்படும் பட்சத்தில், கடன் சேகரிப்பு நிலையங்கள்.

iv. வங்கியை அல்லது அதன் கிளைகளுள் எவற்றையும் பிணிக்கின்ற ஏதேனும் சட்டத்தின் தேவைப்பாடுகளின் பிரகாரம், எத்தகைய நபர்களுக்கு வெளிப்படுத்தலைச் செய்ய வங்கி கடப்பாடு கொண்டுள்ளதோ அத்தகைய நபர்கள்.

v. வங்கியின் எவரேனும் உண்மையான அல்லது உத்தேசிக்கப்பட்ட சாட்டுதல்பெறுநர் அல்லது பங்குபற்றுநர் அல்லது துணைப் பங்குபற்றுநர் அல்லது வாடிக்கையாளர் தொடர்பிலான வங்கியின் உரிமைகளைக் கைமாற்றம் பெறுபவர். அத்துடன்

vi. நீதிமன்றக் கட்டளை மூலம்

## கூட்டு விபரக்கூற்று (COMPOSITE STATEMENT)

54.

காலத்திற்குக்காலம் வங்கியினால் குறித்துரைக்கப்பட்டவாறு எல்லா HSBC Premier கணக்குகளும் ஏனைய வங்கிச் சேவைகளும் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களையும் மீதிகளையும் காட்டுகின்ற கணக்கு விபரக்கூற்றுக்களை வங்கியானது ஒவ்வொரு மாதமும் (அல்லது கணக்கு வைத்திருப்பவரினால் குறித்துரைக்கப்பட்டவாறு) கணக்கு வைத்திருப்பவருக்கு அனுப்பும். கணக்கு விபரக்கூற்றானது, விபரக்கூற்றுச் சுழற்சியின் முடிவிலிருந்து 10 நாட்களினுள் பெறப்படாவிடின் வங்கிக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். கணக்கு வைத்திருப்பவர், ஒவ்வொரு கணக்கு விபரக்கூற்றையும் பரிசோதித்து, அது பெறப்பட்டதிலிருந்து அல்லது (விடயத்துக்கேற்ப) பதிவஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களினுள், வாய்மொழி மூலம் அல்லது எழுத்தில், எவரேனுமாள் (பொய்யாகப் புனைதல், மோசடி செய்தல், அதிகாரமில்லாதிருத்தல் அல்லது அசட்டைசெய்தல் என்பவற்றிலிருந்தான காரணங்களை வரையறையின்றி உட்படுத்தி) எத்தகையதுமான எக்காரணத்திலிருந்தும் எழுகின்ற அதன்கண்ணுள்ள எவையேனும் சார்த்தப்பட்ட பிழைகளை அல்லது விட்டுவிடுகைகளை வங்கிக்கு அறிவிக்க உடன்படுகின்றார். அவர்; அவ்வாறு செய்யத் தவறினால், திரட்டிய கணக்குக்கூற்றில்

காட்டப்பட்டுள்ள மீதி பற்றி முடிவான சான்றாகும் என்பதுடன் அது கணக்கு வைத்திருப்பவரைப் பிணிப்பதாகவும் அமையும். அத்துடன், கணக்கு வைத்திருப்பவா், அது தொடா்பில் வங்கிக்கெதிராக ஆட்சேபனைகளை எழுப்புவதற்கான அல்லது பரிகாரங்களைக் கோருவதற்கான எவையேனும் உரிமைகளைத் தள்ளுபடி செய்துள்ளாரெனவும் கருதப்படும்.

55.

கணக்கு விபரக்கூற்றுக்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பது கணக்கு வைத்திருப்பவரின் பொறுப்பாகும். கணக்கு விபரக்கூற்றுக்களின் பிரதிகள் வங்கியிடமிருந்து கோரப்பட்டால், வங்கி அதன் வெளியிடப்பட்ட இறுப்பனவுப் பட்டியலுக்கிணங்க அதற்கான விதிப்பனவொன்றை அறவிடுவதற்கு உரிமை கொண்டுள்ளது.

## தொலைபேசிச் சேவைகய் மற்றும் இழப்பெதிர்காப்பு (PHONE SERVICES AND INDEMNITY)

56.

வங்கியினால் வழங்கப்படும் தொலைபேசிச் சேவைகள், பின்வருவன தொடர்பில் தொலைபேசி அறிவுறுத்துதல்களை உள்ளடக்குகின்றன:

i. கணக்கு வைத்திருப்பவரின் கணக்குகளுள் எவற்றுக்குமிடையே நிதிகளைப் பரிமாற்றம் செய்தல். கூட்டுக்கணக்குகளைப் பொறுத்தவரையில், கையொப்ப அறிவுறுத்துதலானது இரு கணக்கு வைத்திருப்பவர்களுள் ஒருவர் கையொப்பமிடுவதாக இருந்தால் மட்டுமே பரிமாற்றங்கள் அனுமதிக்கப்படும். அத்தகைய சந்தர்ப்பங்களில் பரிமாற்றமானது கணக்கு வைத்திருப்பவரின் கூட்டுக் கணக்கிற்கும் மற்றும்/ அல்லது அதே வைப்புக் கணக்கை வைத்திருப்பவரின் தனிப்பட்ட கணக்குகளுக்கும் இடையிலானதாக இருக்க வேண்டும்.

ii. (கணக்கு வைத்திருப்பவரின் கணக்குகள் தொடர்பான) கணக்கு மீதிகள் மற்றும் கடைசிக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றியும் செலாவணிப் பரிவா்த்தனை வீதங்கள் மற்றும் வைப்பு வீதங்கள் பற்றியும் விசாரித்தல்.

iii. கணக்கு வைத்திருப்பவரின் (தெரிவுசெய்த கணக்குகளுக்கான) கணக்குத் விபரக்கூற்றுக்கள், மற்றும் காசோலைப் புத்தகங்களுக்கான வேண்டுகோள்கள் மற்றும் காசோலையை நிறுத்துவதற்கான வேண்டுகோள்கள். அத்துடன் HSBC குழுமத்தினால் அல்லது மாஸ்ட்டர்ட்கார்ட் இன்டர்நஷனலினால் வழங்கப்படும் உலகளாவிய சேவைகள் வங்கி காலத்துக்குக்காலம் அறிமுகப்படுத்தக்கூடிய வேறுவகையினவான வங்கித்தொழில் அல்லது முதலீட்டுச் சேவைகள்.

57.

ஏதேனும் சாதனத்தின் பிறழ்செயற்பாடு அல்லது பழுது உட்பட, வங்கியின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட ஏதேனும் காரணத்தினால் எவையேனும் தொலைபேசி அறிவுறுத்துதல்களை முழுமையாக அல்லது பகுதியளவில் நிறைவேற்றுவதற்குத் தவறியமை தொடர்பில் வங்கியானது கணக்கு வைத்திருப்பவருக்குப் பொறுப்பாளியாகாதென்பதுடன், அந்தத் தொலைபேசி அறிவுறுத்துதல்களை நிறைவேற்றுதல் சம்பந்தமாக அல்லது வேறுவகையாக எழுகின்ற எவையேனும் நேரடியான, நேரடியல்லாத அல்லது விளைவாந்தன்மையினவான நட்டங்களுக்கு வங்கி மற்றும்/அல்லது அதன் அலுவலர்களை கணக்கு வைத்திருப்பவர் எச்சூழ்நிலைகளின் கீழும் பொறுப்பாக்க முடியாது; அத்துடன், வங்கி மற்றும்/அல்லது அதன் அலுவலர்கள் தொலைபேசி அறிவுறுத்துதல்களை ஏற்று அவற்றின்மீது செயலாற்றியமையிலிருந்து அல்லது செயலாற்றத் தவறியமையிலிருந்து அல்லது அது சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது நேரடியற்ற முறையிலோ எழுந்திருக்கக்கூடிய வழக்குகள், வழக்கு நடவடிக்கைகள், உரிமைக்கோரிக்கைகள், நட்டங்கள், சேதவீடுகள், செலவுதொகைகள், செலவுகள் என்பன எல்லாவற்றுக்கெதிராகவும் கணக்கு வைத்திருப்பவர் வங்கிக்கும் அதன் அலுவலர்களுக்கும் எல்லா நேரங்களிலும் இழப்பெதிர்காப்பு வழங்குவதுடன் அவற்றிலிருந்து வங்கி மற்றும்/அல்லது அதன் அலுவலர்களை தீங்கிலிருந்து காத்தலும் வேண்டும்.

58.

இதன்கண்ணுள்ள நியதி நிபந்தனைகளைப் பின்பற்றி தொலைபேசி அறிவுறுத்துதல்களை விடுப்பதற்குக் கணக்கு வைத்திருப்பவருக்குள்ள உரிமை, எல்லா நேரங்களிலும் வங்கியின் தற்றுணிபிற்கமையவிருத்தல் வேண்டுமென்பதுடன், வங்கியானது எந்நேரத்திலும் அத்தகைய உரிமையை முன்னறிவித்தலுடன் இரத்துச்செய்யலாம்..

தொலைபேசி அல்லது வேறு அறிவுறுத்துதல்களின் நோக்கத்துக்காக, கணக்குவைத்திருப்பவரின் கணக்கில் மற்றும்/அல்லது கடன் அட்டைக் கணக்கில் போதிய பணம் (அல்லது முன்னேற்பாடு செய்யப்பட்ட கடன் வசதிகள்) இருப்பதனைக் கணக்கு வைத்திருப்பவர் உறுதிப்படுத்துதல் வேண்டும். அத்தகைய போதாமை எவ்வாறிருப்பினும், வங்கி அதன் தனித் தற்றுணிபின் பேரில் அறிவுறுத்துதல்களை நிறைவேற்றுவதற்கு முடிவு செய்தால், ஏதேனும் தவறுகை காரணமாக எழக்கூடிய எவையேனும் விளைவுகளுக்கு வங்கி பொறுப்பாகாது. கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து முன்னங்கீகாரத்தை நாடாமல் அல்லது அவருக்கு அறிவித்தல் கொடுக்காமல் வங்கி அவ்வாறு செய்யலாமென்பதுடன், கணக்கு வைத்திருப்பவர், அதன் மூலம் உருவாக்கப்பட்ட மேலதிகப்பற்று, முற்பணம் அல்லது கடன் என்பவற்றுக்கும் தொடர்புபட்ட எல்லா விதிப்பனவுகளுக்கும்

பொறுப்பாகவிருத்தலும் வேண்டும். மேலதிகப்பற்று, முற்பணம் கடன் என்பன வங்கி அதன் தற்றுணிபின்படி தீர்மானிக்கக்கூடிய அத்தகைய வட்டி வீதங்களுக்கு உட்படும் என்பதுடன் அத்தகைய கணக்குகளுக்கு ஏற்புடையதான வங்கியின் வழமையான நியதி நிபந்தனைகளினாலும் ஆளுகை செய்யப்படும்.

59.

அழைப்பு நிலையத்தினூடாகப் பதிவு செய்யப்பட்ட சேவைகளுக்காக வங்கியானது வழமையான இறுப்பனவை விதிக்கும்.

60.

வங்கி அதன் தனித் தற்றுணிபில் தகுதியானதெனக் கருதுகின்றவாறாகக் காலத்திற்குக்காலம் சேவைக் கட்டணங்களை மற்றும்/அல்லது ஏனைய விதிப்பனவுகளை விதிப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளது. இந்த அறவீடுகளை எடுத்துக்காட்டும் இறுப்பனவுகள் பட்டியல் www.hsbc.lk என்ற வங்கியின் வலைத்தளம் மற்றும்/அல்லது வங்கியின் கிளைகளிலுள்ள அறிவித்தல் பலகைகளில் பார்வைக்கு வைக்கப்படும்.

61.

வங்கி அதன் தனித் தற்றுணிபின்படி தகுதியானதெனக் கருதுகின்றவாறாகக் காலத்துக்குக் காலம், சேவையின் நோக்கெல்லையை, சேவை இறுப்பனவை மற்றும் இதன்கண்ணுள்ள நியதி நிபந்தனைகளுள் எவற்றையும் நீக்குவதற்கான அல்லது வேறுபடுத்துவதற்கான அல்லது எதையேனும் சேர்ப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளது. திருத்தப்பட்ட நியதி நிபந்தனைகளை அல்லது தொடர்புபட்ட இறுப்பனவுப் பட்டியல் www.hsbc.lk என்ற வங்கியின் வலைத்தளம் மற்றும்/அல்லது வங்கியின் கிளைகளிலுள்ள அறிவித்தல் பலகைகளில் பார்வைக்கு வைக்கப்படுவதன் மூலம் அத்தகைய மாற்றங்கள் பற்றி கணக்கு வைத்திருப்பவர்களுக்கு அறிவித்தல் வழங்கப்படும்.

62.

கணக்கு வைத்திருப்பவரின் கணக்குகள் தொடர்பாகத் தொலைபேசி மூலம் பெறப்பட்ட வேண்டுகோள்களின் ("தகவல்") அடிப்படையில் காலத்துக்குக் காலம் தகவல் வழங்குவதற்கு அல்லது பணத்தைப் பரிமாற்றுவதற்கு வங்கி உடன்படும்போது. அத்தகைய தகவலை நாடுகின்ற அல்லது அத்தகைய பரிமாற்ற அறிவுறுத்துதலை விடுக்கின்ற ஆளின் ("அழைப்பவர்") ஆளடையாளத்தைச் சரிபார்ப்பதற்கு வங்கிக்கு முடியாதிருக்குமென்பதைக் கணக்கு வைத்திருப்பவர் முழுமையாக அறிந்துகொண்டு, பின்வருமாறு நிபந்தனையின்றி அறிக்கையிட்டு அதனை ஏற்றுக்கொள்கிறார்:

(a) வங்கியானது, அத்தகைய அறிவுறுத்துதல்கள் கணக்கு வைத்திருப்பவரினால் விடுக்கப்பட்டுள்ளனவென்ற ஊகத்தின் மீதும் நம்பிக்கையின் மீதும் அதன் தனித் தற்றுணிபின் பேரில், அத்தகைய தகவலைக் கொடுப்பதற்கு அல்லது கணக்கு வைத்திருப்பவரின் கணக்கிலிருந்து கணக்கு வைத்திருப்பவரின் வேறொரு கணக்குக்கு/ களுக்கு மட்டுமே பரிமாற்றத்தைச் செய்வதற்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றது. அதன் விளைவாக நேரடியாக அல்லது நேரடியற்ற முறையில் ஏற்படக்கூடிய ஏதேனும் நட்டத்துக்காக அல்லது சேதத்துக்காக, பாரதூரமான அசட்டையின்றியும் நல்லெண்ணத்துடன் செயற்பட்டிருக்கும் பட்சத்தில் வங்கி பொறுப்பாளியாகாது.

(b) வங்கியானது அழைப்பவரின் நம்பகத்தன்மையைச் சரிபார்ப்பதற்கு நியாயமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும், ஆனால் தொலைபேசி மூலம் பெறப்பட்ட வேண்டுகோள்களைப் பின்பற்றி மேற்கொள்ளப்பட்டட ஏதேனும் செயலுக்காக வங்கியானது, பாரதூரமான அசட்டையின்றியும் நல்லெண்ணத்துடன் செயற்பட்டிருக்கும் பட்சத்தில் கணக்கு வைத்திருப்பவருக்கு அல்லது வேறொரு தரப்பிற்கு எம்முறையிலேனும் பொறுப்பாளியாகாது.

(c) வங்கியினால் அத்தகைய தகவல் வழங்கப்படுவதனை அல்லது நிதிகள் கைமாற்றப்படுவதனைப் பின்பற்றி எவரேனும் தரப்பினரால் வங்கிக்கெதிராகக் கொணரக்கூடிய, அல்லது வங்கியினால் புரியப்பட்ட ஏதேனும் செயல், கருமம் அல்லது காரியம் என்பவற்றிலிருந்து நேரடியாக அல்லது நேரடியற்ற முறையில் வங்கியினால் உறப்படக்கூடிய வழக்குகள், வழக்கு நடவடிக்கைகள், உரிமைக்கோரிக்கைகள், நட்டங்கள், சேதவீடுகள், செலவுதொகைகள் மற்றும் செலவுகள் ஆகிய எல்லாவற்றுக்கெதிராகவும் எல்லா நேரங்களிலும் வங்கிக்கு இழப்பெதிர்காப்பு வழங்குவதற்கும் அதனைத் தீங்கிலிருந்து காப்பதற்கும் கணக்கு வைத்திருப்பவர் உடன்பட்டுப் பொறுப்பேற்கின்றார்.

(d) வங்கியானது பாரதூரமான அசட்டையின்றியும் நல்லெண்ணத்துடன் செயற்பட்டிருக்கும் பட்சத்தில், வங்கியினால் மற்றும்/அல்லது அதன் அலுவலர்களினாலட கணக்கு வைத்திருப்பவருக்குச் செய்யப்பட்ட எவையேனும் கைமாற்றுதல்கள் அல்லது கொடுக்கப்பட்ட ஏதேனும் தகவல் தொடர்பில் அல்லது எவ்வாறாயினும் எழுகின்ற அதன் விளைவான நேரடியாக அல்லது நேரடியற்ற முறையில் எழுகின்ற ஏதேனும் நட்டம் அல்லது சேதம் தொடர்பில் வங்கிக்கு மற்றும்/அல்லது அதன் அலுவலர்களுக்கு எதிராக எத்தகைய

உரிமைக்கோரிக்கைகளையும் கணக்கு வைத்திருப்பவர் கொண்டிருத்தலாகாதெனக் கணக்கு வைத்திருப்பவர் உடன்படுகின்றார்.

## வங்கியின் பாத்திய மற்றும் எதிரீட்டு உரிமை (BANK'S RIGHT OF LIEN AND SET-OFF)

63.

ஏதேனும் கணக்கின் பேரில் வங்கிக்கு உள்ள ஏதேனும் பொதுப் பாத்தியம், எதிரீட்டு உரிமை அல்லது பிணையின் மூலம் வங்கி கொண்டிருக்கும் ஏதேனும் அல்லது வேறேதும் உரிமைக்கு முரணாகாத வகையிலும் அவற்றிற்கு மேலதிகமாகவும், வங்கியானது எந்த நேரத்திலும் முன்னறிவித்தலின்றி பின்வருவனவற்றைச் செய்ய முடியும் என்பதைக் கணக்கு வைப்பாளர் ஏற்றுக்கொள்கிறார்:

(a) கணக்கு வைத்திருப்பவரின் பெயரில் தனியாக அல்லது வேறொரு நபருடன் கூட்டாக ஏதேனும் கணக்கின் அல்லது வேறேதேனும் கணக்கின் வரவிற்கு ஏதேனும் நாணயத்தில் வைத்திருக்கப்பட்ட எவையேனும் பணத்தை ("சொல்லப்பட்ட பணம்"), உள்ளபடியான, எதிர்பாராத, தற்போதைய அல்லது எதிர்கால மற்றும் தனியாக அல்லது வேறொரு நபருடன் கூட்டாக கணக்கு வைத்திருப்பவர் கொண்டுள்ள ஏதேனும் கடன்பாட்டுக்கெதிராக ("சொல்லப்பட்ட கடன்பாடு") (அத்தகைய பயன்பாடு, ஏதேனும் வைப்பின் முதிர்வுத் தேதிக்கு முன்னர் அதனை இடைமுறிப்பதனைத் தேவைப்படுத்தினாலுங்கூட) பயன்படுத்தலாம்; மற்றும்/அல்லது.

(b) கோரப்படும்போது அல்லது கணக்கு வைத்திருப்பவருக்குச் சொல்லப்பட்ட பணத்தில் எவையும் வருமதியாக வரும்போது அல்லது சொல்லப்பட்ட கடன்பாடு பொருத்தமான நேரத்தில் சொல்லப்பட்ட பணத்திற்குச் சமமாகவிருக்கும் அல்லது விஞ்சும் அளவுக்கு அதனை மீளச் செலுத்த மறுக்கலாம்.

64.

கணக்கு வைத்திருப்பவரின் மரணம் அல்லது சட்டபூர்வ இயலாமையினால் வங்கியின் உரிமைகள் பாதிக்கப்பட மாட்டா.

## நியதிச்சட்ட பிரகடனங்கள்/வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனைப் பிரமாணங்கள்

## (STATUTORY DECLARATION / FOREIGN EXCHANGE REGULATIONS)

65.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு கணக்கு வைத்திருப்பவர் கணக்கை ஆரம்பிக்கும் படிவத்தில் அவரது வரி அந்தஸ்து பற்றிய நியதிச்சட்ட முறையான வெளிப்படுத்துகையை நிரப்புதல் வேண்டும். வட்டிக் கொடுப்பனவுகள் மீதான இடைநிறுத்தி வைக்கப்பட்ட வரி, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் விதிக்கப்பட்ட வீதத்தில் அல்லது வீதங்களில் சம்பந்தப்பட்ட காலப்பகுதிக்குச் செலுத்தப்படற்பாலதான வட்டியிலிருந்து வங்கியினால் கழிக்கப்படும்.

66.

இதன்கண் அடங்கியுள்ள சகல நியதி நிபந்தனைகளும், வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனையை ஆளுகை செய்யும் எவையேனும் சட்டங்களின் ஏற்பாடுகள் மற்றும்/அல்லது காலத்துக்குக் காலம் அவற்றின் கீழ் கொண்டுவரப்படும் எவையேனும் பிரமாணங்களுக்கு அமைந்தனவாக இருக்கும்.

## வெளிநாட்டு HSBC Premier சேவைகள் (OVERSEAS HSBC PREMIER SERVICES)

67.

திட்டத்தின் கீழ் கணக்குகள் வைத்திருப்பவர் அனுபவிக்கக்கூடிய சிறப்பம்சங்கள், வங்கியினால் மட்டுமல்லாது இலங்கையிலும் இலங்கைக்கு வெளியேயுமுள்ள ஏனைய HSBC குழும அங்கத்தவர்களினாலும் முனையப்பட்ட கணக்குகள், சேவைகள், வெகுமதிகள், நன்மைகள், சிறப்புரிமைகள் மற்றும் அவை போன்றவற்றை உள்ளடக்கலாம். அவை வங்கித்தொழிலுடன் தொடர்புபட்டவையாக அல்லது தொடர்புபடாதவையாக இருக்கலாம். அத்துடன் வங்கி மற்றும்/அல்லது HSBC குழும அங்கத்தவர்கள் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் பிரகாரம், நேரடியாக வங்கியினாலும் HSBC குழும அங்கத்தவர்களினாலும் அல்லது அவர்களினால் பெயர் குறிக்கப்பட்ட மூன்றாம் தரப்பினராலும் அவை ("சிறப்பம்சங்கள்") வழங்கப்படலாம்.

68.

கணக்கு வைத்திருப்பவர், வங்கியினாலும் HSBC குழுமத்தின் ஏனைய உறுப்பினர்களினாலும் முனையப்பட்ட குறித்த சில சிறப்பம்சங்களை அனுபவிப்பதற்கு உரித்துடையவரா அல்லவா என்பதை ஆராய்ந்து, கணக்கு வைத்திருப்பவர் இச் சிறப்பம்சங்களை அனுபவிப்பதற்குத் தகுதியுடையவராக இருக்கும் பட்சத்தில், கணக்கு வைத்திருப்பவருக்கு அத்தகைய சிறப்பம்சங்களை வங்கியும் HSBC குழும அங்கத்தவா்களும் வழங்குவதனை இயலச்செய்வதற்கு வங்கிக்கும் HSBC குழுமத்தின் ஏனைய அங்கத்தவா்களுக்கும் வசதியளிக்கும் வகையில், கணக்கு வைத்திருப்பவர் சம்பந்தமாக வங்கியினால் மற்றும் HSBC குழும அங்கத்தவா்களினால் வைத்திருக்கப்படும் அல்லது பெறப்பட்ட (கடன் குறிப்பீட்டு முகவர் நிலையங்களிடமிருந்து பெறப்பட்டவையும் உட்படும்) தனிப்பட்ட தரவுகள் வேறு கடன் தகவல்கள், கணக்கு வைத்திருப்பவா் மற்றும் அவரது கணக்குகள் தொடர்பான எல்லாத் தகவல்களையும் பகிா்ந்துகொள்வதற்கு வங்கிக்கும் இந்த HSBC குழும அங்கத்தவா்களுக்கும் கணக்கு வைத்திருப்பவா் முழுமையான அதிகாரத்தை வழங்குகிறாா். வங்கிக்கும் எல்லா HSBC குழும அங்கத்தவா்களுக்குமான (கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு) வங்கிக் கடன்கள் மற்றும் பிரதான கடன்கள் தொடர்பான தகவலை, வரையறையின்றி உட்படுத்தி, இச் சிறப்பம்சங்களை அவர்கள் வழங்குவது சம்பந்தமாக அவசியமென அவர்கள் கருதும் கணக்கு வைத்திருப்பவர் தொடர்பான எல்லாத் தகவல்களையும் (சம்பந்தப்பட்ட நியாயாதிக்கத்தினுள்ளோ அதற்குவெளியிலோ மற்றும் HSBC குழுமத்தினுள்ளோ அதற்கு வெளியிலோ) பயன்படுத்துவதற்கும் களஞ்சியப்படுத்துவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் வெளிப்படுத்துவதற்கும், பகிா்ந்துகொள்வதற்கும் மேலும் அதிகாரமளிக்கின்றார்.

69.

HSBC குழுமத்தின் ஏனைய அங்கத்தவா்களினால் கணக்கு வைத்திருப்பவருக்கு வழங்கப்படும் சிறப்பம்சங்கள், வங்கி அல்லது HSBC குழுமத்தின் மற்றுமொரு அங்கத்தவா் வேறு வகையாகத் தீர்மானித்தாலொழிய, எல்லா நேரங்களிலும் கணக்கு வைத்திருப்பவர் வங்கியினால் (அல்லது ஏற்புடையதாயின், HSBC குழுமத்தின் மற்றுமொரு அங்கத்தவரினால்) திட்டம் குறித்தொதுக்கப்பட்டவராகவும் அதனைப் பேணுபவராகவும் இருக்க வேண்டுமென்ற நிபந்தனைக்கு உட்படும். இச் சிறப்பம்சங்களுள் ஒவ்வொன்றும், வங்கியினால் மற்றும்/அல்லது HSBC குழுமத்தின் பொருத்தமான அங்கத்தவரினால் குறித்துரைக்கப்பட்ட சில நியதி நிபந்தனைகளுக்கு உட்படும் என்பதைக் கணக்கு வைத்திருப்பவர் ஏற்றுக்கொள்வதுடன் அதனால் பிணிக்கப்படுவதற்கும் உடன்படுகின்றார்.

70.

வங்கியினால் வழங்கப்பட்ட திட்டம், கணக்கு வைத்திருப்பவருக்கு ஏதேனும் வங்கிச் சேவை அல்லது கடன் வசதியின் முனைவை உள்ளடக்குமிடத்து, அத்தகைய வங்கிச் சேவை அல்லது கடன்வசதிகள் வருமதியாகவும் செலுத்தப்படற்பாலனவாகவும் வருகின்றபோது அவற்றைத் திருப்பிக்கொடுப்பதற்கான கடப்பாடுகளில் கணக்கு வைத்திருப்பவர் தவறுகை புரியும் பட்சத்தில், வங்கியானது பின்வருவனவற்றைச் செய்ய முடியும் என்பதைக் கணக்கு வைத்திருப்பவர் ஏற்றுக்கொண்டு, அதற்கு அதிகாரமளிக்கின்றார் ("வங்கிக் கடன்கள்"):

(a) வங்கிக்காகவும் வங்கியின் சார்பிலும் HSBC அங்கத்தவர் வங்கிக் கடன்களைச் சேகரிக்கலாம்;

(b) கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து வருமதியாகவுள்ள ஏதேனும் நிலுவையான அல்லது காலங்கடந்த தொகையையும் வங்கியின் பெயரில் கணக்கு வைத்திருப்பவரினால் கொடுக்கப்பட்ட ஏதேனும் இழப்பீட்டையும் சேகரிப்பதற்கு, சேகரிப்பு முகவர்(கள்) அல்லது மூன்றாம் தரப்பினரைத் தொழிலுக்கமர்த்த HSBC அங்கத்தவருக்குள்ள உரிமை எல்லா நோக்கங்களுக்காகவும் வங்கிக் கடன்களையும் உள்ளடக்கும்;

(c) வங்கியானது எந்நேரத்திலும் காலத்துக்குக் காலமும் வங்கிக் கடன்களின் முழுத்தொகையை அல்லது அதிலொரு பகுதியை (பகுதிகளை) HSBC அங்கத்தவருக்குச் சார்பாகக் குறித்தளிக்கலாம்;

(d) HSBC அங்கத்தவர் அதன் பெயரிலான வங்கிக் கடன்களின் ஒரு குறித்தளித்தலை ஏற்றுக்கொள்ளலாமென்பதுடன், அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அத்தகைய வங்கிக் கடன்கள் தொடர்பில் அதன் எதிரீட்டு உரிமையையும் பிரயோகிக்கலாம்;

(e) பொருத்தமான எல்லாச் சட்டங்களினாலும் ஒழுங்குவிதிகளினாலும் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு, வங்கிக் கடன்களின் ஏதேனும் குறித்தளித்தலும் அத்தகைய குறித்தளிக்கப்பட்ட கடன்களுக்கெதிராக எதிரீட்டுரிமையைப் பிரயோகிப்பதற்கு HSBC அங்கத்தவருக்குள்ள உரிமைகள் தொடர்பாக கணக்கு வைத்திருப்பவர் தனக்குள்ள எல்லா உரிமைகளையும் தள்ளுபடி செய்கின்றார்;

(f) வங்கிக் கடன்களை மீட்பதில் உறப்பட்ட நியாயமான சட்டக் கட்டணங்கள், மற்றும் வேறு கட்டணங்கள், விதிப்பனவுகள் மற்றும் செலவுகள் என்பவற்றை வரையறையின்றி உட்படுத்தி, வங்கிக் கடன்களின் விளைவான அல்லது அவற்றிலிருந்து எழுகின்ற நேரடியாக அல்லது நேரடியற்ற முறையில் வங்கியும் HSBC அங்கத்தவரும் உற்றிருந்த அல்லது அடைந்திருந்த கட்டணங்கள், விதிப்பனவுகள், நட்டம், செலவுகள் என்பவற்றுக்கும் இவ் வாசகம் 70 ஏற்புடையதாதல் வேண்டும்.

71.

வங்கி தவிர்ந்த HSBC குழும அங்கத்தவர் ஒருவரினால் ("HSBC அங்கத்தவர்") வழங்கப்பட்ட திட்டம், கணக்கு வைத்திருப்பவருக்கு ஏதேனும் வங்கிச் சேவை அல்லது கடன் வசதியின் முனைவை உள்ளடக்குமிடத்து, அத்தகைய வங்கிச் சேவை அல்லது கடன்வசதிகள் வருமதியாகவும் செலுத்தப்படற்பாலனவாகவும் வருகின்றபோது அவற்றைத் திருப்பிக்கொடுப்பதற்கான கடப்பாடுகளில் கணக்கு வைத்திருப்பவர் தவறுகை புரியும் பட்சத்தில், வங்கியானது பின்வருவனவற்றைச் செய்ய முடியும் என்பதைக் கணக்கு வைத்திருப்பவர் ஏற்றுக்கொண்டு, அதற்கு அதிகாரமளிக்கின்றார் ("வங்கிக் கடன்கள்"):

(a) HSBC அங்கத்தவருக்காகவும் அந்த அங்கத்தவரின் சார்பிலும் வங்கியானது கடன்களைச் சேகரிக்க முடியும்;

(b) கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து வருமதியாகவுள்ள ஏதேனும் நிலுவையான அல்லது காலங்கடந்த தொகையையும் வங்கியின் பெயரில் கணக்கு வைத்திருப்பவரினால் கொடுக்கப்பட்ட ஏதேனும் இழப்பீட்டையும் சேகரிப்பதற்கு, சேகரிப்பு முகவர்(கள்) அல்லது மூன்றாம் தரப்பினரைத் தொழிலுக்கமர்த்த வங்கிக்குள்ள உரிமை எல்லா நோக்கங்களுக்காகவும் HSBC அங்கத்தவருக்கான கடன்களையும் உள்ளடக்கும்;

(c) HSBC அங்கத்தவர் எந்நேரத்திலும் காலத்துக்குக் காலமும் அங்கத்தவர் கடன்களின் முழுத்தொகையை அல்லது அதிலொரு பகுதியை (பகுதிகளை) வங்கிக்குச் சார்பாகக் குறித்தளிக்கலாம்;

(d) வங்கி அதன் பெயரிலான அங்கத்தவர் கடன்களின் ஒரு குறித்தளித்தலை ஏற்றுக்கொள்ளலாமென்பதுடன், அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அத்தகைய அங்கத்தவர் கடன்கள் தொடர்பில் அதன் எதிரீட்டு உரிமையைப் பிரயோகிக்கவும் முடியும்;

(e) பொருத்தமான எல்லாச் சட்டங்களினாலும் ஒழுங்குவிதிகளினாலும் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு, அங்கத்தவர் கடன்களின் ஏதேனும் ஒப்படைப்பு மற்றும் அத்தகைய ஒப்படைக்கப்பட்ட கடன்களுக்கெதிராக எதிரீட்டுரிமையைப் பிரயோகிப்பதற்கு வங்கிக்குள்ள உரிமைகள் தொடர்பாக கணக்கு வைத்திருப்பவர் தனக்குள்ள எல்லா உரிமைகளையும் தள்ளுபடி செய்கின்றார்.

(f) அங்கத்தவர் கடன்களை மீட்பதில் உறப்பட்ட நியாயமான சட்டக் கட்டணங்கள், மற்றும் வேறு கட்டணங்கள், விதிப்பனவுகள் மற்றும் செலவுகள் என்பவற்றை வரையறையின்றி உட்படுத்தி, வங்கிக் கடன்களின் விளைவான அல்லது அவற்றிலிருந்து எழுகின்ற நேரடியாக அல்லது நேரடியற்ற முறையில் வங்கியும் HSBC அங்கத்தவரும் உற்றிருந்த அல்லது அடைந்திருந்த கட்டணங்கள், விதிப்பனவுகள், நட்டம், செலவுகள் என்பவற்றுக்கும் இவ் வாசகம் 71 ஏற்புடையதாதல் வேண்டும்.

72.

வங்கி உள்ளிட்ட ஒரு HSBC குழும அங்கத்தவரினால் வழங்கப்படும் வசதிகளில் ஏதேனும் வங்கிச் சேவை அல்லது கடன் வசதி உள்ளடங்கியிருக்கும் பட்சத்தில், அத்தகைய வசதிகளில் ஒன்று அல்லது பல தொடர்பில் கணக்கு வைப்பாளர் ஏதேனும் தவறுகை செய்தால், ஏதேனும் அல்லது சகல HSBC குழும அங்கத்தவர்களும் அவர்களினால் வழங்கப்பட்ட ஏதேனும் அல்லது சகல வசதிகளையும் வாபஸ் பெற்றுக்கொள்ளஇ இடைநிறுத்திவைக்க, இரத்துச்செய்ய அல்லது மாற்றிக்கொள்ளக்கூடும் என்பதை கணக்கு வைப்பாளர் புரிந்துகொண்டு அதற்கு உடன்படுகின்றார். கணக்கு வைப்பாளர் கூடுதலான வட்டி, கட்டணங்கள், அறவீடுகள் மற்றும் செலவுகளுக்கும் முகங்கொடுக்க நேரிடும். இதனால் கணக்கு வைப்பாளர் உறக்கூடிய அதிகரித்த வட்டி, கட்டணங்கள், அறவீடுகள் கிரயங்கள் மற்றும் செலவுகள் அல்லது வேறேதும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகளுக்கு (புதியவை அல்லது சேர்க்கப்பட்டவை) எந்தச் சூழ்நிலையிலும் HSBC குழுமத்தைப் பொறுப்பாளியாக்க முடியாது.

73.

வங்கிக்கோ HSBC குழுமத்தின் எவரேனும் அங்கத்தவருக்கோ, கணக்கு வைத்திருப்பவரினால் செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் பணத் தொகையிலிருந்து ஏதேனும் கழிப்பனவை அல்லது பிடித்துவைத்தலைச் செய்வதற்கு (HSBC குழும அங்கத்துவர் ஒருவரினால் வழங்கப்பட்ட சிறப்பு வசதியொன்று எந்த நியாயாதிக்கத்தில் அனுபவிக்கப்படுகிறதோ அந்த நியாயாதிக்கத்திலுள்ள சட்டங்களும் ஒழுங்குவிதிகளும்

உட்படட) எவையேனும் ஏற்புடைய சட்டங்களினால் அல்லது ஒழுங்குவிதிகளினால் கணக்கு வைத்திருப்பவர் தேவைப்படுத்தப்படின், அக் கழிப்பனவு அல்லது பிடித்துவைத்தல் தொடர்பிலான பொறுப்பு, அத்தகைய கழிப்பனவு அல்லது பிடித்துவைத்தல் செய்யப்பட்ட பின்னர், தேறிய கொடுப்பனவு, அத்தகைய கழிப்பனவு அல்லது பிடித்துவைத்தல் எதுவும் செய்யப்பட்டிராதிருப்பின், வங்கி அல்லது அத்தகைய வேறு HSBC குழும அங்கத்தவர் பெற்றிருக்கக்கூடிய தொகைக்குச் சமமாகவிருத்தல் வேண்டும். பொருத்தமான கால எல்லையினுள் பொருத்தமான அதிகாரிக்கு அத்தகைய கழிப்பனவு அல்லது பிடித்துவைத்தலுக்கான கொடுப்பனவைச் செய்வது கணக்கு வைத்திருப்பவரின் தனிப் பொறுப்பாதல் வேண்டும. கணக்கு வைத்திருப்பவர் அவ்வாறு செய்யத் தவறுவதால் ஏற்படக்கூடிய எல்லா விளைவுகளுக்காகவும் கணக்கு வைத்திருப்பவர் வங்கிக்கும் HSBC குழுமத்தின் ஏனைய அங்கத்தவர்களுக்கும் இழப்பெதிர்காப்பு வழங்க வேண்டும்.

74.

இதன்கண் அடங்கியுள்ள சகல நியதி நிபந்தனைகளும், வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனையை ஆளுகை செய்யும் எவையேனும் சட்டங்களின் ஏற்பாடுகள் மற்றும் காலத்துக்குக் காலம் அவற்றின் கீழ் கொண்டுவரப்படும் எவையேனும் பிரமாணங்களுக்கு அமைந்தனவாக இருக்கும்.

75.

இலத்திரனியல் மூலமான வங்கிக் கொடுக்கல் வாங்கல்களைச் செயற்படுத்துவதற்காக ஒரு கணக்குடன் Global View அணுகல் வசதி இணைக்கப்பட்டிருக்குமாயின், அந்த வசதியின் பாவனையானது வங்கியின் குளோபல் வியூ வசதிக்காகக் குறித்துரைக்கப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்படும். இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் பிரதிகளை வங்கியின் எந்தவொரு கிளையிலும் கேட்டுப் பெறலாம். அல்லது வங்கியின் இணையத்தளத்திலும் பார்வையிடலாம். Global View வசதியைக் கொண்டுள்ள கணக்கு வைத்திருப்பவர் அந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளை இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் சேர்த்து வாசிக்க வேண்டும்.

கணக்கு வைத்திருப்பவர் குளோபல் வியூ மூலம் மேற்கொள்ளும் கொடுக்கல் வாங்கல்கள் காரணமாக ஏதேனும் சர்ச்சை ஏற்படுமாயின் வங்கி அதனை விசாரிக்கும். வங்கிக்குத் திருப்தியளிக்கும் முறையில் வேறு விதமாக நிரூபிக்கப்படாவிட்டால், இந்த வழியில் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் கொடுக்கல் வாங்கலுக்கு கணக்கு வைத்திருப்பவரே பொறுப்பாளியாவார்.

## பொது (GENERAL)

76.

(a) வங்கி கொண்டுடிருக்கக்கூடிய ஏதேனும் உரிமைகளுக்கு முரணாகாத வகையில், இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக அல்லது வேறேதும் முறையில், வங்கியினால் கணக்கு வைப்பாளருக்கு/வைப்பாளர்களுக்கு வழங்கப்படும் ஏதேனும் வங்கிச் சேவைகள் யாவும் கட்டணங்கள், கிரயங்கள், அறவீடுகள், வட்டி மற்றும் வங்கியினால் உறப்படும் பொருத்தமான மற்றேதும் செலவுகளுக்கு உட்படும் என்பதைக் கணக்கு வைப்பாள்/கள் ஏற்றுக்கொள்கிறார்/ஏற்றுக்கொள்கின்றனர்.

(b) வங்கிக் கொடுக்கல் வாங்கல்களின் இரத்துச்செய்கை, வெளிநாட்டு நாணயமாற்று சார்ந்த வங்கி வசதிகள் மற்றும் சேவைகளின் இரத்துச்செய்கை மற்றும்/அல்லது திருத்தம் மற்றும்/அல்லது இரட்டிப்பு, வட்டி வீதங்கள், பண்டங்கள் அல்லது ஏதேனும் அனுமதிக்கப்பட்ட சொத்து வகைகள் தொடர்பான ஏதேனும் காரணம் தொடர்பில் வங்கியினால் உறப்படும் மற்றும்/அல்லது கணக்கு வைப்பாளரினால்/ வைப்பாளர்களினால் வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் கட்டணங்கள், கிரயங்கள், அறவீடுகள், வட்டி மற்றும் வேறு செலவுகள் யாவும், சம்பந்தப்பட்ட வங்கி வசதிகள் மற்றும் சேவைகளின் தன்மையைக் கருதாமலும், கொடுக்கல் வாங்கல் முறையைக் கருதாமலும், எந்த நேரத்திலும் முன்னறிவித்தல் இல்லாமலே, கணக்கு வைப்பாளர்/கள்) வங்கியில் வைத்திருக்கும் கணக்கில்/ கணக்குகளில் பற்றுவைக்கப்படும் என்பதையும் கணக்கு வைப்பாளர்/கள் ஏற்றுக்கொள்கின்றனர்.

77.

## நானாவித ஏற்பாடுகள் (MISCELLANEOUS PROVISIONS)

i. சேகரிக்கும் முகவர் - கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து வருமதியாகவிருக்கும் எவையேனும் நிலுவைகளை அல்லது காலங்கடந்த தொகைகளைச் சேகரிப்பதற்கு வங்கி மூன்றாம் தரப்பினரைத் தொழிலுக்கமர்த்தலாம். அத்தகைய நிலுவையாகவுள்ள அல்லது காலங்கடந்த தொகையை அறவிடுவதில் உறப்பட்ட செலவு தொகைகளுக்காகவும் (சட்டக் கட்டணங்கள் உட்பட) செலவுகளுக்காகவும் கணக்கு வைத்திருப்பவர் வங்கிக்கு இழப்பெதிர்காப்பு வழங்க வேண்டும்.

ii. ஒலிப் பதிவு - சேவைகளை வழங்கும் செயற்பாட்டின்போது, அத்தகைய சேவைகள் தொடர்பாகக் கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து பெறப்பட்ட வாய்மொழிமூல அறிவுறுத்துதல்களை மற்றும்/அல்லது கணக்கு வைத்திருப்பவருக்கும் வங்கிக்கும் (அல்லது அதன் முகவருக்கும்) இடையேயான

ஏதேனும் வாய்மொழிமூல உரையாடல்களை ஒலிப்பதிவு செய்யும் தேவை வங்கிக்கு (அல்லது அதன் முகவருக்கு) ஏற்படலாம் (ஆனால் அவ்வாறு செய்ய வேண்டுமென்ற கடப்பாடு கிடையாது).

iii. விலக்களிப்புகளும் பரிகாரங்களும் - இதன் கீழான ஏதேனும் உரிமையை, தத்துவத்தை அல்லது சிறப்புரிமையைப் பிரயோகிப்பதில் வங்கியின் ஏதேனும் தவறுகை அல்லது தாமதம் அதன் விலக்களிப்பாகக் கொள்ளப்படலாகாது. அத்துடன், ஏதேனும் தனியான அல்லது பகுதியளவிலான பிரயோகம், அதன் வேறேதேனும் பிரயோகத்தை அல்லது வேறேதேனும் உரிமையின், தத்துவத்தின் அல்லது சிறப்புரிமையின் பிரயோகத்தைத் தடைசெய்யவும் மாட்டாது. இதன்கண் வங்கிக்கு வழங்கப்பட்ட எவையேனும் பரிகாரங்கள், வேறேதேனும் பரிகாரத்துக்குப் புறநீங்கலானதாக இருக்காது. ஒவ்வொரு பரிகாரமும் திரண்டதாகவும், நியதிச்சட்டத்தின் மூலம் அல்லது வேறு வகையாக இதன்கீழ் கொடுக்கப்பட்ட அல்லது இப்போது அல்லது இதன் பின்னர் சட்டத்தில் அல்லது ஒப்புரவில் உளதாயுள்ள வேறு ஒவ்வொரு பரிகாரத்துக்கும் மேலதிகமானதாகவும் இருக்கும்.

iv. பகுதியளவிலான செல்லுபடியின்மை - இங்குள்ள ஏதேனும் ஏற்பாடு, ஏற்புடையற்பாலதான ஏதேனும் சட்டத்தின் கீழ் சட்டவிரோதமானது, செல்லுபடியற்றது அல்லது அமுலாக்க முடியாததென என அறிக்கையிடப்பட்டால் அல்லது தீர்ப்பளிக்கப்பட்டால், அத்தகைய சட்டவிரோதத் தன்மை, செல்லுபடியற்ற தன்மை அல்லது அமுலாக்கத் தன்மை, ஏனைய ஏற்பாடுகள் எவற்றையும் பாதிக்காது.

v. வங்கியின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட தவறுதல் - வங்கியானது, அதன் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட எவையேனும் காரணங்களின் விளைவாக (நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல்) இதன் கீழான ஏதேனும் சேவையை வழங்குவதற்கான அல்லது ஏதேனும் கடப்பாட்டை ஈடுசெய்வதற்கான ஏதேனும் தவறுதலுக்கு அல்லது தாமதத்திற்குப் பொறுப்பாளியாகாது.

vi. முகவரை நியமித்தல் - வங்கியானது, இதன் கீழுள்ள அதன் கடப்பாடுகளுள் எவற்றையும் நிறைவேற்றுவதற்கு எவரேனும் முகவரை, சேவை வழங்குநரை அல்லது உப ஒபந்தக்காரரை நியமிக்கலாம்.

vii. வங்கியினாலான சாட்டுதல் - வங்கி, எந்நேரத்திலும், இதன் கீழான அதன் உரிமைகள் மற்றும் கடப்பாடுகளுள் எவற்றையும் அல்லது எல்லாவற்றையும், கணக்கு வைத்திருப்பவரின் உடன்பாடின்றி எவரேனுமாளுக்குச் சாட்டுதல் செய்யலாம் அல்லது கைமாற்றலாம்.

viii. அடையாள முத்திரை முதலியன காணாமற்போதல் - ஆளடையாள ஆவணம், இலச்சினை அல்லது சேவைகளின் பயன்பாடு தொடர்பில் வங்கிக்கு அறிவுறுத்துதல்களை வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும் அனுமதிப்பத்திரம்

காணாமற்போகும் பட்சத்தில், கணக்கு வைத்திருப்பவர் உடனடியாக வங்கிக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும். அத்தகைய எழுத்திலான அறிவித்தல் கிடைப்பதற்கு முன்னர் செய்யப்பட்ட ஏதேனும் கொடுப்பனவுக்கு வங்கி பொறுப்பாகாது.

ix. தற்போதுள்ள வைப்புத் தொகையை அதிகரிக்கும் பொருட்டு மேலுமொரு தொகையுடன் சேர்த்து மீள முதலீடு செய்யும் நோக்கம் உள்ளிட்ட ஏதேனும் காரணத்திற்காக முதிர்ச்சிக்கு முன்பே வைப்புத் தொகை மீளப் பெறப்படுமாயின், அதற்காகவும் தண்டக் கட்டணம் அறவிடப்படும். வங்கி தனது தற்றுணிபின் பேரில் தீர்மானிக்கும் இத் தண்டக் கட்டணம் ஆரம்ப வைத்புத் தொகையிலிருந்து கழிக்கப்படலாம் என்பதால், ஆரம்ப வைப்புத் தொகையில் குறைவு ஏற்படக்கூடும். வங்கியின் தனித் தற்றுணிபிற்கேற்ப முதிர்ச்சிக்கு முன்பே விடுவிக்கப்பட்ட வைப்புக்கள் வங்கியின் விதிப்பனவுகள் அட்டவணையில் குறித்துரைக்கப்பட் தண்டக் கட்டணங்களுக்கு உட்படுத்தப்படும்.

78.

எல்லாக் கணக்குகளுக்குமான விபரக்கூற்றுக்கள், உறுதிச்சீட்டுக்கள், மீளப்பெறுதல்/வைப்புச் சீட்டுகள், காசோலைகள் அல்லது வேறேதேனும் கொடுக்கல் வாங்கல் பதிவேடுகள் என்பவற்றின் பிரதிகளை 07 ஆண்டுக் காலப்பகுதிக்கு மட்டுமே வங்கி வைத்திருக்கும். அத்தகைய எல்லாப் பதிவேடுகளும் 07 ஆண்டுகளுக்குப் பின்னர் அழிக்கப்படுமென்பதுடன், விபரக்கூற்றுக்களின் அல்லது கொடுக்கல் வாங்கல் பதிவேடுகளின் பிரதிகளை 07 ஆண்டுகளுக்குப் பின்னர் வழங்குவதற்கான ஏதேனும் பொறுப்பை அல்லது பொறுப்புடைமையை வங்கி ஏற்கவும் மாட்டாது.

79.

திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வங்கி வசதிகள் மற்றும் சேவைகளையும் இங்கு தெரிவக்கப்பட்டுள்ள அல்லது சம்பந்தப்பட்ட வங்கி வசதிகள் மற்றும் சேவைகள் தொடர்பான நியதி நிபந்தனைகளையும், முழுமையாக அல்லது பகுதியளவில், எதனையும் சேர்ப்பதற்கு, நேர்மாற்றம் செய்வதற்கு, திருத்துவதற்கு அல்லது இரத்துச்செய்வதற்கு வங்கி உரிமை கொண்டுள்ளது. அத்தகைய ஏதேனும் சேர்ப்பு, நேர்மாற்றம், திருத்தம், இரத்துச்செய்கை அல்லது ஏதேனும் மாற்றங்கள் கடிதம், விபரக்கூற்றுடன் இணைக்கப்படும் தகவல், கிளைகளிலுள்ள அறிவித்தல் பலகைகளில் பார்வைக்கு வைக்கப்படும் விளம்பரம் அல்லது www.hsbc.lk என்ற வங்கியின் வலைத்தளம் மற்றும்/அல்லது வங்கி பொருத்தமெனக் கருதும் ஏதேனும் இலத்திரனியல்/டிஜிட்டல் சனெலின்/ஊடகத்தின் மூலம் கணக்கு வைத்திருப்பவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும்.

80.

திட்டம் தொடர்பாக வங்கிக்கு வழங்கப்பட்ட சகல தகவல்களும் கணக்கு வைத்திருப்பவரின் அறிவுக்கெட்டிய வரை சரியானவை என்பதைக் கணக்கு வைத்திருப்பவர் உறுதிப்படுத்துகிறார். அவற்றில் ஏதேனும் மாற்றங்கள், குறிப்பாக கணக்கு வைத்திருப்பவரின் முகவரியில் மாற்றம், ஏற்படுமாயின் கணக்கு வைத்திருப்பவர் உடனடியாக அது பற்றி வங்கிக்கு அறிவிக்க வேண்டும்.

81.

வாடிக்கையாளர் தொடர்பான கணக்குத் தகவல் உட்பட்ட சகல தரவுகளும் வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட ஆளணியினரினதும், அதன் தலைமையலுவலகத்தினதும், HSBC யின் கிளைய அவலகங்களினதும், HSBC குழுமத்தின் ஏனைய அங்கத்தவர்கள்/இணை அங்கத்தவர்களினதும் அல்லது எவரேனும் தரவு செய்முறைப்படுத்தல் சேவை வழங்குநரினதும் அல்லது கணக்குகள் பற்றிய விபரக்கூற்றை அச்சிட்டு அஞ்சலிலிடுவதற்காக வங்கியினால் ஈடுபடுத்தப்பட்ட எவரேனுமாளினதும் அல்லது வங்கி அதன் அலுவல்களின் சாதாரண தொழிற்பாட்டிற்கு அவசியமெனக் கருதும் சேவைகளை வழங்குதல், அச்சிடுதல் அல்லது வேறேதும் ஒத்த சேவைகளின் பொறுப்பை எந்த ஆளுக்கு அளிக்கின்றதோ அந்த எவரேனும் ஆளினதும் அபிப்பிராயத்தில், நிருவாகமற்றும் உள்ளகக் கண்காணிப்புத தேவைப்பாடுகளுட்பட்ட ஏதேனும் நோக்கத்துக்காக அத்தகைய அனுப்புகை, களஞ்சியப்படுத்துகை மற்றும்/ அல்லது அணுகுகை அவசியமாகவுள்ளவிடத்து, அவர்களினால் அனுப்பப்படலாம் மற்றும்/அல்லது ஏதேனும் இடத்தில் களஞ்சியப்படுத்தப்படலாம் அல்லது வைத்திருக்கப்படலாம் மற்றும் அணுகப்படலாம் என்பதைக் கணக்கு வைத்திருப்பவர் ஏற்றுக்கொண்டு, அதற்கு இணங்குகின்றார். எவ்வாறாயினும், ஐக்கிய இராச்சியத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் சட்டம் அல்லது ஐரோப்பிய ஒன்றியப் பணிப்புரையின் பிரகாரம், இவ்வேற்பாட்டின் நியதிகளின்படி களஞ்சியப்படுத்தப்பட்ட தரவுகளைப் பெறுவதற்கு கணக்கு வைத்திருப்பவர் உரித்துடையவராதல் வேண்டும்.

82.

i. வங்கி, காலத்துக்குக்காலம், வெவ்வேறு சியப்பம்சங்களைக் கொண்ட ஒரு படிநிலயை (அல்லது அதற்கு மேற்பட்ட படிநிலைகளைப்) குறித்துரைக்கலாம். இவை, வேறு கணக்குகளின் மீதான அதிகரித்த சேவைகள், முன்னுரிமை நியதிகள், முன்னுரிமை வட்டி வீதங்கள் மற்றும்/அல்லது விசேட ஊக்குவிப்புகள் என்பவற்றை உள்ளடக்கக்கூடும். வங்கியானது, கணக்கு வைத்திருப்பவரின் வேண்டுகோளின் பேரில் அல்லது வங்கியின் தனித் தற்றுணிபின்படி நடப்பு HSBC

Premier கணக்கை வைத்திருக்கும் கணக்கு வைத்திருப்பவருக்குப் படிநிலையொன்றைக் குறித்தொதுக்கலாம். (ஆனால் அவ்வாறு செய்வதற்கான கடப்பாடு அதற்குக் கிடையாது). வங்கியானது கணக்கு வைத்திருப்பவருக்குப் படிநிலையொன்றைக் குறித்தொதுக்குமிடத்து, வங்கி எந்நேரத்திலும் காலத்துக்குக் காலமும், கணக்கு வைத்திருப்பவரின் வேண்டுகோளின்பேரில் அல்லது தனது தனித் தற்றுணிபின்படி, படிநிலையை வேறுபடுத்தலாம் அல்லது முழுமையாக மீளப்பெறலாம். கணக்கு வைத்திருப்பவரொருவருக்குப் படிநிலையொன்றைக் குறித்தொதுக்குதல் அல்லது கணக்கு வைத்திருப்பவரொருவரிடமிருந்து படிநிலையொன்றை மீளப்பெறுதல் அல்லது அவ்வாறு குறித்தொதுக்கப்பட்ட படிநிலையை வேறுபடுத்துதல், கணக்கு வைத்திருப்பவரின் வேண்டுகோளின் பேரிலாயினுஞ்சரி அல்லது வங்கியின் தனித் தற்றுணிபிலாயினுஞ்சரி, வங்கியின் இறுதி முடிவுக்கு அமைவாக, முன்னபே குறித்துரைக்கப்பட்டட நிந்தனைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.இந்த நிபந்தனைகள், வரையறையின்றி, வங்கியில் கணக்கு வைத்திருப்பவரினால் வைப்பிலிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதியை மற்றும்/அல்லது கணக்கு வைத்திருப்பவருக்குக் காலத்துக்குக் காலம் வங்கியினால் வழங்கப்பட்ட கடன் வசதிகளின் தொகையை பொறுத்திருக்கும் என்பதுடன், வங்கியின் முடிவின் பேரிலான மாற்றங்களுக்கு அமைவாகவும் இருக்கும். இற்றைப்படுத்தப்பட்ட நிபந்தனைகள் மற்றும் படிநிலைகள் சம்பந்தமான ஏனைய விபரங்களை வேண்டுகோளின் பேரில் வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ii. HSBC Premier கணக்குத் தொடர்பாக வங்கியினால் கிடைக்கக் கூடியனவாக்கப்படக்கூடிய சிறப்புக்கூறுகளும் விதிக்கப்படக்கூடிய கட்டணங்களும் விதிப்பனவுகளும், படிநிலைக்கேற்ப வேறுபடுத்தப்படலாம். அதே படிநிலையினுள், கணக்குவைத்திருப்பவர் அப் படிநிலைக்காக நிலவுகின்ற நிபந்தனைகளைத் தொடர்ந்தும் திருப்தி செய்கின்றாராவென்பதைக் குறிப்பீடு செய்வதன் மூலமும் அது வேறுபடுத்தப்படலாம். வங்கியானது, ஏதேனும் நேரத்திலும் காலத்துக்குக் காலமும் ஒவ்வொரு படிநிலையிலுமுள்ள சிறப்புக்கூறுகளை வேறுபடுத்துவதற்கு உரிமை கொண்டுள்ளது.

iii. ஒவ்வொரு படிநிலையையும் பேணும் வகையிலும் மற்றும்/அல்லது அந்தப் படிநிலையிலுள்ள சிறப்புக்கூறுகளைத் அனுபவிக்கும் வகையிலும் கணக்கு வைத்திருப்பவர் நிறைவேற்றவேண்டிய நிபந்தனைகளின் தொகுதியை மற்றும்/அல்லது நிபந்தனைகளை அப் படிநிலை கொண்டிருக்கலாம். ஒவ்வொரு சிறப்புக்கூறும், அச் சிறப்புக்கூறைக் கணக்கு வைத்திருப்பவர் பயன்படுத்தி அனுபவிப்பதை ஆளுகின்ற குறித்த சில நியதி நிபந்தனைகளையும் கொண்டிருக்கலாம். வாசகங்கள் 88(i) மற்றும் 88(ii) என்பவற்றுக்குப் பங்கமின்றி,

ஒரு படிநிலையின் குறித்தொதுக்குதலை அல்லது வேறுபடுத்துதலையடுத்து அப் படிநிலையைப் பேணுவதற்காக நிலவுகின்ற எல்லா நிபந்தனைகளும் மற்றும்/ அல்லது அப் படிநிலையிலுள்ள சிறப்புக்கூறுகளை அனுபவிப்பதற்கான நியதி நிபந்தனைகள் முழுமையாகத் திருப்தி செய்யப்படுவதனை மற்றும்/ அல்லது கடைப்பிடிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவது, கணக்கு வைத்திருப்பவரின் தனிப் பொறுப்பாதல் வேண்டும். எவ்வாறாயினும், ஒரு படிநிலை தொடர்பில் நிலவுகின்ற எல்லாக் கட்டளைக்கற்களையும் கணக்கு வைத்திருப்பவர் நிறைவேற்றுதல், அல்லது நிறைவேற்றத் தவறுதல் ஒரு படிநிலையைக் குறித்தொதுக்குவதில், வேறுபடுத்துவதில் அல்லது மீளப்பெறுவதில் வங்கியின் மேலோங்கி நிற்கின்ற உரிமையை எவ்வகையிலும் பாதிக்காது.

iv. ஒரு படிநிலையைக் குறித்தொதுக்குவதற்கு, வேறுபடுத்துவதற்கு அல்லது மீளப்பெறுவதற்கு வங்கி அதன் தற்றுணிபைப் பிரயோகிக்கின்றபோது, அது நியாயமானவையெனக் கருதும் வழிவகைகளைப் பயன்படுத்துவதுடன், அதுபற்றிக் கணக்கு வைத்திருப்பவருக்கும் அறிவிக்கும். கணக்கு வைத்திருப்பவர் அனுபவிக்கும் எல்லாச் சிறப்புக்கூறுகளும், வங்கி அதன் தனித் தற்றுணிபில் வேறு வகையாக முடிவுசெய்தாலொழிய, தன்னியக்கமாகவே வழங்கப்படும், முடிவுறுத்தப்படும் அல்லது வேறு வகையில் சீராக்கப்படும். அது சம்பந்தமான ஏதேனும் மேலதிகத் தகவலை வழங்க வேண்டிய கடப்பாடு வங்கிக்குக் கிடையாது.

v. ஒரு கணக்கு வைத்திருப்பவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட படிநிலை வேறுபடுத்தப்பட்டதனையடுத்து, இந்த நியதி நிபந்தனைகளின் பொருத்தமான ஏற்பாடுகளும் படிநிலை வேறுபடுத்தப்பட்டதன் விளைவாக முடிவுறுத்தப்பட்ட எவையேனும் சிறப்புக்கூறுகளின் பயன்பாட்டை ஆளுகின்ற வேறு நியதிநிபந்தனைகளும், அத்தகைய சிறப்புக்கூறுகள் தொடர்பில் கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து வங்கிக்கு வருமதியான எல்லாக் கடப்பாடுகளும் பொறுப்புக்களும் முழுமையாக மீளச்செலுத்தப்பட்டுத் திருப்தி செய்யப்படும்வரை கணக்கு வைத்திருப்பவரைத் தொடர்ந்தும் பிணித்தல் வேண்டும். இந்த நியதி நிபந்தனைகளின் பொருத்தமான சகல ஏற்பாடுகளும், படிநிலை வேறுபடுத்தப்பட்டதன் விளைவாகக் கணக்கு வைத்திருப்பவர் அனுபவிக்கக்கூடிய எவையேனும் புதிய அல்லது மேலதிகச் சிறப்புக்கூறுகளின் பயன்பாட்டை ஆளுகின்ற வேறு நியதி நிபந்தனைகளும், கணக்கு வைத்திருப்பவரைப் பிணிப்பனவாக உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

vi. கணக்கு வைத்திருப்பவருக்கு அல்லது கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து ஒரு படிநிலையின் ஏதேனும் குறித்தொதுக்கலின் அல்லது மீளப்பெறுதலின் விளைவாக அல்லது அவ்வாறு குறித்தொதுக்கப்பட்ட படிநிலையிலான ஏதேனும் வேறுபாட்டின் விளைவாகக் கணக்கு வைத்திருப்பவரினால் உறப்பட்ட ஏதேனும் நட்டத்துக்கு

அல்லது அவருக்கேற்பட்ட ஏதேனும் வசதியீனத்துக்கு வங்கியைப் பொறுப்பானதாக அல்லது பொறுப்புடையதாகக் கொள்ளமுடியாது. அது சம்பந்தமான எவையேனும் சிறப்புக்கூறுகளின் அளிப்பு, முடிவுறுத்துகை அல்லது சீர்செய்கை என்பவற்றின் விளைவாகக் கணக்கு வைத்திருப்பவரினால் உறப்பட்ட ஏதேனும் நட்டத்தையும் அல்லது அவருக்கேற்பட்ட ஏதேனும் வசதியீனமும் இதில் உள்ளடங்கும்.

vii. (பொருத்தமாயின்) கணக்கு வைத்திருப்பவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட படிநிலையை எடுத்துக்காட்டுவதற்காக கணக்கு வைத்திருப்பவருக்கு வங்கியினால் வழங்கப்பட்ட ஏதேனும் அட்டை அல்லது ஆளடையாளம், கணக்கு வைத்திருப்பவரின் படிநிலையை மட்டும் இனங்காண்பதனை வசதிப்படுத்துவதற்காகும். வெளிப்படையான பிழையைத் தவிர, வங்கிலுள்ள பதிவேடுகளே, எந்நேரத்திலும் கணக்கு வைத்திருப்பவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட படிநிலை பற்றிய முடிவான நிலைமையைத் தெரிவிக்கும்.

viii. ஒரு படிநிலையை மீளப்பெறுதல், வங்கி வேறு வகையாகக் குறித்துரைத்தாலொழிய, HSBC Premier கணக்கின் பயன்பாட்டை அல்லது தொழிற்பாட்டைத் தானாகப் பாதித்தலாகாது.

83.

2006ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பணம் தூய்தாக்கல் தடுப்புச் சட்டம் (PMLA), 2006 ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க, நிதிக் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடுதற் சட்டம் (FTRA) என்பவற்றின் ஏற்பாடுகள், அவற்றிற்கான திருத்தங்கள், அவற்றுடன் தொடர்புபட்ட வழிகாட்டுநெறிகள் மற்றும் பணிப்புக்கள், 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, இலங்கை வங்கித்தொழிற் சட்டம், திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்கமேற்கூறப்பட்ட வங்கித்தொழிற் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட பணிப்புக்களின் ஏற்பாடுகள் மற்றும் அத்தகைய சட்டத்தின் நியதிகளின்படி கைவிடப்பட்ட சொத்துக்கள் தொடர்பிலான வழிகாட்டுநெறிகள் மற்றும் பணிப்புரைகள் என்பவற்றிற்கு வங்கி இணங்கியொழுகுகின்றது என்பதை வாடிக்கையாளர் விளங்கிக் கொள்கின்றார்.

84.

மேலேயுள்ளவை தொடர்பாகத் தேவைப்படுத்தப்படக்கூடிய ஏற்பாடுகளுக்கும் இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றின் தொழிற்பாடுகள் தொடர்பான எல்லாச் சட்டங்களுக்கும் பணிப்புகளுக்கும் வழிகாட்டுநெறிகளுக்கும் வங்கி எல்லா வேளைகளிலும் இணங்கியொழுகுமென்பதை கணக்கு வைப்பாளர் ஏற்றுக்கொள்கிறார்.

85.

வங்கியானது, இந்த நியதி நிபந்தனைகளின் ஆங்கில, சிங்கள பிரதிகளை வங்கியின் வலைத்தளத்தில் (www.hsbc.lk) பார்க்கலாம். அவற்றின் அச்சிட்ட பிரதிகளை வங்கியின் எல்லா அலுவலகங்களிலும் மற்றும்/அல்லது கிளையலுவலகங்களிலும் கேட்டுப் பெறலாம். இந்த நியதி நிபந்தனைகளின் ஆங்கில, சிங்கள, தமிழ் உரைகளில் ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் ஆங்கில உரையே சரியானதாக மேலோங்கி நிற்கும் என்பதை வாடிக்கையாளர் ஏற்றுக்கொண்டு, அதற்கு உடன்படுகின்றார்.

## கூட்டுக் கணக்குகள் (JOINT ACCOUNTS)

86.

கணக்கு வைத்திருப்பவராக அமைகின்ற நபர்களுள் எவரேனும் மரணமடையும் பட்சத்தில், சொல்லப்பட்ட கூட்டுக் கணக்கில் வரவாக உள்ள பணம் உயிருடனிருக்கும் கணக்கு வைத்திருப்பவருக்கு அல்லது கணக்கு வைத்திருப்பவர்களுக்கு வழங்கப்படும். தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கேற்ப பணத்தை வழங்கியதற்காக எந்தவொரு கூட்டுக் கணக்கு வைத்திருப்பவரும் வங்கியைப் பொறுப்பாளியாக்க முடியாது.

கணக்கு வைத்திருப்பவர்களில் எவரேனும் ஒருவர் மரணமடைந்தமை பற்றி வங்கிக்கு அறிவித்தல் கிடைத்ததும், வங்கியானது ஏதேனும் கணக்கின் அல்லது கணக்குகளில் வரவாக உள்ள பணம் அல்லது வங்கியினால் வைத்திருக்கப்படும், பிணையங்கள், உறுதிகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய ஆதனங்கள் எல்லாவற்றையும் உயிருடன் இருப்பவருக்கு அல்லது இருப்பவர்களுக்குச் செலுத்துவதன் மூலம் அல்லது அவர்களுக்கு அல்லது அவர்களின் கட்டளைக்கு ஒப்படைப்பதன் மூலம் அதன் கடப்பாடுகளிலிருந்து முழுமையாக விடுவிக்கப்படுமென்பதற்கு நாம் ஒவ்வொருவரும் உடன்படுகிறோம். கணக்கின் மீது எவ்வாறாயினும் உறப்பட்ட மேலதிகப்பற்று அல்லது வேறு கடப்பாடுகள் என்பவற்றிற்குக் கூட்டுக் கணக்கு வைப்பாளர்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்பாதல் வேண்டும்.

குறிப்பிட்ட ஒரு கணக்குத் தொடர்பாக, கூட்டுக் கணக்கு வைத்திருப்பவர்களில் எவரேனும் ஒருவரினால் அல்லது பலரினால் (ஆனால் அனைவரும் அல்ல) ஒரு கணக்கு வைப்பாளரின் அதிகாரம் மாற்றப்படின் அல்லது இரத்துச்செய்யப்படின், வங்கியானது, அதன் தனித் தற்றுணிபின் பேரில், சொல்லப்பட்ட அக் கணக்கு அதன் பின்னர் எல்லாக் கூட்டுக் கணக்கு வைத்திருப்போரினாலும் கூட்டாகத் தொழிற்படுத்தப்பட வேண்டுமென தேவைப்படுத்தக்கூடும்.

## வாடிக்கையாளர் தகவல்களின் சேகரிப்பு, செயற்படுத்தல், பகிர்ந்துகொள்ளல் COLLECTION, PROCESSING AND SHARING OF CUSTOMER INFORMATION

### சேகரிப்பு (Collection)

87.

HSBCயும் HSBC குழுமத்தின் ஏனைய அங்கத்தவர்களும் வாடிக்கையாளர் தகவல்களை (வாடிக்கையாளர், வாடிக்கையாளரின் கொடுக்கல் வாங்கல்கள், வாடிக்கையாளர் பயன்படுத்தும் HSBC வங்கி வசதிகள் மற்றும் சேவைகள், வாடிக்கையாளர் HSBC உடன் கொண்டுள்ள உறவுகள் பற்றிய பொருத்தமான தகவல்களும் இதில் உள்ளடங்கும்) சேகரிக்க, பயன்படுத்த மற்றும் பகிர்ந்துகொள்ள முடியும். வாடிக்கையாளர் தகவல்கள் சம்பந்தப்பட்ட வாடிக்கையாளரிடமிருந் (அல்லது அவரின் சார்பில் செயற்படும் ஒருவரிடமிருந்து) கோரப்படலாம். அல்லது இத் தகவல்கள் HSBCயினால் அல்லது HSBCயின் சார்பில் அல்லது HSBC குழும அங்கத்தவர்களினால் வேறு இடங்களிலிருந்து (பகிரங்கமாகக் கிடைக்கும் தகவல்களும் உட்படும்) HSBCக்கு அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவருக்குக் கிடைக்கும் தகவல்களிலிருந்து உருவாக்கப்படலாம் அல்லது இணைத்துக்கொள்ளப்படலாம்.

### செயற்படுத்தல் (Processing)

88.

HSBC மற்றும்/அல்லது HSBC குழுமத்தின் அங்கத்தவர்கள் பின்வரும் நோக்கங்கள் தொடர்பில் வாடிக்கையாளர் தகவல்களை செயற்படுத்தவும் பரிமாற்றம் செய்யவும் வெளிப்படுத்தவும் முடியும்:

(a) சேவைகளை வழங்குவதற்காக மற்றும் வாடிக்கையாளரினால் கோரப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதற்காக.

(b) இணக்கப்பாட்டுக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக.

(c) நிதிசார் குற்ற இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக.

(d) வாடிக்கையாளரிடமிருந்து கிடைக்க வேண்டிய ஏதேனும் தொகைகளைச் சேகரிப்பதற்காக.

(e) கடன் தகுதியைப் பரிசோதித்து, கடன் சிபாரிசைப் பெறுவதற்காக அல்லது வழங்குவதற்காக.

(f) HSBCயின் அல்லது HSBC குழுமத்தின் உரிமைகளை அமுல் செய்வதற்காக அல்லது பாதுகாப்பதற்காக.

(g) HSBCயின் அல்லது HSBC குழுமத்தின் உள்ளகச் செயற்பாட்டுத் தேவைகளுக்காக (கடன் மற்றும் இடர் முகாமை, அமைப்பு அல்லது திட்டம் ஒன்றின் அபிவிருத்தி மற்றும் திட்டமிடல், காப்புறுதி, கணக்காய்வு மற்றும் நிர்வாக நோக்கங்களும் உள்ளடங்கும்).

(h) வாடிக்கையாளருடன் HSBC ஒட்டுமொத்த உறவுகளைப் பேணுவதற்காக (சந்தைப்படுத்தல் அல்லது நிதிச் சேவைகளின் ஊக்குவிப்பு அல்லது வாடிக்கையாளருக்கான தொடர்புடைய வங்கி வசதிகள், சந்தை ஆய்வு போன்றவை).

**பகிர்ந்துகொள்ளல் (Sharing)**

89.

HSBC (அதன் நோக்கங்களுக்கு அவசியமெனவும் பொருத்தமெனவும் கருதும்) வாடிக்கையாளர் தகவல்களை பின்வரும் பெறுநர்களுக்கு (அவர்களும் தமது நோக்கங்களுக்காக அத் தகவல்களைச் செயற்படுத்தவும் பரிமாற்றம் செய்யவும் வெளிப்படுத்தவும் முடியும்) அனுப்பவும் வெளிப்படுத்தவும் முடியும் என்பதை வாடிக்கையாளர் இச் சேவைகளைப் பயன்படுத்துவதன் மூலம் ஏற்றுக்கொள்கிறார்.

(a) HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவர்;

(b) எவரேனும் உப ஒப்பந்தகாரர்கள், முகவர்கள், சேவை வழங்குநர்கள். HSBC குழுமத்தின இணையாளிகள் (அவர்களின் ஊழியர்கள், பணிப்பாளர்கள் மற்றும் அதிகாரிகள்);

(c) வாடிக்கையாளரின் சார்பில் செயற்படுபவர்கள், கொடுப்பனவைப் பெறுபவர்கள், பயனடைபவர்கள், கணக்கு நியமத்தர்கள், இடையீட்டாளர்கள், பிரதிநிதித்துவ மற்றும் முகவர் வங்கிகள், கிளியரிங் நிலையங்கள். கிளியரிங் அல்லது தீர்ப்பனவு அமைப்புக்கள், சந்தைப் பங்காளிகள், எதிர்நீரோட்ட இடைநிறுத்தல் முகவரகங்கள்,

பரிமாற்ற அல்லது வர்த்தக வைப்பகங்கள், பங்குப் பரிவர்த்தனைகள், வாடிக்கையாளருக்கு அக்கறையுள்ள பிணையங்களை கொண்டிருக்கும் கம்பனிகள் (வாடிக்கையாளருக்காக HSBCயினால் பிணையங்கள் வைக்கப்பட்டிருக்கும் இடங்கள்);

(d) சேவைகளில் அல்லது சேவைகள் அக்கறையைப் பெறும் அல்லது இடர் பொறுப்பை ஏற்கும் தரப்பினர்;

(e) கடன் சிபாரிசுகளைப் பெறுவதற்காக அல்லது வழங்குவதற்காக வேறு நிதி நிறுவனங்கள், கடன் சிபாரிசு நிலையங்கள் அல்லது கொடுகடன் தகவல் பணியகம் மற்றும் கணக்காய்வாளர்கள்/வரி ஆலோசகர்கள்;

(f) வாடிக்கையாளருக்கு சொத்து முகாமைச் சேவைகளை வழங்கும் எவரேனும் மூன்றாம் தரப்பு நிதி முகாமையாளர்;

(g) HSBCயினால் அறிமுகப்படுத்தல்கள் அல்லது சிபாரிசுகள் வழங்கப்படும் அறிமுகப்படுத்தும் தரகர்;

(h) HSBCயின் ஏதேனும் வியாபார இடமாற்றம், விற்பனை, ஒருங்கிணைப்பு அல்லது சுவீகரிப்பு தொடர்பில் சேவைகள் வழங்கப்படும் நியாயாதிக்கப் பிரதேசத்தில் அமுலிலுள்ள தரவுப் பாதுகாப்பு மட்டத்திலான தரவுப் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டிராத நியாயாதிக்கப் பிரதேசங்கள் உட்பட அனைத்து இடங்களிலும் மேற்குறிப்பிட்டவை செல்லுபடியாகும்.

**வாடிக்கையாளரின் கடப்பாடுகள் (Customer Obligations)**

90.

காலத்திற்குக் காலமும் HSBC அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவர் விடுத்த வேண்டுகோளின் பேரிலும் HSBCக்கு அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவருக்கு வழங்கப்பட்ட வாடிக்கையாளர் தகவல்களில் ஏதேனும் மாற்றம் ஏற்படின், அதனை உடனடியாக, அல்லது எவ்வாறாயினும் 30 தினங்களுக்குள், எழுத்து மூலம் HSBCக்கு அறிவிக்க வாடிக்கையாளர் இணங்குகின்றார்.

91.

வாடிக்கையாளர் இணைக்கப்பட்ட ஒரு நபரின்/நபர்களின் தகவல்களை (தனிப்பட்ட விபரங்கள் அல்லது வரித் தகவல்களும் உட்படும்) HSBCக்கு அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவருக்கு வழங்குவதற்கு முன், அத்தகைய நபருக்கு/நபர்களுக்கு அது பற்றி அறிவித்து, இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு அத் தகவல்களின் செயற்படுத்தல், வெளிப்படுத்தல் மற்றும் பரிமாற்றத்திற்கான ஒப்புதல் பெறப்பட்டுள்ளதை ஊர்ஜிதம் செய்ய வேண்டும்.

இணைக்கப்பட்ட நபர்கள் தமது தனிப்பட்ட தகவல்களைப் பரிசீலிக்கவும், வேண்டுமானால் திருத்தம் செய்யவும் உரிமை கொண்டுள்ளார்கள் என்பதை வாடிக்கையாளர் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

92.

பின்வரும் சநதர்ப்பங்களில்:

- HSBC நியாயமான முறையில் கோரும் வாடிக்கையாளர் தகவல்களை வழங்க ஒரு வாடிக்கையாளர் தவறினால், அல்லது.
- குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக வாடிக்கையாளர் தகவல்களைச் செயற்படுத்த, பரிமாற்றம் செய்ய அல்லது வெளிப்படுத்த HSBCக்கு தேவைப்படும் ஏதேனும் சம்மதத்தை வாடிக்கையாளர் இடைநிறுத்தினால் அல்லது வாபஸ் பெற்றால், அல்லது.
- நிதிசார் குற்றம் இழைக்கப்படும் சாத்தியம் உள்ளதென HSBC அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவர் சந்தேகித்தால் அல்லது நிதிசார் குற்ற இடருக்கான வாய்ப்பை ஒரு வாடிக்கையாளர் HSBC குழுமத்தின் அங்கத்தவர் ஒருவருக்குச் சமர்ப்பித்தால்.

HSBC ஆனது:

(a) வாடிக்கையாளருக்குப் புதிய சேவையை வழங்க அல்லது தற்போதய சேவைகளில் அனைத்தையும் அல்லது அதிலொரு பகுதியைத் தொடர்ந்து வழங்க முடியாதிருக்கும். வாடிக்கையாளருடன் தனது வியாபார உறவுகளை முடிவுறுத்தும் உரிமையும் அதற்கு உண்டு.

(b) கடப்பாடுகளின் அனுசரிப்பை உறுதிப்படுத்த HSBCக்கு அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவருக்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்கும். மற்றும்/அல்லது.

(c) வாடிக்கையாளரின் கணக்கை (கணக்குகளை) தடைசெய்ய, இடம்மாற்ற அல்லது மூடிவிட நடவடிக்கை எடுக்கும்.

**தரவுகளின் பாதுகாப்பு (Data Protection)**

93.

வாடிக்கையாளர் தகவல்கள் தரவுப் பாதுகாப்பு சட்டத்திற்கு அமைவாக உள்நாட்டு நியாயாதிக்கத்தில் செயற்படுத்தப்பட்டாலும் வெளிநாட்டில் செயற்படுத்தப்பட்டாலும், HSBC குழுமத்தின் அங்கத்துவ நிறுவனங்கள், அவற்றின் ஊழியர்கள் மற்றும் மூன்றாம் தரப்பினர் கடைப்பிடிக்க வேண்டிய கண்டிப்பான இரகசிய குறியீடு மற்றும் பாதுகாப்பு ஏற்பாட்டின் மூலம் பாதுகாக்கப்படும்.

**நிதிசார் குற்ற இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள (Financial Crime Risk Management Activity)**

94.

நிதிசார் குற்றங்களின் கண்டுபிடிப்பு, விசாரணை மற்றும் தடுப்பு தொடர்பான சட்டங்கள், பிரமாணங்கள். தடையுத்தரவுகள், சர்வதேச வழிகாட்டுதல்கள், HSBC குழுமத்தின் உள்ளகக் கொள்கைகளும் நடைமுறைகளும், மற்றும்/அல்லது ஏதேனும் அதிகார சபைகளின் கோரிக்கைகள் என்பவற்றிற்குப் பணிந்தொழுகுவதற்காக HSBCயும் HSBC குழுமத்தின் அங்கத்தவர்களும் பொருத்தமெனக் கருதும் ஏதேனும் நடவடிக்கைகளை (அவற்றின் தனி மற்றும் பூரண சுயதீர்மானத்திற்கேற்ப) எடுக்க வேண்டும் என்பதுடன் எடுக்கவும் முடியும் ("நிதிசார் குற்ற இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள்").

95.

அத்தகைய நடவடிக்கைகளுள்

(a) வாடிக்கையாளரினால் அல்லது அவரின் சார்பில் அனுப்பப்படும் அல்லது பெறப்படும் ஏதேனும் அறிவுறுத்தல், தொடர்பாடல், திரும்பப் பெறும் வேண்டுகோள், சேவைகளுக்கான விண்ணப்பம் அல்லது ஏதேனும் கொடுப்பனவைப் பரிசோதித்தல், இடைமறித்தல் மற்றும் விசாரித்தல்,

(b) நிதிகளின் மூலவிடம் அல்லது அவற்றின் உத்தேச பெறுநர்கள் பற்றி விசாரித்தல்,

(c) வாடிக்கையாளர் தகவல்களை HSBC குழுமத்திடமிருக்கும் ஏனைய தொடர்புடைய தகவல்களுடன் இணைத்தல், மற்றும்/அல்லது,

(d) சம்பந்தப்பட்ட நபர் அல்லது நிறுவனத்தின் மீது தடையுத்தரவு உள்ளதா என்பதை அறிவதற்காக அல்லது வாடிக்கையாளரின் அடையாளம் மற்றும் அந்தஸ்தை ஊர்ஜிதம் செய்வதற்காக மேலும் விசாரணைகளை மேற்கொள்ளுதல் என்பன உள்ளடங்கும்.

96.

நிதிசார் குற்ற இடர் முகாமை நடவடிக்கைகளை HSBC மேற்கொள்வதால் ஏதேனும் கொடுப்பனவு செய்யப்படுதல் அல்லது கிளியரிங் செய்யப்படுதல், வாடிக்கையாளரின் அறிவுறுத்தல்கள் அல்லது சேவைகளுக்கான விண்ணப்பங்கள் செயற்படுத்தப்படுதல் அல்லது அல்லது சேவைகளின் முழுமையான அல்லது பகுதியான வழங்கல் என்பன அபூர்வமான சந்தர்ப்பங்களில் HSBCயினால் தாமதிக்கப்படலாம், தடைசெய்யப்படலாம் அல்லது மறுக்கப்படலாம். நிதிசார் குற்ற இடர் முகாமை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் வாடிக்கையாளருக்கு அல்லது மூன்றாம் தரப்பிற்கு முழுமையாக அல்லது பகுதியளவில் ஏதேனும் இழப்பு/இழப்புகள் ஏற்படுமாயின், அது தொடர்பில், சட்டம் அனுமதிக்கு அளவிற்கு, HSBC வங்கியோ அல்லது HSBC குழுமத்தின் அங்கத்தவரோ வாடிக்கையாளருக்கு அல்லது ஏதேனும் மூன்றாம் தரப்பிற்கு பொறுப்பாளியாகத் தேவையில்லை.

**வரி இணக்கப்பாடு (Tax Compliance)**

97.

வரிக் கடப்பாடுகள் எழுகின்ற சகல நியாயாதிக்கப் பிரதேசங்களிலும் எம்மால் அல்லது HSBC குழுமத்தின் அங்கத்தவர்களினால் வழங்கப்படும் கணக்கின் (கணக்குகளின்) அல்லது சேவைகளின் ஆரம்பம் மற்றும் பயன்படுத்தல் தொடர்பிலும் உங்கள் வரிக் கடப்பாடுகளை புரிந்துகொள்வதும் அவற்றிற்கு இணங்கி நடப்பதும் முழுக்க முழுக்க உங்கள் பொறுப்பாகும் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்கள் (வரிகளைச் செலுத்துதல், வருமான வரிப் படிவங்கள் மற்றும் பொருத்தமான வரிகள் தொடர்பாகத் தேவைப்படுத்தப்படும் ஆவணங்களை நிரப்புதல் என்பனவும் இக் கடப்பாடுகளில் உள்ளடங்கும்). ஒவ்வொரு இணைக்கப்பட்ட நபரும், ஓர் இணைக்கப்பட்ட நபர் என்ற முறையில் (அவரது தனிப்பட்ட முறையில் அல்ல) தனது விடயத்தில் இதே ஒப்புதலை வழங்க வேண்டும். இணைக்கப்பட்ட நபரின் அல்லது உங்களின் வாழிட நாடு, வசிப்பிடம்,

பிராஜாவுரிமை அல்லது கூட்டிணைப்பு என்பவற்றைக் கருத்திற்கெடுக்காத, பிரதேச வரையறையற்ற வரிச் சட்டங்களைச் சில நாடுகள் கொண்டிருக்கலாம். நாமோ அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவரோ வரி ஆலோசனைகளை வழங்குவதில்லை. நீங்கள் சுயாதீன தரப்பினரிடமிருந்து சட்ட மற்றும் வரி ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம். எந்தவொரு நியாயாதிக்கப் பிரதேசத்திலாவது ஏற்படக்கூடிய உங்கள் வரிக் கடப்பாடுகள் தொடர்பாக எமக்கோ அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவருக்கோ எவ்வித பொறுப்பும் கிடையாது. குறிப்பாக, HSBC இனால் அல்லது HSBC குழுமத்தின் அங்கத்தவர்களினால் வழங்கப்படும் கணக்கின் (கணக்குகளின்) அல்லது சேவைகளின் ஆரம்பம் மற்றும் பயன்படுத்தல் தொடர்பில் ஏற்படுகின்ற கடப்பாடுகளும் இவற்றில் அடங்கும்.

## ஏனைய ஏற்பாடுகள் (OTHER PROVISIONS)

98.

இந்த விதிகளுக்கும் ஏதேனும் வேறு சேவை, வங்கி வசதி வியாபார உறவு, கணக்கு அல்லது வாடிக்கையாளருக்கும் HSBCக்கும் இடையிலான ஒப்பந்தம் தொடர்பான விதிகளுக்குமிடையே கருத்து வேறுபாடு அல்லது முரண்பாடு காணப்படுமாயின், இந்த விதிகளே பொருத்தமானதாக மேலாதிக்கம் செலுத்தும். வாடிக்கையாளர் தகவல்கள் தொடர்பில் வாடிக்கையாளரிடமிருந்து ஏற்களவே பெறப்பட்ட ஏதேனும் சம்மதங்கள், அதிகாரமளிப்புக்கள், இனால் கோரப்பட்ட விலக்களிப்புக்கள் மற்றும் அனுமதிகள் யாவும், பொருத்தமான உள்நாட்டுச் சட்டம் அனுமதிக்கும் அளவிற்கு பூரணமாக நடைமுறையிலிருக்கும்.

99.

இந்த விதிகளின் ஏற்பாடுகள் அனைத்தும் அல்லது அவற்றின் ஏதேனுமொரு பகுதி ஏதேனுமொரு நியாயாதிக்கப் பிரதேசத்தின் சட்டத்தின் கீழ் சட்டவிரோதமானதாக, செல்லுபடி அற்றதாக அல்லது நடைமுறைப்படுத்த முடியாததாக இருந்தாலும், வேறேதும் நியாயாதிக்கப் பிரதேசத்தில் அத்தகைய ஏற்பாடுகளிதும் அதே நியாயாதிக்கப் பிரதேசத்தில் எஞ்சியுள்ள ஏற்பாடுகளினதும் சட்டவலு, செல்லுபடியாகும் தன்மை, நடைமுறைப்படுத்தும் தன்மை என்பன பாதிக்கப்பட மாட்டா.

## முடிவுறுத்தலின் பின்பும் நிலைத்திருக்கும் தன்மை (SURVIVAL UPON TERMINATION)

100.

வாடிக்கையாளருக்கான ஏதேனும் சேவைகளின் வழங்கல்.ள HSBC அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவா் முடிவுறுத்தினாலும் வாடிக்கையாளரின் ஏதேனும் கணக்கு மூடப்பட்டாலும் அத்தகைய முடிவுறுத்துகையைப் பொருட்படுத்தாமல், இந்த விதிகள் தொடா்ந்து செல்லுபடியாகும்.

## திட்டத்தை முடிவுறுத்துதல் (TERMINATION OF THE PACKAGE)

101.

வங்கி அல்லது கணக்கு வைத்திருப்பவர், மற்றைய தரப்பிற்கு அதற்கான அறிவித்தலை எழுத்தில் வழங்குவதன் மூலம் திட்டத்தின் பயன்பாட்டையும் வங்கியுடனான உறவுமுறையையும் முடிவுறுத்தலாம். இரு வழிகளிலும், கணக்கு வைத்திருப்பவர் தாமதமோ அல்லது தொடர்ந்து மேற்கொள்ளப்படும் கோரிக்கையோ இன்றி,

(a) வங்கியினால் கணக்கு வைப்பாளருக்கு வழங்கப்பட்ட சகல அட்டைகளையும் காசோலைப் புத்தகங்களையும் மீளளிக்க வேண்டும்.

(b) மேலதிகப்பற்று வசதிகள், கடன் அட்டை(கள்) மற்றும் வேறு கடன் வசதிகள் உட்பட (ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல்) அவற்றின் கீழான தொடர்புபட்ட எல்லா விதிப்பனவுகளுடன் சேர்த்து (கொடுப்பனவுக்காக வங்கிக்கு அப்போது முன்வைக்கப்படாத எவையேனும் இனங்களின் தொகையுட்பட) வங்கிக்கு நிலுவையாகவுள்ள முழுத்தொகையையும் வங்கிக்குச் செலுத்த வேண்டும். அத்துடன், கணக்கு வைத்திருப்பவர் அத்தகைய முடிவுறுத்துகையைப் பொருட்படுத்தாது அதற்குத் தொடர்ந்தும் முழுப் பொறுப்புடையவராக இருத்தல் வேண்டும். கணக்கு வைத்திருப்பவர் மரணமடையும் அல்லது வங்குரோத்துநிலைக்கு உள்ளாகும் பட்சத்தில், மேற்குறிப்பிட்டவற்றின் பொதுமையினால் வரையறுக்கப்படாமல், அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் (மேலதிக கோரிக்கை எதுவுமில்லாமலே) வருமதியாகவும் உடனடியாகச் செலுத்தப்பட வேண்டியனவாகவும் இருக்கும்.

102.

திட்டத்தின் பயன்பாடு வங்கியினால் அல்லது கணக்கு வைத்திருப்பவரினால் முடிவுறுத்தப்பட்டு, திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நன்மைகள் இல்லாமல் கணக்கு வைத்திருப்பவர் தனது கணக்கை ஒரு சாதாரணக் கணக்காகப் பேணும் பட்சத்தில், வங்கியுடன் பேணப்படும் அத்தகைய ஒவ்வொரு கணக்கிற்கும் பொது நியதி நிபந்தனைகளினால் பிணிக்கப்படுவதற்குக் கணக்கு வைத்திருப்பவர் உடன்படுகின்றார்.

## அறவீடுகள் (CHARGES)

103.

திட்டம் தொடர்பாக வழங்கப்பட்ட ஏதேனும் சேவைக்காக அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கைக்காக கணக்கு வைத்திருப்பவர் வங்கிக்கு எல்லா நிருவாக, கையாளுகை, சேவை, நிதி அல்லது வேறு விதிப்பனவுகளையும் செலுத்த வேண்டும். அத்தகைய விதிப்பனவுகள் அனைத்தும், அந்நோக்கத்துக்காக வங்கி காலத்துக்குக் காலம் விதித்துரைக்கப்படும் வீதங்களில் அறவிடப்படும் அத்துடன், அத்தகைய எவையேனும் விதிப்பனவுகள் கணக்கு வைத்திருப்பவரின் பேரில் பற்றுவைக்கப்படலாம். எல்லா வட்டி வீதங்களும், நிருவாக, சேவை, நிதி மற்றும் வேறு விதிப்பனவுகளும் முன்னறிவித்தலின்றி மாற்றப்படக்கூடும்.

## ஆளுகைச் சட்டம் (GOVERNING LAW)

104.

இந்த நியதி நிபந்தனைகள் இலங்கையின் சட்டங்களுக்கிணங்கப் பொருள்கொள்ளப்பட்டு அவற்றினால் ஆளுகை செய்யப்படும். சகல பிணக்குகளும், வேறேதும் நீதிமன்றம் சம நியாயாதிக்கம் கொண்டிருப்பதைப் பொருட்படுத்தாது, இலங்கை நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்துக்கு உட்பட்டவையாக இருக்கும்.

**TNCPP 03/2023 (T)**